விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 31 கதிர் 83 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 05, புதன்கிழமை 17.02.2016




## மன்னார் வளைகுடாவில் மீன்பிடித் தடை

கொழும்பு, பெப். 17
கச்சதீவு தேவாலயத் திருவிழாவை முன்னிட்டு பாக்கு நீரிணை மற்றும் மன்னார் பக். 27

முச்சந்தி முரளி



அப்ப அடுத்த தடவையும் ஐயா விசாரணைக்கு வருவார் போல...

# ஐ.நா. பரிந்துரையை மைத்திரி உதாசீனம்

### பரணகம ஆணைக்குழுவை கலைக்காது மேலும் மூன்று மாதங்கள் கால நீடிப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 17
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஒரு வார காலத்திினுள்ளேயே, ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பரிந்துரையை உதாசீனப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவைக் கலைக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பக். 29

## எனது நியமனத்தை மக்கள் ஏற்றுள்ளனர்

### வடக்கு ஆளுநர் பெருமிதம்



கொழும்பு, பெப்.17
வடக்கு மக்கள் எனது நியமனத்தை ஏற்றுக்கொண்டுள்ளதால், ஆளுநராகக் கடமையாற்றுவது எனக்குச் சுலபமாக இருக்கும். இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணத்தின் புதிய பக். 27

## மகிந்த அரசினால் இந்தியாவை திருப்திப்படுத்த முடியவில்லை

### தேர்தல் தோல்விக்கு அதுவே காரணம் என்கிறார் கோத்தா



கொழும்பு, பெப். 17
இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சீன முதலீடுகள் தொடர்பில் இந்தியாவுக்குச் சந்தேகம் இருந்தது. இந்தியாவைத் திருப்திப்படுத்தும் விதத்தில் எமது வெளிவிவகாரக் கொள்கையை எம்மால் அமைக்க முடியவில்லை. இதுவே மகிந்த ராஜபக்சவின் தேர்தல் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது.
இவ்வாறு மகிந்தவின் சகோதரரும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். பக். 26

## யாழில் அதிகளவானோர் புதிய அரசமைப்புக்கு கருத்து

யாழ்ப்பாணம், பெப். 17
வடக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில், யாழ்.மாவட்டத்தில் அதிகளவிலானோர், புதிய அரசமைப்புக்கான தங்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளதுடன், பல்வேறு தரப்பிலிருந்தும் பக். 27

## நல்லிணக்கப் பொறிமுறை; அமெரிக்காவுக்கு விளக்கம்

### நேரில் செல்கிறார் மங்கள சமரவீர

கொழும்பு, பெப். 17
இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்காக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அடுத்த வாரம் அமெரிக்காவுக்குப் பக். 26

## குடாநாட்டு வான் பரப்பில் போர் விமானம்

யாழ்ப்பாணம், பெப். 17
திடீரெனப் போர் விமானம் ஒன்று குடாநாட்டு வான் பரப்பில் இரைச்சலுடன் பறந்ததால் மக்கள் பீதியடைந்தனர். இருப்பினும் சில நிமி பக். 26

## மைத்திரி-மகிந்த மோதல் உக்கிரம்

### யோசிதவின் கைதை அடுத்து

கொழும்பு, பெப். 17
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் மூண்டிருந்த பக். 29

## காற்றுக் கூட உட்புகாத அறையில் எனது மகன்

### வருந்துகின்றார் மகிந்த

கொழும்பு, பெப். 17
சிறைச்சாலையில் காற்றுக் கூடப் புக முடியாத விசேட அறையில்தான் எனது மகன் அடைத்து வைக்கப்பட்டுள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித் பக். 26



## யூத நினைவுத் தூபிகளை பார்வையிட்டார் மைத்திரி

கொழும்பு, பெப். 17
ஜேர்மனிக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால, இரண்டாம் உலகப் போரின் போது உயிரிழந்த யூதர்களை நினைவுகூரும்வகையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளைப் பக். 29

## நல்லாட்சியை முறியடிக்க ஒருபோதும் இடமளியோம்

### பிரதமர் ரணில் நேற்றுச் சூளுரை



கொழும்பு, பெப். 17
எமது பயணத்தை முறியடிக்க எவருக்கும் இடமளிக்கமாட்டோம். பிரதிபலன் ஒன்றை எதிர்பார்த்துத் தான் இரு கட்சிகள் இணைந்த ஆட்சிக்கு மக்கள் ஆதரவு வழங்கினர். அதில் குழி தோண்ட வேண் பக். 29




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் இடம்பெயர்ந்தோருக்கு மீண்டும் உலர் உணவு விநியோகம்

## ஏற்பாடுகள் நடைபெறுகின்றன எனத் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 17

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்கின்ற குடும்பங்களுக்கு மீண்டும் உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான அமைச்சரவைப் பத்திரம், மீள் குடியேற்ற அமைச்சால் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக வலி.வடக்கிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசால் உலர் உணவு நிவாரணம் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்தது. 2011 ஆம் ஆண்டு மே மாதம் மாவிட்டபுரத்தில் சில பகுதிகள் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த நிவாரணம் நிறுத்தப்பட்டது.

வலி.வடக்கிலிருந்த இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீளக் குடியமர்த்தப்படாமல், நலன்புரி நிலையங்களிலும் – உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்த நிலையிலேயே நிவாரணம் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிவாரணத்தை மீளவும் வழங்க வேண்டும் என்று வலி.வடக்கு மக்கள் சார்பில் செயற்பட்டு வந்த அமைப்புக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைத்து வந்தன.

அத்துடன் மக்கள் பிரதிநிதிகளாலும் இந்தக் கோரிக்கை தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் தெரிவிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் நிவாரணம் வழங்குவதற்கு முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது மாவட்டச் செயலகத்தில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் மீளவும் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. உலர் உணவு நிவாரணத்தைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களின் விவரங்கள் கடந்த டிசெம்பர் மாதம் பிரதேச செயலகங்களினால் திரட்டப்பட்டு மீள்குடியேற்ற அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சு அதனடிப்படையில் அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி கிடைக்கப் பெற்ற பின்னர், இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் என்று தெரியவருகின்றது. (ற-5)

# பழிவாங்கும் செயற்பாட்டை நிறுத்துமாறு வவு. ப.நோ.கூ.ச. பணியாளர் போராட்டம்

## செய்த மோசடியை மறைக்கவே போராட்டம் நடத்துகின்றனர் என்கிறார் முகாமையாளர்

வவுனியா.பெப்.17

வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பழிவாங்கும் செயற்பாட்டுக்கு முடிவு கிடைக்கும் வரை சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்து ப.நோ. கூ. சங்கத்தின் பணியாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர். வவுனியா நெடுங்கேணி பிரதான வீதியில் குறித்த போராட்டம் ஆரம்பமானது.

அதேவேளை பணியாளர்கள் செய்த காசோலை மோசடியை மூடி மறைக்கவே இந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என பதிலளித்தார் வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கப் பொது முகாமையாளர்.

வவுனியா வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினுடைய முகாமைத்துவத்தினர் தமது பதவியை தக்கவைப்பதற்காக பல வருடங்களாக பணியாற்றிய பணியாளர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திப் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் சங்கச் சொத்துக்களை ஈடு வைத்து வேறு தொழில் முயற்சியிலும் ஈடுபடுகின்றனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது குறித்து அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும், அதற்கான தீர்வு கிடைக்காததால் அனைவரும் இணைந்துபோராட்டத்தை முன்னெடுக்கின்றோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனுடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கமும் கலந்து கொண்டிருந்தார்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் இது தொடர்பாகக் கேட்ட போது, வடமாகாண சபையுடன் இணைந்து நாங்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக விசாரித்து நியாயத்தை வழங்க வேண்டும்.

இவர்களின் பிரச்சினை தொடர்பாக பொதுநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொறுப்பான அமைச்சருடனும் பேசி எல்லோரும் இணைந்து தீர்வைப் பெற்றுக்கொடுப்போம். - என்றார்.

பணியாளர்களுடைய குறித்த குற்றச்சாட்டு தொடர்பாகச் சங்க முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

சங்கத்தின் மூன்று காசோலைகள் மோசடி செய்த பணியாளர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளேன். அந்த மோசடியை மூடி மறைப்பதற்காகவே பணியாளர்கள் இந்த உணவு தவிர்ப்பை மேற்கொள்கின்றனர். இவர்கள் இவ்வாறு உணவு தவிர்ப்பில் இருப்பது தொடர்பாக எனக்கு தெரியப்படுத்தவில்லை. அவர்களுக்கான விடுமுறையும் என்னிடம் நேற்று (நேற்று முன்தினம்) கோரப்படவில்லை.- என்று பதிலளித்தார்.

(ற-ஜ-21,402)

# சிறுவர் இல்லத் தீ விபத்தில் சந்தேகம்

கிளிநொச்சி பெப்.17

கிளிநொச்சியிலுள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்துக்குள் யாரும் உட்செல்ல முடியாத நிலை இருக்கும்போது, அங்கு தீ விபத்து ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இல்லத்தின் சமையல்காரர்கள் தங்கும் அறையினுள் மர்மமான முறையில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த ஆளுநர் சபையால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தீ விபத்து திட்டமிட்ட செயலா? என்ற கோணத்தில் விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,21)

# கர்ப்பவதிகள், பாலூட்டுவோர் குருதிச் சோகையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.17

கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டுவோர் குருதிச் சோகை நோய்க்கு உள்ளாகி வருகின்றமை அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஊட்டச் சத்துமிக்க காய்கறி வகைகள், பச்சை இலைக்கறி வகைகள் மற்றும் இறைச்சி, மீன், பழவகைகளைத் தினமும் உட்கொள்ள வேண்டும். – இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பீ.ஜீ.மகிபால சுற்றறிக்கை மூலமாகச் சுகாதார திணைக்கள பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தாய்மாருக்கு குறித்த நோய் நிலைமைகள் ஏற்படுவதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகிறது. அதனால் அவற்றைத் தடுக்க உரிய விழிப்புணர்வுகளை வழங்குவதுடன் ஊட்டச்சத்துமிக்க காய்கறி வகைகள், பச்சை இலைக்கறி வகைகள் மற்றும் இறைச்சி, மீன் பழவகைள் போன்றவற்றைத் தினமும் உட்கொள்வதை ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் இரும்புச்சத்து , போலிக் அமிலம் கலந்த மாத்திரைகளை வழங்குமாறும் இவை இல்லாத பட்சத்தில் ஈடு செய்யக்கூடிய மாத்திரைகளை வழங்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் ஆறு மாதங்கள் தொடங்கி பிரசவம் ஆன பின்னரான ஆறு மாதங்கள் வரையிலும் குருதிச் சோகையால் பாதிக்கப்பட்டவர்களை தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்குவதுடன், இந்தக் காலப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சென்று சிகிச்சை பெறுவதை கண்காணிக்க வேண்டும்.

சிறிதளவான குருதிச்சோகை , மிதமான குருதிச் சோகை, தீவிரமான குருதிச் சோகை காணப்படுவதால் அதற்கேற்ற வகையில் சிகிச்சை வழங்கவேண்டும்.- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4,9)

# வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கேள்வி கோரலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

## மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 17

வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் கீழ் வரும் வைத்தியசாலைகள், அலுவலகங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக வடமாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் கோரப்பட்ட கேள்விப் பத்திரத்துக்கு எதிரான வழக்கை யாழ். மேல்நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

குறித்த கேள்விப்பத்திரக்கோரலுக்காக விண்ணப்பம் செய்திருந்த பாதுகாப்புச் சேவை நிறுவனம் ஒன்று, தனக்கு வர வேண்டிய கேள்விப்பத்திரக்கோரலை கவனத்தில் எடுக்காமல், பாதுகாப்புச்சேவை வழங்கும் வேறொரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்று குற்றஞ் சாட்டியுள்ளதுடன், இந்தக் கேள்விப் பத்திரம் தொடர்பாக வட மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் எடுத்த தீர்மானம் சட்ட வலுவற்றது, அது சட்டத்திற்கு முரணானது, நீதிப் பிறழ்வை ஏற்படுத்தியுள்ளது. எனவே அதனை இடைநிறுத்த வேண்டும். அதனை ரத்துச் செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும், அந்தக் கேள்விப்பத்திரம் ஊடான பாதுகாப்புச் சேவையை தமது நிறுவனத்துக்கு வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும் தனது மனுவில் கோரியிருந்தது.

வழக்கில் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சர், அந்த அமைச்சின் செயலாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் விசாரணையின் முடிவில் தீர்ப்பைத் தெரிவித்தார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:

கேள்விப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களைக் கோரி, அந்த விண்ணப்பங்களில் இருந்து சரியானவற்றைத் தெரிவு செய்வதென்பது, ஒரு நிர்வாகச் செயற்பாடாகும். அதில் தீய எண்ணத்துடன் செயற்பட்டிருத்தல், சட்ட வரம்பை மீறிச் செயற்பட்டிருத்தல் அல்லது அங்கு அதிகார துஷ்பிரயோகம் செய்திருத்தல் ஆகிய மூன்று காரணங்களின் அடிப்படையிலேயே, அந்த நிர்வாகச் செயற்பாட்டை நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்த முடியும்.

இந்த மூன்று காரணங்கள் இல்லாவிட்டால், நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது நிர்வாகம் சம்பந்தப்பட்ட தீர்மானங்களில் மேல் நீதிமன்றம் தலையீடு செய்யமாட்டாது.

இந்த வழக்கில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மனுதாரருக்கு அந்த பாதுகாப்புச் சேவைக்கான பொறுப்பு கிடைக்கக் கூடாது என்ற தீய எண்ணத்தைக் கொண்டு செயற்பட்டிருந்தார்கள் என்பதை மனுதாரர் நிரூபிக்கத் தவறிவிட்டார். இந்த எதிர் மனுதாரர்கள் கேள்விப்பத்திரம் தொடர்பான தெரிவில், என்னென்ன வகையில் அதிகார எல்லையை மீறிச் செயற்பட்டிருந்தார்கள் என்பதையோ அல்லது அவர்கள் எந்தெந்த வகைகளில் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையோ மனுதாரர் நிரூபிக்கத் தவறிவிட்டார்.

எனவே, தேவையற்ற விதத்தில் வடமாகாண சபையின் செயற்பாடுகளில் யாழ். மேல் நீதிமன்றம் தலையிட முடியாது. அவர்கள் செய்யும் அனைத்துச் செயற்பாடுகளையும் நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்திக்கொண்டிருக்க முடியாது.

மாகாண சபையைச் சேர்ந்தவர்கள் அதிகார அத்துமீறல்கள், அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றைப் புரிந்து ஒரு முடிவெடுத்துள்ளார்கள் எனக்கருதினால், அவர்களுக்கு எதிராக ஆணை வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்று மாகாண சபைகளை உருவாக்கிய 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஒரு பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரம் தொடர்பாக எடுக்கப்படுகின்ற தீர்மானமானது, மாகாண சபையின் நிர்வாக நிகழ்வுகளுடன் தொடர்புடையது. அது மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு உட்பட்டது. இந்த வழக்கில் மனுதாரருக்குக் கிடைக்க வேண்டிய தெரிவை இல்லாமல் செய்து இன்னுமொருவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மனுதாரர் காண்பிக்கத் தவறிவிட்டார்.

மாகாண சபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட வகையில் இந்த கேள்விப்பத்திரம் தொடர்பான தெரிவு இடம்பெற்றிருக்கின்றது. எனவே, அந்தத் தீர்மானத்தில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியாது. எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கின்றேன்- என்று தெரிவித்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட உச்ச வயதெல்லை நிர்ணயம் அவசியம்

### அரசமைப்புக் கருத்தறியும் குழுவிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.17

அரச சேவைக்கு உச்ச வயது எல்லை நிர்ணயம் செய்யப்படுவது போன்று, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கும் அதி உச்ச வயது நிர்ணயம் செய்யப்படவேண்டும். 65 வயதைக் கடந்தவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவது தடை செய்யப்படவேண்டும். இவ்வாறு புதிய அரசமைப்பை உருவாக்கும் குழு முன்பாக பொதுமகன் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான மக்கள் கருத்தறியும் அமர்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இதன் போதே பொதுமகன் ஒருவர் மேற்படி கருத்தை முன்வைத்தார்.

இலங்கை என்ற ஒரே நாட்டுக்குள் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழீழம் என்ற தேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.அந்தத்தேசம் தமிழர்களின் இறைமையுள்ள தாயகமாக விளங்கவேண்டும்.

அதேபோல் நாடாளுமன்றத்தின் அங்கத்தவர்களுக்கும் அரச சேவை போன்று உச்ச வயது எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். குறிப்பாக 65 வயதைக் கடந்த முதியவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடக் கூடாது.

அவ்வாறு போட்டியிடும் அரசியல்வாதிகள் இரண்டு தடவைக்கு மேலாக நாடாளுமன்றில் அங்கம் வகிக்க முடியாது என்பவை சட்டம் ஆக்கப்பட வேண்டும். அது மட்டுமன்றி மக்களால் வாக்களிக்கப்பட்டு தேர்வு செய்யப்படும் ஒரு மக்கள் பிரதிநிதி மீது மக்கள் நம்பிக்கை இழக்கும் சந்தர்ப்பத்தில் அவருக்கு அளித்த வாக்கைத் திரும்பப் பெறக்கூடிய ஏற்பாடுகளும் புதிய அரசியல் யாப்பினில் உள்ளடக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை இளைஞர் ஒருவர் முன்வைத்தார். (த-101)

## வேலையற்ற பட்டதாரிகள் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

கொழும்பு, பெப்.17

கொழும்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்த வேலையற்ற பட்டதாரிகள் மீது, பொலிஸாரால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், தண்ணீரும் பீய்ச்சியடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்படுகையில், லோட்டஸ் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் பிரதேசத்தில் பதற்றமான சூழல் நிலவியதாகவும், பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம், பின்னர் பேரணியாக ஜனாதிபதி அலுவலகத்தை நோக்கிச் சென்றுள்ளது.

தமக்கான வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாக நல்லாட்சி அரசு அளித்திருந்த உறுதிமொழி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (தி)







### பணிநிலை வேண்டுகை

**அலுவலக சுத்திகரிப்பாளர்**
**(Office Maintenance Staff)**
**(ஆண்/பெண்)**

17-02-2016ஆம் திகதி தொடக்கம் நேர்முகத்தேர்வு நடைபெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர் நேரில் வரவும்

**கரிகணன்**
**வடக்கின் அச்சகதார்**

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 27[illegible]
+94 21 222 2737

### காணி விற்பனைக்கு

நீர்வேலி, கரந்தன் - ஊரெழு பிரதான வீதியில் 8பரப்பு வாழைத்தோட்டத்துடனான காணி விற்பனைக்கு உண்டு. (69337) (14,18,20)

தொடர்பு: 077 968 7745

### பெயர் மாற்றம்

**சிவகுலசிங்கம் கேழல்ஸ்** என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்ட நான் இன்று முதல் **சிவகுலசிங்கம் கோபிஷன்** என பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் **சிவகுலசிங்கம் கோபிஷன்** என்ற பெயரையே உபயோகிப்பேன் என்பதை அறியத் தருகின்றேன்.

**கோபிஷன்.**

(69341)(10.17)

### டனுஸ்கா றெஸ்ரோறன்ஸ்

**மேற்படி எமது அசைவ உணவகத்திற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.**
**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**
சமையல் வேலை தெரிந்தவர். உதவியாளர்
ரொட்டி வேலை தெரிந்தவர்.உதவியாளர்
உணவு பரிமாறுபவர்கள் ஆண்/ பெண்
சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஆண்/ பெண்
ஹோட்டல் வேலையில் ஆர்வமுள்ள ஆண்/ பெண்

19.02.2016 - 20.02.2016
09.00am- 11. 00 am வரை நேரில் சமுகம் தரவும்
தொடர்புகளுக்கு : 076 660 4688

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உபஅலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 10**
**ஆதன இலக்கம் :- 88**
**பிப்பிலி வீதி**
**கிராமசேவையாளர் பிரிவு :- நவாலி வடக்கு (J/134)**

வட்டாரம் 10 பிப்பிலி வீதி ஆதன இலக்கம் 88 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை 'கொட்டப்பிலானையும் மறுபிரிவுகளும்' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 கொண்ட இவ்வாதனமானது கொட்டடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் பெண் சுமித்திரா ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் நவாலி வடக்கு சோமசுந்தரப்புலவர் வீதியைச் சேர்ந்த உருத்திரகுமார் பெண் சறோயாதேவி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 10292 ஆம் இலக்க 2010.12.14ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இந்த "கொட்டப்பிலானையும் மறுபிரிவுகளும்" நிலப்பரப்பு 02 கொண்ட இவ் ஆதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் உருத்திரகுமார் பெண் சறோயாதேவி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினைப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(A/29147)(11.17.20)

### நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

**பெறுகைகளுக்கான அழைப்பு**

அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் - கைதடி, மற்றும் சான்றுபெற்ற பாடசாலையும் தடுப்புக்காவல் இல்லமும் - அச்சுவேலி என்பவற்றிற்கான புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகமும் - 2016/2017

1. வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருள்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | நிறுவனங்கள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 01. | NP/30/02/02/Food/2016-01 | அரச சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் ,கைதடி | 50,000 |
| 02. | NP/30/02/02/Food/2016 -02 | சான்றுபெற்ற பாடசாலையும் தடுப்புகாவல்இல்லமும் அச்சுவேலி | 50,000 |

2. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பிப்பவருக்கு ஆகக் குறைந்தது ஒருவருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையீறின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பெறப்பட்டு பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் **"Application for Bid Documents"** என்ற படிவத்தினை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ஒவ்வொன்றுக்கும் ரூபா.**500/=** இனை காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் **22.02.2016** தொடக்கம் **02.03.2016** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் **26.02.2016** காலை 10.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
6. விலைக் கேள்விகள் **04.03.2016** ஆம் திகதி 14.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இந்த திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 8321)
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தி.விஸ்வரூபன்
தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,
மீனாட்சி அம்மன் வீதி,
பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103

(c 29148) (14,19,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமகள் தேவை**

1982, செவ்வாய்குற்றம் அற்ற Q.S (Eng) மணமகனுக்கு பெற்றோர் படித்த மணமகளைத் தேடுகின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது

(69332)(12,18,20) 077 968 8419 (4.pm- 9.pm)

**வேலைக்கு ஆள் தேவை**

யாழ் நகரிலுள்ள பான்சி கடை ஒன்றிற்கு பெண் ஒருவர் தேவை. 18 - 35 வயதுக்குட்பட்ட யாழ் நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: ராசிக் கிப்ட் சென்ரர்
077 790 5333

**வேலையாள்கள் தேவை**

நல்லூரில் இயங்கும் அச்சகம் ஒன்றில் வேலை செய்வதற்கு ஓவ்செற் மெசின் மைண்டர் மற்றும் கணினி வேலையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை.

(69328) (14,18,20)

தொடர்பு:- JR பிறிண்டேர்ஸ்
சட்டநாதர் வீதி, நல்லூர்.
076 768 7664

**வேலையாள்கள் தேவை**

கோண்டாவிலில் இயங்கும் மில் ஒன்றுக்கு (அரிசி ஆலை) வேலையாள்கள் தேவை.

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (68897) (14,18,20)

தொடர்பு: 075 640 5890

**தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை**

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் மட்டக்களப்பு கிளையில் 30.10.2015 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 26.02.2016ம் திகதி காலை 9.00 மணி முதல் இல.187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பிலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET
FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139



- பல் மூக சீராக்கல் (Consultant Orthodontist)
- மூக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

# வாழ்வாதார நெருக்கடிகள் வடக்கில் தொடர்கின்றன

## என்கிறது உலக வங்கியின் ஆய்வறிக்கை

**விற்பனைக்கு உண்டு**

தவில், நாதஸ்வரம் ஆகியவற்றின் சகல உதிரிப்பாகங்களும் எம்மிடம் கிடைக்கும். (69293)(12,18,20)

077 872 8540, 078 610 1513

**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்**
**வாக்காளர் இடாப்பு மூடுதல்**
**31.01.2016**

31.01.2016 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர்களின் ஆட்சேபனையைப் பெறுவதற்காக 15.02.2016 தொடக்கம் 03.03.2016 வரை பின்வரும் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

| கிளைகள் | இடம் |
|---|---|
| • கிளை - 01 | கிளை - 01 |
| • கிளை - 02, 03, 04, 05 | தலைமை அலுவலகம் |
| • கிளை - 06, 12, 08 | கிளை - 06 |
| • கிளை - 07 | கிளை - 07 |
| • கிளை - 09 | கிளை - 09 |
| • கிளை - 10, 11 | கிளை - 10 |
| • கிளை - 13 | கிளை - 13 |
| • கிளை - 14 | கிளை - 14 |

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் எதுவும் இருப்பின் 03.03.2016 இற்கு முன் எழுத்து மூலம் அல்லது நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப்பைப் பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

கொழும்பு, பெப்.17

இலங்கையில் நம்பகத்தன்மையுடன் கூடிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும், வலுள்ள மனித வளமும் கொண்டுள்ள போதும், வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து மக்களின் வாழ்வாதார நெருக்கடிகள் காணப்படுகின்றன.

குறிப்பாக, இலங்கையில் அதிக வறுமை மிகுந்த மாவட்டங்களாக முல்லைத் தீவும் மன்னாரும் உள்ளன.

இவ்வாறு தெரிவித்துள்ளது உலக வங்கியின் ஆய்வறிக்கை. இது தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

போர் முடிந்து சுமார் ஏழு ஆண்டுகள் ஆகும் நிலையில், பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்துடன், இலங்கையில் போதிய அளவுக்கு முன்னேற்றம் காண, கூடுதல் வாய்ப்புக்களும் உள்ளன.

தெற்காசியாவின் மற்ற நாடுகளைக் காட்டிலும் இலங்கையில் நம்பகத் தன்மையுடன் கூடிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும், வலுவுள்ள மனித வளமும் உள்ளன. எனினும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து வாழ்வாதார நெருக்கடிகள் உள்ளன.

இலங்கையில் தொடங்கப்பட்டிருக்கும் அரச நிர்வாக சீர் திருத்தங்கள் மேலும் பொறுப்பு கூறுதலுக்கு வழிவகுத்துச் சிறந்த நிர்வாகத்தை அளிக்க வேண்டும். அதன் மூலமே மக்களுக்கு அரசின் மீதான நம்பிக்கை ஏற்பட்டு, ஸ்திரத் தன்மை உறுதி செய்யப்படும்.

மேலும், வளமான நிலங்களும், அபரிமிதமான நீர் வளங்களும் இலங்கையில் இருப்பதால் விவசாயத்துறை மேலும் முன்னேற வாய்ப்புகள் உள்ளன.

வெளிநாட்டிலிருந்து தொழில்நுட்ப உரிமைகளைப் பெற்றுப் பயன்படுத்துவதில் இலங்கை மிகவும் பின்தங்கியுள்ளது.

நாட்டில் சட்டம் மற்றும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் பிராந்திய ரீதியிலான ஏற்ற இறக்கங்களும் சமச்சீர் அற்ற நிலையும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன .

குறிப்பாக, இந்தக் காரணத்தால் நாட்டின் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள 40 சதவீதம் மக்கள் வசிக்கும் வடக்கு மாகாணம் போன்றவை கூடுதலாகப் பாதிப்படைகின்றன. அந்த வகையில் நாட்டிலேயே மிகவும் வறுமை மிகுந்த மாவட்டங்களாக முல்லைத்தீவும் மன்னாரும் உள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-5)

**சொலெக்ஸ் நீர் பம்பிகள்**
**உயர்ந்த . நம்பிக்கையான**




ரூபா.8450/- முதல்...
0773 658869
விற்பனைப் பிரிவு - அவசர தொடர்புகளுக்கு

சொலெக்ஸ் வரையறுக்கப்பட்ட இஞ்சினியரிங் தனியார் கம்பனி
இல. 39, புதிய நுகே வீதி, பேலியகொடை, இலங்கை.

# நிர்வாக சபை தெரிவு

சாவகச்சேரி,பெப்.17

சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கப் புனரமைப்புக் கூட்டம் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தற்காலிகத் தலைவர் த.வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. அதில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக த.வேலாயுதம், உப தலைவராக திருமதி வாசுகி திவ்வியநேசன், செயலாளராக ப.குகனேஸ்வரன், உதவிச் செயலாளராக நா.சத்தியநாதன், பொருளாளராக குமாரதேவன் காயத்திரி, பதிப்பாசிரியராக திருமதி சாமந்தி திவாகரன், இணைப்பாளராக கேசவன் சயந்தன் ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக நி.கேசாந்த்,பிரதீபன், திஷா ந்தி வேணு கஜன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-ஐ-9)

Lyca Mobile
அனுசரணையில் UR Friend Foundation
நடாத்தும் மாபெரும்
**Jaffna Marathon**
எதிர்வரும்
மாசி மாதம் 5ம் திகதி சனிக்கிழமை
நடைபெறவுள்ளது.
பங்குபற்ற விரும்புபவர்கள் (இருபாலாரும்)
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு
விண்ணப்பப்படிவங்களைப்
பெற்று 01.03.2016 ற்கு முன்னர்
பங்குபற்றுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**இம்மாதம் 22ம் திகதி நடைபெறவிருந்த மரதன் அனைவரின் வேண்டுகோளிற்கிணங்க 5.03.2016 ற்கு மாற்றப்பட்டுள்ளது.**

- முதல் 10 இடங்களை பெறுபவர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.
- குறித்த நேரத்தில் ஓடி முடிக்கும் அனைவருக்கும் பதக்கம் வழங்கப்படும்.
- ஓட்ட தூரத்தை [illegible]

Kathiramalai
Palaly Road, Urelu.
jaffnamarathon@gmail.com
077 271 1093

# ஞானசாரருக்கு பிணை மறுப்பு

கொழும்பு, பெப்.17

பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கான விளக்கமறியல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டுக் காணாமற்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அவர் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படும் போது, அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கும் வகையில் பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனமை தொடர்பான வழக்கு விசாரணையின் போது, நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவித்தமை மற்றும் சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்காக, கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
07
02
1944



உதிர்வு
16
02
2016

# திரு. செல்லப்பா குகதாசன்

(நயினாதீவு)

**(உரிமையாளர் , குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ், கொழும்பு - வவுனியா, ரோயல் மோட்டோர் ஹவுஸ் கொழும்பு)**

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வவுனியா மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த பிரபல வர்த்தகரும், (உரிமையாளர் குகன் மோட்டோர் ஸ்ரோர்ஸ் வவுனியா, கொழும்பு), சமய, சமூக தொண்டருமான திரு.செல்லப்பா குகதாசன் அவர்கள் 16.02.2016 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லப்பா பார்வதிபிள்ளை தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வரும், திரு.திருமதி நாகசுந்தரம் பார்பதிபிள்ளை தம்பதியினரின் மருமகனும் சந்திரவதி (புனிதம்) அவர்களின் அன்புக் கணவரும் தனுஷா (Australia) , ஜயந்தினி (Kuwait) , தயாநிதி (London) , திவியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. ஞானசேகர் (Australia) , குலசீலன் (கணக்காளர் - Kuwait), இராகுலன் (பொறியியலாளர் - London) ஆகியோரின் அன்பு மாமனாரும் பங்கசாம்பாள், காலஞ்சென்ற சத்தியேஸ்வரி மற்றும் இராமசந்திரன், அன்னலிங்கம் (குகன் மோட்டோர்ஸ்-வவுனியா), யோகலிங்கம்(London), காலஞ்சென்ற கனகாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் மகேந்திரநாதன்,மகாலக்ஷ்மி, ஜெகதீஸ்வரி,உதயராணி, கனகசேகரம் பிள்ளை, காலஞ்சென்ற இராசகுலேந்திரன் மற்றும் பஞ்சாட்சரம், விஜயதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தகுமாரனின் அன்புச்சகலரும், தீபிகாவின் ஆசைப்பெரியப்பாவும் ரிஷிகேஷன், ஹரிஹரீமன், அட்சயன், யதுர்சயன், விகாஷ்,கிரிஷ் ஆகியோரின் அன்புத்தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2016 வியாழக்கிழமை அன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல.44,பாம் வீதி,மட்டக்குளி,கொழும்பு-15 இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்பட்டு ஒரு மணியளவில் தகனக்கிரியைகள் இடம் பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொலைபேசி: 011 2521473 , 0777732160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணிலே மலர்ந்தது 22 . 01 . 1931

விண்ணிலே கலந்தது 21 . 01 . 2016



21.01.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகக் கொண்ட எமது குடும்பத் தலைவர்

அமரர் **கந்தையா சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், PWD உத்தியோகத்தர், கூட்டுறவுத் திணைக்களம்- வவுனியா)

திதி:பூர்வபக்க திரயோதசி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (18.02.2016) வியாழக் கிழமை அதிகாலை 4 மணியளவில் காரைநகர் ஆலங்கன்று நவமணி அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 20.02.2016 சனிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.32,
கைலாசபிள்ளையார் கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**077 330 2069**

குடும்பத்தினர்.
சு.பாக்கியராஜா
(மகன்)


# நடமாடும் சேவை இன்று

யாழ்ப்பாணம், பெப்.17

நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவுக்கான நடமாடும் சேவைகள் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும் என நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ். ஜெயகாந் அறிவித்துள்ளார்.

பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டை மற்றும் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக வெளியிடங்களில் உள்ள நெடுந்தீவு மக்களும் இன்றைய நடமாடும் சேவையில் கலந்து கொண்டு தங்களது தேவைகள் குறித்து விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-7)

## பிற்போடல்

யாழ்ப்பாணம்,பெப்.17

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற விருந்த, யாழ்ப்பாணம் மத்தியஸ்த சபையின் மத்தியஸ்தர் அமர்வு பிற்போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் வைத் தீஸ்வரா கல்லூரி மண்ட பம் பரீட்சை மதிப்பீட்டு மண்டபமாக அறிவித்தி ருப்பதால், மத்தியஸ்தர் சபை அமர்வு இடம் பெறாது. எதிர்வரும் 28 ஆம் திகதி அமர்வுகள் வைத்தீஸ்வராக் கல் லூரியில் தொடர்ந்து இடம்பெறும் என்பதை தவிசாளர் வி.ஸ்ரீசக்தி வேல் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி4)

## விருந்தோம்பல் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் விருந் தோம்பல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. காரைநகரில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர்,உணவுமற்றும் குடிபானம் பரிமாறுபவர் தொடர் பான கற்கை நெறி விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன. பயிற்சி முடிவில் முன்னணி விடுதிகளில் வெளிக்களப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும், தகைமைச் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தில் அல்லது வலந்தலைச் சந்தியில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி அதிகாரசபையில் பதிவு செய்து கொள்ள முடியும் என இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் தெரி வித்துள்ளார். (ற-ஜ-ரி5)


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
**சுப்பிரமணியம் நாகம்மா**



தோற்றம் 24.06.1939

மறைவு 23.02.2010

*திதி: அமாவாசை கழிந்த தசமி*

பாரினிலே பலர்போற்ற எம்மைப் பக்குவமாய் வளர்த்த எம்
அன்னையே உம்மைப் பிரிந்து ஆண்டுகள் ஆறு ஆனதுவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறையாது உங்கள் நினைவு
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மிசன் பாடசாலை வீதி.
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
(69300) (14,18,20)
குடும்பத்தினர்.

# 10 ஆவது ஆண்டு நினைவும் நன்றி செலுத்தும் ஆராதனையும்

*நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். - 2தீமோத்தேயு 4:7 -*



**வண.மாட்டின் மாரியஸ் இன்பரூபன்**

(சீயோன் தேவாலய சிரேஷ்ட உதவிப்போதகர், மூப்பர் கௌரவ பொருளாளர், அதிபர் - சீயோன் வேதாகம பாடசாலை, ஆசிரியர் - அனல் சஞ்சிகை, ஆளுநர் குழு அங்கத்தவர் - இலங்கை சுயாதீன திருச்சபைகள் ஐக்கியம், அங்கத்தவர் - ஆளுநர் குழு இலங்கை வேதாகமக் கல்லூரி - பேராதனை, இணைப்பாளர் கொழும்பு இறையியல் கல்லூரி - யாழ்ப்பாணம், முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்.)

19.02.2006 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த போதகர் மாட்டின் மாரியஸ் இன்பரூபன் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து 10 ஆண்டுகள் பூர்த்தியா வதையிட்டு நாளை மறுதினம் (19.02.2016) வெள்ளிக்கிழமை இல, 24 இராமை யாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில் முற்பகல் 10.00 மணிக்கு அவரது ஊழியத்திற்காகவும் வாழ்விற்கா கவும் நன்றி செலுத்தும் ஆராதனை இடம் பெறும். இவ் ஆராதனையில் கலந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்துமாறு உங்களையும் அன்புடன் அழைக்கின் றோம்.

(60735)
(14,19,20)

வண.ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைமைப்போதகர், சீயோன் தேவாலயம் – யாழ்ப்பாணம்.

# 31ஆம் நாள் நினைவில்

மண்ணில் 1937 . 09 . 01

விண்ணில் 2016 . 01 . 18



அமரர் **கபிரியேல் ஜோஜ்**

அன்பின் ஒளியாய்
அறிவின் சிகரமாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
எமையெல்லாம் எமக்கு உணர்த்திய
அன்புத் தந்தையே
ஆண்டவன் பாதமடைந்து
மாதம் ஒன்றாகியும்
அழியா ஒளிவிளக்காய்
இன்றும் எம் மனதில்.......

60, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம்.
(69297)(02.8.20)
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீனிய ஒழிப்புக்கு ஒத்துழைப்பு இல்லை

## நல்லூர் பிரதேச சபை மட்டுமே ஒத்துழைக்கிறது யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.17
பாதீனிய ஒழிப்பு நடவடிக்கையில் நல்லூர்ப் பிரதேச சபை மாத்திரமே ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. பாதீனிய ஒழிப்புக்கு ஒத்துழைக்கத் தவறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. - இவ்வாறு யாழ்.மாவட் விவசாயப் பணிப்பாளர் க.ஸ்ரீ பாலசுந்தரம், குறிப்பிட்டுள்ளார்.

பாதீனிய ஒழிப்புக்காக கடந்த ஜனவரி மாதம் 66 அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பாதீனிய ஒழிப்புக்கு ஒத்துழைக்காவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள். இந்த நிலையிலேயே விவசாயப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அலுவலகங்கள் உள்ளிட்ட சகலருக்கும் பாதீனிய ஒழிப்புத் தொடர்பில் அறிவித்தல்கள் வாய்மொழி மூலமாகவும், பின்னர் கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்படும். மூன்று தடவைகள் மாத்திரமே அறிவுறுத்தல்கள். வழங்கப்படும். இரண்டு வார கால அவகாசத்தின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது-

> அரச அலுவலகங்கள் உள்ளிட்ட சகலருக்கும் பாதீனிய ஒழிப்பு தொடர்பில் அறிவித்தல்கள் வாய்மொழி மூலமாகவும், பின்னர் கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்படும். மூன்று தடவைகள் மாத்திரமே அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்

சட்ட நடவடிக்கையானது மிக இறுக்கமானதாக இருக்கும். பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், ஒரு லட்சத்துக்கு மேற்படாததுமான தண்டப் பணமும் அல்லது ஒரு மாதத்துக்கு குறையாததும், 6 மாதத்துக்கு மேற்படாததுமான சிறைத் தண்டனையும் வழங்கப்படும்.

அரச நிறுவனங்களுக்கு உரித்தான காணிகளில் உள்ள பாதீனியத்தை அழித்தல் தொடர்பான விடயத்தில் முதற்கட்டமாக பிரதேச சபைகளுக்கு கடந்த டிசெம்பர் மாதம் கடிதங்கள் அனுப்பப்பட்டு, அவை ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரதேசத்தில் பாதீனியம் ஒழிக்கப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டது.

அந்த விடயத்தில் நல்லூர் பிரதேச சபை இந்தக் கடிதத்துக்கு ஒத்துழைப்பு நல்கி தங்களுக்கு இந்தக் காலம் போதாமல் உள்ளது என்றும் கால அவகாசம் கோரி மீள் கடிதம் அனுப்பி வைத்தனர். அதன் பிரகாரம் அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

அதன் பின்பு நல்லூர் பிரதேச சபை தனது முழுமையான அறிக்கையை வழங்கியுள்ளது. அவர்கள் முன்மாதிரியாகச்செயற்படுகின்றனர். ஏனைய பிரதேச சபைகளும் இதே போன்று செயற்பட வேண்டும் - என்றார்.

அதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் பிரதேச சபையில், சபையின் செயலாளர் தலைமையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தங்களது பிரதேசத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அழைப்பு விடுத்து பாதீனிய அழிப்புத் திட்டமிடல் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்பட்டது.(ற-ஜ-5,ரி)



யாழ். மாநகர சபையால் நகரப் பகுதிகளில் கழிவுப் பொருள்களைச் சேகரிப்பதற்கான தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. மக்கள் கூடுதலாக நடமாடும் பகுதிகளில் அவை வைக்கப்பட்டுள்ளன. கடதாசிக் கழிவுகள் மற்றும் உக்கும், உக்காத கழிவுகள் என வேறாக்கி மக்கள் இந்தக் கழிவு சேகரிக்கும் தொட்டிகளில் போட வேண்டும் எனவும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.(ற-ஜ-17)

# ஆபாசப் பட இணையத்தளங்களை முற்றாகத் தடை செய்யவேண்டும்

## அரசமைப்பு கருத்தறியும் அமர்வில் பொதுமகன் ஒருவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 17
ஆபாசப் படங்கள் மற்றும் காமக் கதைகளைப் பரப்பும் இணையத் தளங்கள் முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். அத்துடன் உயர்வகை மதுபானம், விலை மாதர்களின் செயற்பாடுகள் என்பவற்றுக்கும் கடுமையான - இறுக்கமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.- இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு மக்கள் கருத்தறியும் அமர்வில் பங்கேற்ற சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர்கோரிக்கைவிடுத்துள்ளார்.

கே.தவராஜா என்ற குறித்த பொதுமகன் அங்கு மேலும் தெரிவித் துள்ளதாவது-

குற்றம் செய்பவர்களுக்கு பிணையற்ற ஒரு வருட கால சிறைத் தண்டனை வழங்குவதுடன், இரண்டு வருடங்களுக்கு நாட்டின் கடற்கரைகளை அழகுபடுத்தும் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கும் இவர்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

இன விடிவுக்காகப் போராடி இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை அங்கீகரித்து அவர்களின் நினைவிடங்களைப் புனித பூமியாக்க வேண்டும்.

அவர்களை நினைவு கூருவதற்கானசட்டமூலஏற்பாடுகள்மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எமது தாயகம் - தேசியம் - சுயநிர்ணயம் என்பவற்றின் அடிப்படையில் எம்முடைய தீர்மானங்கள், அதிகாரங்கள் அனைத்தையும் நாமே தெரிவுசெய்து நெறிப்படுத்த வேண்டும்.

பெண்கள் மீதான துஷ்பிரயோகம் முதலான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு பாரபட்சமின்றி கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

கல்வி, மருத்துவ செயற்பாடுகளை அரச மயப்படுத்தி, நவீன மயப்படுத்தலுடன்விண்வெளிதொடர்பான ஆய்வு மையங்களும் உருவாக்கப்படும் சட்ட அமைப்பு வேண்டும். கலாசாரம் மற்றும் கலைகள் பேணப்படுதல் வேண்டும். கைத்தொழில் தொழிற்சாலைகள் நவீன மயப்படுத்தப்படுவதுடன், வெளிநாட்டுகைத்தொழில் பொருள்களின் இறக்குமதிகள் தடை செய்யப்படுதல் வேண்டும்.

விவசாயத்தில் இயற்கை முறையை ஊக்குவித்து, குளம், கால்வாய் என்பவற்றைப் புனரமைப் பதற்கான திட்டங்கள் உள்ளடக்கப்படல், அனைத்து அரச நிறுவனங்களின் செயற்பாடுகளையும் சர்வதேச தரத்துக்கு மாற்றுதல், பொது நூலகங்களை உள்ளூராட்சிச் சபைகளிடம்இருந்துகையேற்றுமுழுமையாக அரசே செயற்படுத்துதல் வேண்டும்.

பாதுகாப்புக்குப் பயன்படும் நிதியின் அளவைக் குறைத்தல், ஊடகங்களின் நடுநிலைத் தன்மையை உறுதிப்படுத்தல், கருத்தறியும் சுதந்திரம் ஏற்றுக் கொள்ளப்படல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் இலஞ்சம் ஊழல் என்பவற்றைத்தடைசெய்து அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவதற்கான முறைகளை ஏற்படுத்துதல் போன்ற சட்ட ஏற்பாடுகள்வரையப்பட வேண்டும் - போன்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளார். (ற-ஜ-5,ரி5)

### நீதிமன்ற அலுவலர்களுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.17
வட மாகாண நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதிச்சேவை அல்லாத நீதிமன்ற அலுவலர்களுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும்20ஆம்திகதிதொடக்கம் யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

நீதிச் சேவைகள் அல்லாத நீதிமன்ற அலுவலர் பயிற்சி நிறுவனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்தப் பயிற்சி வகுப்புகளில் வடமாகாண நீதிமன்றங்களில் கடமையாற்றும் கணக்கு உதவியாளர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், நீதிமன்ற எழுதுநர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளர் ஆர். பீ.டி.பீ.பீ. ரட்ணாயக்கா அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

# தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி




யாழ்ப்பாணம், பெப்.17
தொற்றா நோய் கட்டுப்பாட்டை முன்னிட்டு வட மாகாண சுகாதார அமைச்சும் யாழ். பல்கலைக் கழகமும் இணைந்து நேற்றுமுன்தினம்நடைபவனி ஒன்றை நடத்தின. இந்த நடைபவனி வட மாகாண சுகாதார அமைச்சில் ஆரம்பித்து யாழ்.பல்கலைக் கழகம் வரை சென்று முடிவுற்றது.

இன்றைய இயந்திர மயமாக்கலால் ஏற்படும் நோய்களில் தொற்றா நோய் வேகமாக அதிகரிக்கின்றது. இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குதினமும்நடைப் பயிற்சி அவசியம் என்பதை வலியுறுத்தி குறித்த நடைபவனி நடத்தப்பட்டது.

நடை பவனியை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் மற்றும் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் செல்வி.வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கொடி அசைத்து ஆரம்பித்தனர்.

வட மாகாண சுகாதாரப் பணியாளர்கள் , யாழ். பல்கலைக்கழக சமூகத்தவர், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்த நடைபவனியானது, பண்ணையில் ஆரம்பமாகி யாழ் வைத்தியசாலை வீதியூடாக வேம்படிச் சந்தியை அடைந்து பலாலி வீதி வழியாக நகர்ந்து யாழ்.பல்கலைக் கழகத்தைச் சென்றடைந்தது. (ஜ-101)

# அக்கரையில் 50 குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம், பெப். 17
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/283 அக்கரை கிராமசேவையாளர் பிரிவில் 50 குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கோப்பாய்பிரதேசசெயலர்தெரிவித்தார்.

ஜே/283 அக்கரை கிராம சேவையாளர் பிரிவில் அரச காணிகளில் நீண்டகாலமாக வசித்து வந்த 50 குடும்பங்களுக்கு நிரந்தரமாக்காணிஉறுதிப் பத்திரங்களை வழங்க பிரதேச செய லகம் நடவடிக்கை எடுத்திருந்தது. போருக்கு முன்னர் இருந்த குறித்த பகுதி மக் களுக்கு குறித்த காணிகள் அரசால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தபோதும் அவர்களுக்கு நிரந்த உறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அதையடுத்து 9 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட இந்தப் பகுதியில் தற்போது 50 குடும்பங்களுக்கு காணி உறு திப்பத்திவுகள் வழங்கப்பட் டுள்ளன.

இவர்களுக்கான காணி உறுதி வழங்குவதற்குரிய பதிவுகளை காணிக் கச்சேரி அமைக்கப்பட்டுஅதனூடாகவும், மாகாண காணி அமைச்சின் ஊடாகவும் கோப்பாய் பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகின்றது என்று பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-ரி5,107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆசிரியர்கள் புத்தளத்தில் பணியாற்றுவதால் நெருக்கடிகள்

## வடமேல் மாகாண கல்வி அமைச்சுக்கு வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் கடிதம்

யாழ்ப்பாணம்,பெப்.17
வட மாகாணத்தின் ஆசிரியர்கள் புத்தளத்தில் பணிபுரிவதில் உள்ள நிர்வாக நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையாட வேண்டும் என்று வடமேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.
எனினும் இதுவரை அதற்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மன்னார் மாவட்டத்தில் வசித்த முஸ்லிம்கள் போர்க் காலத்தில் இடம்பெயர்ந்து புத்தளத்துக்குச் சென்றனர். அவர்களது பிள்ளைகள் அந்தக் காலத்தில் புத்தளத்தில் உள்ள பாடசாலைகளில் கற்கத் தொடங்கினர். கற்று வருகின்றனர். அதனால் மன்னார் மாவட்டத்தில் இயங்கிய 6 பாடசாலைகளின் மாணவர்களும் ஆசிரியர்களும் புத்தளத்தில் கற்று, கற்பித்து வருகின்றனர்.
வட மாகாணத்துக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கையாக 15 ஆயிரத்து 200 பேர் உள்ளனர். அவர்களில் தற்போது 14 ஆயிரத்து

**“வடக்கு மாகாணத்தில் பலர் தொண்டர் அடிப்படையில் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பில் புத்தளத்தில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் ஓர் தாக்கத்தைச் செலுத்துகின்றது.”**

920 பேர் பணியில் உள்ளனர். இருப்பினும் பல பாடசாலைகளில் பாட ரீதியிலான வெற்றிடங்கள் நிலவுகின்றன. பலர் தொண்டர் அடிப்படையிலும் பணிபுரிகின்றனர். இவர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பில் புத்தளத்தில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் ஓர் தாக்கத்தைச்செலுத்துகின்றது.
ஏனெனில் வடக்கு மாகாணத்துக்குரிய - மன்னார் மாவட்டத் துக்குரிய ஆசிரியர்களாக புத்தளத்தில் மட்டும் 168 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 151 ஆக இருந்தபோதும், 17 பேர் வரையில் மேலதிகமாகவுள்ளனர்.
அவ்வாறு வட மாகாணத்தின் பதிவில் உள்ள ஆசிரியர்கள் புத்தளத்தில் பணிபுரிவதனால் வட மாகாண கல்வி அமைச்சுக்கு உள்ள நிர்வாக நெருக்கடிகள், சிக்கலைத் தடுக்கவே இரண்டு மாகாணங்களினதும் முதலமைச்சர்கள், மாகாணக் கல்வி அமைச்சர்கள், செயலாளர்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடி இறுதி முடிவை எட்டுவதற்கு வட மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.
கடந்த வருடம் தொடக்கம் இந்தக் கலந்துரையாடலுக்கான கோரிக்கை விடுக்கப்படுகின்றபோதும், ஒப்புதல்களைப் பெறுவதில் ஏற்படும் கால தாமதம் கலந்துரையாடலைத் தாமதப்படுத்துகின்றது.
எனவே, இவ்வாறான நெருக்கடிகள் தொடர்பில் இறுதி முடிவை எட்டுவதானால் இரு மாகாண அதிகாரிகளும் இணைந்தே எட்ட வேண்டிய தேவை உள்ளது.
இதற்காகவே கடந்த ஆண்டு முதல் இரு தடவைகள் கோரிக்கை விடப்பட்ட போதிலும் இதற்கான சந்தர்ப்பம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை- என்றார்.
(ற-ஜ-4,10ƒ)



## வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களது ஆர்ப்பாட்டம் நிறுத்தம்

### பழைய மாணவர்களின் தலையீட்டை அடுத்து

வவுனியா,பெப்.17
வவுனியா தமிழ் மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியரின் இடமாற்றத்தைக் கண்டித்து குறித்த பாடசாலை மாணவர்களால்மூன்றாவது நாளாக நேற்று மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம்,பழைய மாணவர்களுடைய தலையீட்டால் நிறுத்தப்பட்டு கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இடமாற்றம் செய்யப்பட்ட தங்களது பாடசாலை ஆசிரியரை மீண்டும் தங்களது பாடசாலைக்கே நியமனம் வழங்கக்கோரி குறித்த மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.
ஆசிரியருடைய குறித்த இடமாற்றம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர் போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.
எமது பாடசாலையில் கடமையாற்றிய உடற்கல்வி ஆசிரியர் மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வந்தமையானது எங்களது கல்விச் செயற்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.
எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு எதிராக குறிப்பிட்ட ஆசிரியர் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக பழிவாங்கும் நடவடிக்கையாகவே ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து குறித்த ஆசிரியரை மீண்டும் எமது பாடசாலைக்கே நியமிக்க வேண்டும் - என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.
அதையடுத்து நேற்று அங்கு வந்த பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்த இடமாற்றம் தொடர்பாக நீதிமன்றில் வழக்கு தொடர்வதாகவும், கல்விச்செயற்பாட்டைபாதிக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு கல்வியைத் தொடருமாறும் மாணவர்களிடம் தெரிவித்தனர்.
பாடசாலையின் பழைய மாணவர்களுடைய கருத்துக்கு செவிசாய்த்த பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு தமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.
(ற-ஜ-21)

## இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.17
தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகளான ஆசிரியை திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் நாடக எழுத்துருக் களடங்கிய “கிணற்றங்கரை”, சிறுவர் கதையான ‘‘மயில் இறகு’’ ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
சட்டத்தரணி சோ. தேவராஜாவின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு ஆசியுரையை குழந்தை மா. சண்முகலிங்கமும், வெளியீட்டு உரையை தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணப் பேரவையின் செயலாளர் மு. இராசநாயகமும், கிணற்றங்கரை நூலுக்கானஆய்வுரையை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் உதவி இயக்குநர் ஜோ. ஜோன்சண் ராஜ்குமாரும், மயில் இறகு நூலுக்கானஆய்வுரையை கவிஞர் பரா. ரமேஸும் வழங்கவுள்ளனர்.
இந்த நிகழ்வில் சிறுவர் இலக்கிய, நாடக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை. இலக்கியப் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-ரி)

## மரமுந்திரிகை செய்கையை மேம்படுத்துவதற்கு ஆராய்வு

### மன்னார் சென்றார் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத் தலைவர்

மன்னார், பெப்.17
மன்னார் மாவட்டத்தில் மர முந்திரிகைச்செய்கையை மேம்படுத்தும் வகையில் அவற்றின் நிலையை ஆராய்வதற்காக இலங்கை மர முந்திரிகைக்கூட்டு தாபனத்தின் தலைவர் நேற்று மன்னாருக்குச் சென்றுள்ளார்.



மன்னாருக்குச் சென்றிருந்த மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்சிறி பண்டார கருணா ரத்தி, மன்னாரில் அமைந்துள்ள இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு நேரில் சென்று மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மர முந்திரிகைச் செய்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற் கொண்டார்.
அதன் பின்னர் மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மர முந்திரிகைச் செய்கையை பார்வையிட்டு குறித்த செய்கையை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவித்தார்.
மரமுந்திரிகைக் கூட்டுதாபன தலைவரின் மன்னாருக்கான வருகையின்போது, இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பிரதித்தலைவர் பண்டார திலக்க மிரிகால, பொது முகாமையாளர் கீர்த்தி ஜெயக்கொடி ஆராச்சி, பிரதிப்பொது முகாமையாளர் பி.வி.கொடிகார, உதவிப்பொது முகாமையாளர் ஜி.வி.வி.சுரேந்திரா, இயக்கு நர் சபை உறுப்பினர்எம்.ஆர்.எம்.ஐ.றிசா ஆகியோரும்- மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மரமுந்திரிகைச்செய்கை தொடர்பாக ஆராய்ந்தனர்.
(ற-ஜ-56)

## ஆலயத்தில் மீண்டும் திருட்டு

வவுனியா,பெப்.17
வவுனியா ஓமந்தை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இரண்டாவது தடவையாகவும் உண்டியல் உடைத்துப்பணம் திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீடமைப்பு திட்டத்தில் உள்ள ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த இரும்பாலான உண்டியலே உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.
குறித்த உண்டியல் உடைக்கப்பட்டு புரட்டி விடப்பட்ட நிலையில் காணப்பட்டதை அடுத்து இந்த விடயம் தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஓமந்தை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. குறித்த பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
இதற்கு முன்னர் கடந்த வாரம் இந்த ஆலயத்தில் இருந்த உண்டியலின் பூட்டு உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டு பின்னர் புதிய பூட்டு போடப்பட்டதாகவும், இந்த நிலை யிலேயே இரண்டாவது தடவையும் குறித்த உண்டியல் உடைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதுகுறித்து ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ஜ-402)

## கொள்ளைகளுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது

மன்னார், பெப்.17
மன்னார் மாவட்டத்தில் பல கிராமங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை மன்னார் பொலிசார் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.
மன்னார் பெரிய கமம், செல்வநகர் அம்மன் கோயில், எமில் நகர் போன்ற இடங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் சம்பந்தபட்ட மூன்று சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி அஜநத டேற்றிகோவின் பணிப்புரைக்கு அமைவாக குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவு அதிகாரி பி.ஆர்.சரத் தலைமையிலான குழு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளது.
இதில் கொள்ளைச் சம்பவங்களுடன் நேரடித்தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரிடம் தங்கம் வாங்கிய குற்றச்சாட்டில் நகை வியாபாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களிடம் இருந்து நான்கு லட்சம் பெறுமதி மிக்க நகைகளும், கையடக்கத் தொலைபேசிகள் இரண்டும், நகைகள் விற்ற ஆவணங்கள் சிலவும், கொள்ளைச்சம்பவங்களுக்குப் பயன்படுத்திய முச்சக்கர வண்டி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. இவர்களை மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரு மரங்கள் பலவும் கேப்பாப்பிலவில் அழிப்பு

## மக்கள் குற்றச்சாட்டு; நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,பெப்.17
முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதியான கேப்பாப்பிலவில் உள்ள பொது மக்களின் காணிகளிலுள்ள பயன்தரு மரங்கள் கடந்த சனிக்கிழமை முதல் இயந்திரங்களின் உதவியுடன் அழிக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனைத்தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளன்ர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவில் மக்களுக்கு சொந்தமான காணிகள் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போரின் பின்னர் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டன. இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த நிலப் பரப்புக்குச் சொந்தமான காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தமது சொந்தக் காணிகளே வேண்டும் எனவும் மாற்றுக் காணிகள் வேண்டாம் எனவும் அந்த மக்கள் வலியுறுத்தியிருந்தனர்.

கடந்த மாதம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதும் தமது காணி விடுவிப்பை வலியுறுத்தி பிரதேச செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இதன்போது மக்களைக் குறித்த பகுதிகளில் குடியமர்த்துவதாக அமைச்சர் ரிசாத் உறுதியளித்திருந்தார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண சபையில் 9 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில், அந்த மக்களை அவர்களுடைய சொந்த நிலத்தில் குடியேற்ற வேண்டும் எனக் கோரும் பிரேரணை, முல்லைத்தீவு மாவட்ட ஆளும்கட்சி உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள கேப்பாபிலவுப் பகுதியில் உள்ள காணிகளில் பயன்தரு மரங்கள் இயந்திரங்களின் உதவியுடன் தறிக்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ற-ஐ-5-21-ரி7)

## பாம்பு தீண்டி குடும்பஸ்தர் பாதிப்பு

சாவகச்சேரி, பெப்.17
வரணி வடக்கைச் சேர்ந்த 27 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விசப் பாம்பால் கடியுண்டார்.

நள்ளிரவு நேரம் பாம்பால் கடியுண்ட அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ற-ஐ-9)

## தேசிய ஜம்போறிக்காக சில வீதிகள் மூடப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.17
யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள 9ஆவது சாரண தேசிய ஜம்போறி விழா எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் நடைபெறவுள்ளதால் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை சில வீதிகள் தற்காலிகமாக மூடப்படவுள்ளன. ஏ-9 பிரதான வீதி நீதிமன்றத்துக்கு முன்னாலும், கே.கே.எஸ் வீதி பிரதம தபால் நிலையத்திற்கு முன்னாலும், வீரசிங்கம் மண்டபத்திற்கு இடையில் உள்ள புல்லுக்குளம் வீதியும், மணிக்கூட்டுச் சந்தியில் இருந்து புல்லுக்குளம் மற்றும் நூலகம் செல்லும் வீதியும், மத்திய கல்லூரி-கிறிஸ்தவ ஆலயம் இடையிலான சிறு வீதிகள், கோட்டை மற்றும் கடற்கரை வீதிகள் என்பனவும் மூடப்படவுள்ளன. இவற்றுக்குப் பதிலாக வைத்தியசாலை வீதி, முதலாம் குறுக்குத் தெரு,பலாலி வீதி,கே.கே.எஸ் வீதி போன்ற மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு சோலர் விளக்கு

சாவகச்சேரி, பெப்.17
சாவகச்சேரி பஸ் நிலையத்தில் சூரிய ஒளியில் இயங்கக்கூடிய(சோலர்) வீதி விளக்கு கடந்த திங்கட்கிழமை பொருத்தப்பட்டது. யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் பங்களிப்புடன் சாவகச்சேரி நகர சபையினர் இந்த வீதி விளக்கை நேற்றுப் பொருத்தினர்.

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் சக்தி வாய்ந்த வீதி விளக்கைப் பொருத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்தே தற் போது இந்த வீதி விளக்குப் பொருத்தப்பட்டுள்ளது என்று நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்.(ற-ஐ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்லம்பிட்டிய முக்கொலை: 25 பேரின் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, பெப். 17
கொழும்பு. வெல்லம்பிட்டிய, கித்தம்பஹுவ பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் உயிரிழந்தமை தொடர்பில் இதுவரை அப்பகுதியிலுள்ள 25பேரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் கொலையாளிகளின் பெயர்கள், அங்க அடையாளங்கள் போன்றவைபற்றியதகவல்களைத் தமக்கு வழங்கியுள்ளதாகவும் அந்தத் தகவல்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
வெல்லம்பிட்டிய பிரதேசத்தை உலுக்கிய இந்த முக்கொலைகளின் பின்னர் அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையால் விசேட பொலிஸ் குழுக்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (த)

## பொலிஸ் கான்ஸ்டபிள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

கொழும்பு, பெப்.17
இரவு உணவுக்காக எம்பிலிப்பிட்டிய புதிய நகரிலுள்ள ஹோட்டலொன்றுக்கு சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்ஒருவர் இனந்தெரியாத இருவரால் கடுமையாகத் தாக்கப்பட்டு எம்பிலிப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.
கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் எம்பிலிப்பிட்டிய புதிய நகரில் வசிக்கும் இந்தக் கான்ஸ்டபிள் அங்கிருக்கும் ஹோட்டலொன்றுக்குச் சாப்பிடச் சென்றுள்ளார்.
எம்பிலிப்பிட்டியவில் அசம்பாவிதம் நடந்தபோது அந்தப் பொலிஸ் நிலையத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இவர், அண்மையில் பிந்தெனிய பொலிஸ் நிலையத்துக்குக் கட்டாய இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். சம்பவதினம் எம்பிலிப்பிட்டியவுக்கு விடுமுறையில் வந்தவர், இரவு உணவுக்காக இந்தக் ஹோட்டலுக்குசென்றபோதுஇனந்தெரியாத இருவர் அவர் மீது திடீரெனத் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.
தாக்குதலை மேற்கொண்டவர்களில் ஒருவர் இராணுவச் சிப்பாய் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும், தாக்குதலின் பின்னர் இருவரும் அப்பிரதேசத்தை விட்டுத்தலைமறைவாகியுள்ளதாகவும் இரத்தினபுரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (த)

# சு.கவை பிளவுபடுத்தினால் மகிந்தவின் மீது நடவடிக்கை

### மத்திய, நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கும் என்கிறார் எஸ்.பி

கொழும்பு, பெப். 17
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முயற்சித்தால் கட்சியின் மத்திய மற்றும் நிறைவேற்றுக் குழுவினூடாக மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியும் என்று அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்மத்தியகுழுஉறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்க நேற்று எச்சரிக்கை விடுத்தார்.
சு.க. பிளவுபட்டால் எதிர்காலம் இல்லாமற் போய்விடும். ஐக்கிய தேசியக் கட்சி பலமடையும். எனவே, காலைவாரும் நடவடிக்கையைக் கைவிட்டு, மைத்திரியுடன் இணைந்து மகிந்த செயற்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
மேலும், சு.கவின் தலைமைப் பதவியை மைத்திரி பறித்தெடுக்கவில்லை. ஷிரந்தியையும் நாமலையும் பாதுகாக்கவே மகிந்த பதவியைத் துறந்தார் என்ற தகவலையும் எஸ்.பி. வெளியிட்டார். இருப்பினும், நாமல் தொடர்பில் கருத்து வெளியிட அவர் மறுத்து விட்டார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்ட விடயங்களை அவர் தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் மொஹான்லால் கிரே, ஐ.ம.சு முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமால் குணசேகர ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அமைச்சர் எஸ்.பி. நீர்கொழும்பில் மகிந்த தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 1,400 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பங்கேற்றதாகக் கூறினர். அது பொய்யாகும். 550 பேரளவிலேயே பங்கேற்றனர். ஏனையோர் பங்கேற்கவில்லை. இந் நிலையில், 1,400 பேர் பங்கேற்றனர் என மகிந்த தரப்பினர் கூறியுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த மகிந்த தரப்பினர் இனவாத பரப்புரையை முன்னெடுக்கின்றனர். இதற்கு இடமளிக்கமுடியாது. மகிந்த, கோத்தா, படையினர் ஆகியோருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுகின்றார். சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு இந்த நிலைமையை அவர் ஏற்படுத்தியுள்ளார்.
இந்நிலையில், சு.கவைப் பிளவுபடுத்தும் செயற்பாடுகளில் எவரும் ஈடுபடக்கூடாது. கட்சியின் ஆலோசகர் என்ற வகையில், கட்சித்தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து மகிந்த செயற்படவேண்டும். சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று கட்சியைச் சிறப்பாக வழிநடத்தக்கூடிய தலைமைத்துவம் மைத்திரியிடமே உள்ளது. எனவே, காலைவாரும்செயற்பாடுகளைக் கைவிட்டு மகிந்த ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஏனெனில், சுதந்திரக் கட்சி பிளவுபட்டால் ஐ.தே.கவுக்கே இலாபம். இதைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

**சந்திரிகாவுக்காக வைத்த ஆப்பில் மாட்டிய மகிந்த**

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவியை நிறைவேற்று அதிகாரத்தினூடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பறித்தெடுத்துக் கொண்டார் என மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அவ்வாறு இடம்பெறவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் மகிந்தவால் கொண்டுவரப்பட்ட திருத்தம்தான் அவருக்கு இந்த நிலையை ஏற்படுத்தியது.
நாட்டின் ஜனாதிபதியே சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் என்றும், ஜனாதிபதி பதவி இல்லாதுபோகுமிடத்து, சு.க. தலைவர் அந்தப்பதவியிலிருந்து விலகி கட்சியின் ஆலோசகராக செயற்பட வேண்டும் என்றும் யாப்பில் திருத்தங்களைச் செய்தார் மகிந்த. அதற்கமைய் சந்திரிகா செயற்பட்டார். அதுதான் இன்று மகிந்தவுக்கும் நடந்துள்ளது.

**ஷிரந்தி, நாமலை பாதுகாக்கவே பதவி துறந்தார் மகிந்த**

மேலும்தனது பாரியாரான ஷிரந்தி ராஜபக்ச மற்றும் தனது மூத்த புதல்வரானநாமல் ராஜபக்ச ஆகியோரைப் பாதுகாக்கத்தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைமைப் பதவியை மகிந்த ராஜபக்ச துறந்தார். இருப்பினும், தலைமைப் பதவியை மைத்திரி தன்னிடமிருந்து பறித்துக் கொண்டார் என்று மகிந்த கூறுகின்றார்–என்றார்.
நாமல் ராஜபக்சவைப் பாதுகாப்பதற்காக மகிந்த பதவியை துறந்தார் என்று குறிப் பிட்டீர்கள். அது என்ன விடயம் என்று குறிப்பிட முடியுமா என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் எஸ்.பியிடம் கேள்வி எழுப்பினார்.
இதற்கு பதிலளிக்க மறுத்த அவர், நாமல் விவகாரம் குறித்து குறிப்பிட முடியாது. என்றார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப்பிளவுபடுத்த முயற்சித்தால் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப்பதிலளித்தஅவர், மகிந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம். கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் நிறை வேற்றுக் குழு அதற்கான நடவடிக்கையை எடுக்கலாம்.ஆனால், அதற்கான தேவை இல்லை. ஏனெனில், கட்சிக்குள் பிளவுபட்டு செயற்பட்டாலும், தேர்தல் வந்துவிட்டால் இறுதியில் ஒன்றாகவே இணைவோம்–என்றார். (த–சி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி–மகிந்த நட்புக்கு உதவி கோரினார் ஷிரந்தி

### முன்னாள் எம்.பி. ஹேமால் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்துமாறு மகிந்தவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச தன்னிடம் தொலைபேசி யில் கூறியதாக ஐ.ம.சு முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமால் குணசேகர நேற்றுமுன்தினம் தகவல் வெளியிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்துமாறு மகிந்தவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ச என்னிடம் தொலைபேசிமூலம் கோரினார். இதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியினூடாக தொடர்புகொண்ட நான், சந்திப்புக்கான திகதியொன்றைப் பெற்றுக் கொண்டேன். இதற்கமையத்தான் சபாநாயகர் இல்லத்தில் இருவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் ஷிரந்தி ராஜபக்சவும் கலந்து கொண்டார். நானும்கலந்துகொண்டேன். இதன் போதுதான் மகிந்த ராஜபக்சவுக்கு (கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட) வேட்புமனு கிடைத் தது–என்றார். (த–சி)

# தாஜுதீன் கொலை வழக்கின் விசாரணைகளில் தாமதங்கள்

### சி.சி.ரீ.வி. வீடியோக்கள் வெளிநாட்டுக்கு பகுப்பாய்வுக்கு அனுப்பப்படவில்லை

கொழும்பு, பெப். 17

ரகர் வீரர் வசிம் தாஜுதீனின் கொலை வழக்குத் தொடர்பான அறிக்கையொன்றை பெறுமாறு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தர விட்டு ஒரு மாதம் கடந்தும், இன்னமும் அவை பகுப்பாய்வுக்காக வெளி நாட்டுக்கு அனுப்பப்படவில்லை. வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வசிம் தாஜுதீனின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை கடந்த ஜனவரி 7 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது, இந்தக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பயணித்த காட்சி தொடர்பான சி.சி.ரீ.வி வீடியோக்களை வெளிநாட்டு ஆய்வு கூடத்துக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழக்கு விசாரணை இடம்பெற்றது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்ற வசிம் தாஜுதீனின் கொலை தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணை மூலம் கிடைத்த சீ.சீ.ரீ.வி. வீடியோக்கள் கொழும்பு பல்கலைக்கழக கணினிப் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான அறிக்கையைக் கொழும்பு பல்கலைக்கழகம் கடந்த ஜனவரி 7 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு வழங்கியிருந்தது.

இந்த வீடியோக்களை மேலதிக ஆய்வுக்காக அமெரிக்கா மற்றும் கனடா மெட்ரோ பொலிட்டன் ஆகிய நிறுவனங்களுக்கு அனுப்புமாறு கொழும்பு பல்கலைக்கழகக் கணினிப் பிரிவு பரிந்துரை செய்திருந்தது.

அவற்றைப் குற்றப் புலனாய்வுப் பிரிவு இதுவரை பெறாததால் அவற்றை நீதிமன்றப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்குமாறு நீதிமன்றம் இறுதியில் பணித்துள்ளது.

தாஜுதீன் கொலை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தினர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## மைத்திரிக்கு நோபல் பரிசு கிடைக்கவும் வாய்ப்புண்டு

### கடுவலை முன்னாள் மேயர் கூறுகிறார்

கொழும்பு, பெப்.17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதற்காக அவருக்கு நோபல் பரிசு கூடக் கிடைக்கலாம் என கடுவலை மாநகர சபையின் முன்னாள் மேயர் ஜீ.எச். புத்ததாச தெரிவித் துள்ளார். குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மைத்திரிபால சிறி சேனவிடம் வழங்கிய பின்னர், அவரைக்கட்சியைக் கொண்டு நடத்த வழி விடவேண்டும்.

மேலும், மகிந்த ராஜபக்ச கனவானைப் போல் மரியாதை யாக இருந்து கொண்டு கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல, ஜனாதிபதிக்கு உதவவேண்டுமே அன்றிக் காலைப் பிடித்து இழுத்து வீழ்த்த முனையக்கூடாது.

இந்தநிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது, அதிகாரத்தை அதிகரித்துக்கொள்வதற்குப் பதிலாகக் குறைத்துக்கொண்டுள் ளார். ஜனாதிபதி ஒருவர் 6 ஆண்டுகள் ஆட்சியில் இருப்பதை 5 ஆண்டுகளாகக் குறைத்துள்ளார். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசமைப்புக்குப்பதிலாக ஜனநாயக ரீதியான அரசமைப்பு ஒன்றைக்கொண்டு வர ஜனாதிபதி முயற்சித்து வருகிறார்–என்றார். (தி)

## புத்துயிர் பெறும் லசந்த படுகொலை விசாரணை

கொழும்பு, பெப். 17

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பொலிஸார் மேலும் சிலரது வாக்குமூலங்களைப் பதிவு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

லசந்தவின் கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள புலனாய்வுப் பொலிஸ் குழு நுவரெலியா மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் ஒருவர் உட்பட பத்துப் பேரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிச்சை ஜேசுதாசன் என்பவர் மரணமடைந்ததையடுத்து நுவரெலியா மாவட்டத்திலுள்ள அவரது சொந்த ஊரின் கிராமசேவையாளரினதும் ஜேசுதாசன் நெருங்கிப் பழகியிருந்த ஏனைய ஒன்பது பேரினதும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

ஜேசுதாசனின் தேசிய அடையாள அட்டையைக் களவாடி அதன்மூலம் ஐந்து தொலைபேசி சிம் கார்ட்டுகளைப் பெற்றுக்கொண்டவரே இந்தக் கொலையின் பிரதான சூத்திரதாரியாக சந்தேகிக்கப்படுகிறார்.

எனவே, அந்த அடையாள அட்டையைக் களவாடியவர் எவர் என்பதைக் கண்டுபிடிக்கவே இந் தப் பத்துப் பேரின் வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (த–சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசமைப்புச் சீர்திருத்தம்; அக்கறை கொள்வோம்

அரசமைப்புச்சீர்திருத்தம் குறித்து, வடபகுதி மக்கள் கருத்துக் கூறுவதற்கு இன்று மட்டுமே அவகாசம் உள்ளது. எனினும் அவர்கள் எழுத்து மூலம் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான கால எல்லை, அடுத்தமாதம் பத்தாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை இன மக்களுடன் ஒப்பிடும் போது, தமிழ் மக்கள் தமது கருத்தை முன்வைப்பது மிகக்குறைவாகவே உள்ளது. அது குறித்துப் பெரிய அளவில் அக்கறை காட்டுவதாக இல்லை.

இந்த நிலைமை எமது தரப்புக்குப் பெரும் பின்னடைவை உண்டாக்கும் என்பதை எல்லோரும் உள்ளார்ந்து உணர வேண்டிய வேளை இது. நல்ல தருணத்தை நழுவ விடுவது ஒவ்வாத போக்கு ஆகும்.

எமக்குரிய இராச்சியத்தை நாம் திரும்பக் கேட்பதற்கு இது உகந்த சந்தர்ப்பம் என்று கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சமஷ்டித் தீர்வின் ஊடாக, ஒரே நாடாக வாழ்வதற்கு விரும்புகிறோம்--என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார்.

தனிநாடு வேண்டுமாயினும் துணிவுடன் சொல்லுங்கள். எமக்குக் கிடைக்க வேண்டிய தீர்வை நாமே கேட்டுப் பெறவேண்டும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலியுறுத்தி உள்ளார்.

தமிழீழத்துக்கு நிகரான அதிஉச்ச சமஷ்டி ஆட்சி முறைமையையே, தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதாக, சட்டத்தரணி க.சுகாஷ், புதிய அரசமைப்புக்கு மக்கள் கருத்து அறியும் அமர்வில் தெரிவித்தார்.

இதேவேளை-

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் பொருட்டுக் கருத்தறியும் குழு குறித்து, எமது மக்கள் அக்கறை காட்டாது இருப்பதால் முழு நட்டமும், எமக்கும், எமது இளம் தலைமுறையினருக்குமே ஏற்படும்.

சமகால உலகின் அரசியல் போக்கில், தற்போது தாக்கமான காலச்சூழ்நிலை நிலவும் இந்த வேளையை, நாம் எமக்குச் சார்பாக பயன்படுத்திக் கொள்வதே பொருத்தம்.

அரசியலாளர்களிடம் மட்டுமன்றி, கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள், சமயப் பிரமுகர்கள், பொருளியலாளர்கள் என்று சமூக அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் இது குறித்து அக்கறை காட்டி, முன்னிலையில் நின்று செயற்பட வேண்டிய வேளை இது.

போனால் வராது; பொழுதுபட்டால் கிட்டாது என்ற நிலை மேலெழுவதற்கு இடம் அளிக்காமல் இருப்பது மிகவும் இன்றியமையாததும், காலத்தின் தேவையுமாகும்.

அரசமைப்புச் சீர்திருத்தம் எல்லாக் காலத்திலும் கைக்குக் கிடையாது. போனால் கிடையாது பொழுதுபட்டால் கிட்டாது என்ற நிலையை நாமே உற்பவிக்கக்கூடாது. மனதார்ந்து செயற்படுவோமாக.

# புதிய கட்சி ஆரம்பிக்கும் ராஜபக்ச தரப்பினருக்கு எங்கிருந்து பணம் வருகிறது?

## அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ள கேள்வி இது

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றின் அரசியல் கட்டுரையில் இருந்து ரெங்கன்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கடிவாளத்தைத் தமது கையில் எடுத்துக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நடத்தி வருகின்ற இருமுனைப் போராட்டமானது அதன் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அதற்கு அடையாளமாக பல மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் அரசியல் பணிகளுக்கான பணிமனை யொன்றை மகிந்த ராஜபக்ச திறந்து வைத்திருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறான கூட்டங்களுக்குச் செல்வோர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும், கட்சியிலிருந்து நீக்கப்பட நேரும் என்றெல்லாம் மறைமுகமாக விடுக்கப்பட்ட எச்சரிக்கை எதனையும் அந்தக் கட்சியின் பல சிரேஷ்ட உறுப்பினர்களும் இளம்உறுப்பினர்களும் கூட அசட்டை செய்துவிட்டனர்.

பத்தரமுல்லவில் ஜயந்திபுர என்ற இடத்தில் இந்தப் புதிய பணிமனையை மகிந்த ராஜபக்ச திறந்து வைக்க நாராஹேன்பிட்டி அபயராம விகாரை பிரதம குருவின் தலைமையில் புத்தகுருமார் பிரித் ஓதினார்கள்.

கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த பவித்ரா வன்னியாராச்சி, ராகித அபேகுணவர்த்தன, உதயகம்மன்பில, பந்துல குணவர்த்தன, திலும் அமுனுகம போன்ற பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள்.

### புதிய கட்சியின் சின்னம் தாமரை மொட்டு

புதிய கட்சியின் சின்னம் தாமரை மொட்டாக இருக்கும் என்று எதிர்வு கூறப்படும் அதேசமயம், புதிய பணிமனை அமைந்துள்ள இடமும் நெலும் பொக்குன (தாமரைத் தடாகம்) மாதவயில் அமைந்துள்ளது. நல்லாட்சி அரசின் பக்கம் தமது விசுவாசத்தை மாற்றிக் கொண்டவர்கள் அனைவரையும், கூட்டு எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்த மகிந்த ராஜபக்ச, இது குறித்து விரைவாக ஒரு முடிவுக்கு வரும்படியும் கேட்டுக்கொண்டார். புதிதாக அமையவிருக்கும் கட்சியில் மகாஜன எக்சத் பெரமுன, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் இணைந்து கொள்ளவிருப்பதாகத் தெரியவருகின்றது.

தாம் எப்போதுமே மக்களுடன் தான் இருப்பார் என்று உறுதியளித்த மகிந்த ராஜபக்ச, ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டணியினர் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்துவிட வேண்டும். நாட்டின் நலனுக்காக இதைச் செய்யும்படியும் சொன்னார்.


> ராஜபக்ச தரப்பினர் இப்போது புதிய கட்சியை உருவாக்க எத்தணித்துவரும் நிலையில் இவர்களுக்கு சீனா நிதி உதவிகளை வழங்குகிறதா என்ற சந்தேகம் புலனாய்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பேசிய கூட்டு எதிர்க்கட்சித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, தாங்கள் நடத்துகின்ற போராட்டத்துக்கு தலைமை வழங்கி செயற்படும்படி ராஜபக்சவைக் கேட்டுக்கொண்டார். முறையான நிர்வாகமில்லாமையால் சீர்குலைந்துபோயுள்ள நாட்டின் பொருளாதாரத்தை சீரமைக்க அவரது தலைமைத்துவம் அவசியப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

### பண உதவி புரிபவர் யார்?

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ராஜபக்ச தரப்பினருக்கு யார் ஆதரவு வழங்கி வருகிறார்கள் என்பது பற்றிய சந்தேகம் எழுந்துள்ளது. இலங்கையிலும் இதர அண்டை நாடுகளிலும் புவி சார் அரசியல் நிலமைகளைத் தீர்மானிப்பதில் இந்தியா பிரதான பங்கு வகிக்கிறதென்பது இரகசியமன்று. மாறாக நாடுகளின் புவிசார் பொருளாதார விடயங்களில் சீனா அக்கறை காட்டி வருகின்றது. எவ்வாறாயினும் கடந்த இரண்டு ஆண்டுகளாக சீனா தனது வெளியுறவுக் கொள்கையிலும் பிராந்திய அரசியலில் தலையிடுவதிலும் பெரியளவில் மாற்றங்களை மெதுவாகச் செய்து வருகின்றது. உலகம் முழுவதும் உள்ள நாடுகளின் கொம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு சீனா சிறியளவில் நிதி வழங்கி வருவது தெரிந்த விடயம்.

ஆனாலும் இதுவரை அந்த நாடுகளின் அரசியல் விளையாட்டில் சீனா, இறங்கியிருப்பதாகத் தெரியவரவில்லை. இருந்தபோதிலும் இந்தக் கொள்கைகள் பெரியளவில் மாற்றத்துக்குள்ளாகி இருப்பதுடன், இந்தப் பிராந்தியங்களில் மாற்றத்துக்குரிய அதிகாரத் தளங்களை உருவாக்கவும் நிதி வசதிகளைக் கொடுத்துதவும் சீனா எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இவ்வாறான மாற்றங்கள் இந்தியா மற்றும் இலங்கையின் புலனாய்வுத் துறையினரை எச்சரிக்கை கொள்ளச் செய்துள்ளன. குறிப்பாக இந்த நாடுகளில் அரசியல் மாற்றங்கள் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் இடம்பெற்று வருவது காரணமாக ராஜபக்ச தரப்பினர் இப்போது புதிய கட்சியை உருவாக்க எத்தனித்து வரும் நிலையில், இவர்களுக்கு சீனா நிதி உதவிகளை வழங்குகிறதா என்ற சந்தேகம் புலனாய்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மற்றும் விமல் வீரவன்சவினால் தலைமை வகிக்கப்படும் தேசிய சுதந்திர முன்னணிக்கு பெரும் தொகை வெளிநாட்டுப் பணம் கிடைத்திருப்பதாக அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கடும்போக்கில் சிறிசேன**

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிய கட்சியில் இணையப் போவதில்லை என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்று ஜனாதிபதி தமது இல்லத்தில் இடம்பெற்ற சில கூட்டங்களில் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இன்னமும் நான்கு அல்லது ஐந்து பேர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை வழங்கும்படி மலிக் சமர விக்கிரமவிடம் கெஞ்சி வருகிறார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார். கட்சியின் தலைமைத்துவத்தைப் புறக்கணித்து அவருடைய கட்டளைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும் உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதில் ஜனாதிபதி சிறிசேன இப்போது இறங்கியிருப்பது தெரிகின்றது.

கட்சித் தலைமையை எனக்கு வழங்கினால் கட்சியின் விடயங்களைக் கையாள்வதற்கும் எனக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைத் தான் நான் முதன்முறையாக தலைமை வகித்து நடத்தப்போகிறேன். கட்சியில் இருக்கும் அனைவருக்கும் வேட்புரிமை வழங்குவேன். வெற்றியை நோக்கிக் கட்சியை முன்னகர்த்துவது எப்படி என்று எனக்குத் தெரியும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உடைத்துக்கொண்டு வெளியேறியவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் எனக்குத்தெரியும். அப்படியானவர்கள் சந் திரிகா குமாரதுங்க முதற்கொண்டு மீண்டும் கட்சிக்குத் திரும்ப வேண்டி ஏற்பட்டது.

கட்சியின் வரலாறு அறிந்தவர்கள் அதனை உடைக்க முனையமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

**புதிய பொலிஸ்மா அதிபர் யார்?**

கடந்த ஒரு வருடகாலமாக நல்லாட்சியாளரின் கொள்கைகளுக்கு அமைவாக செயற்படாத திணைக்களமாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வந்த சட்டமா அதிபர் திணைக்களத்தைத் தவிர வேறு எதுவுமிருக்குமானால் அதுவே பொலிஸ் திணைக்களமாகும். இப் போதைய பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் வரும் ஏப்ரல் மாதம் ஓய்வு பெறவிருப்பதையடுத்து அதன்மீது அனைவரின் கவனமும் திரும்பியுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஏற்கனவே புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டு விட்டார். பதவியில் இருக்கும் இப்போதைய பொலிஸ்மா அதிபரின் பதவிக் காலத்தில்தான், தாஜுதீன் கொலை ஒரு விபத்து என்று கூறப்பட்டது போன்று பல விடயங்கள் மூடி மறைக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்துள்ளது. இவரது இடத்தில் அமரப்போகிறவர், முன்பு முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் மிக சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அதிபரான எஸ்.எம்.விக்கிரமசிங்க ஆவார். தாஜுதீன் கொலையில் பல ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகங்கள் ஏற்பட்டிருப்பதால் விக்கிரமசிங்கவை அந்த உயர் பதவிக்கு நியமிப்பதானது சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாவலர்களாய் இருந்துள்ள பல அதிகாரிகள் எவ்வாறு அளவுக்கு அதிகமாகச் சொத்துக்களை குவித்துக் கொண்டார்கள் என்பதைக் கண்டறிவதற்கான புலனாய்வுகளை ஏற்கனவே பெரிய நிதிமோசடிகள் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் பொலிஸ் பிரிவு ஆரம்பித்துள்ளது. விக்கிரமசிங்க தொடர்பான விரிவான புலனாய்வுகள் நடத்தப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்று.

ஜனாதிபதி சிறிசேன இந்த வருடத்தில் தம்து அரசினது வேலைத்திட்டங் களை மாற்றி அமைக்கப்போவதாக அண்மையில் ஒரு கூட்டத்தில் அறிவித்திருந்தார். கடந்த ஒரு வருடமும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்திருந்ததாக அவர் கூறியிருந்தார். எதிர்காலத்தில் முக்கிய கூட்டங்களைத் தவிர ஏனையவற்றில் அந்தப் பிரதேசங்களின் அமைச்சர்களே தமது சார்பில் கலந்து கொள்வார்கள் என்றும் கூறியிருந்தார்.

பணமோசடி மற்றும் சி.எஸ்.என். ஊடகத்துக்கு நிதி வழங்கியமை தொடர்பாக காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் புதல்வர் யோசித ராஜபக்சவைக் கடந்த வியாழக்கிழமை கடுவெல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தார்கள். முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவும் அவரது குடும்பத்தினர் மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்தவேளையில் வருகை தந்திருந்தார்கள். விசாரணையின் இடை நடுவில் இடைவேளை அறிவிக்கப்பட்டபோது, ராஜபக்ச தமது புதல்வருடன் உரையாட வசதி கிடைத்தது. உள்ளே என்ன நடக்கிறது என்று அவர் கேட்டதற்கு உள்ளே இருக்கும் ஏனையவர்களுக்குப் போலன்றி தங்களுக்கு மிகக் குறைந்த வசதிகளே வழங்கப்படுவதாக யோசித தெரிவித்தார். தாங்கள் நன்றாக உறங்கக்கூட விடப்படுவதில்லை, காவலர்கள் ஷிப்ட் முறையில் வேலை செய்வதால் பணிமாறி வருபவர்கள் நடுஇரவிலும்கூட பெயர் வாசித்துக் கூப்பிடுகிறார்கள். இரகசியக் கைபேசி வைத்திருக்கின் றோமா என்பதைக் கண்டறிய எப் போதுமே ஆராய்ந்து வருகிறார்கள் என்று அவர் கூறியதைக் கேட்ட ராஜபக்ச மௌனமாகி விட்டார்

## வீதிகளில் பயணிப்பது ஆபத்தானதாக மாறிவிடுகின்ற காலம் விரைவில்

வாகன விபத்துக்களில் சிக்கி சாவைத் தழுவிக் கொள்பவர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துச் செல்கின்றது. இதைப் பார்க்கும்போது இயற்கையாக சாவைத்தழுவிக்கொள்பவர்களைவிட விபத்துக்களில் சாவடைபவர்களின்எண்ணிக்கை அதிகரித்து விடுமென எண்ணத் தோன்றுகின்றது.

மனிதர்களின் பாவனைக்கு வாகனங்கள் தேவை தான். ஆனால் அளவுக்கு மீறிய வாகனங்களின் பாவனையால் வீதிகள் கடுமையான நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. அத்துடன் வாகனங்களைச் செலுத்துபவர்களின் கவனக்குறைவால் விபத்துக்கள் ஏற்பட்டு பெறுமதி வாய்ந்த உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்படுகின்றன.

வீதிகளில் அதிக வேகமாகச் செல்கின்ற வாகனங்கள் விபத்துக்கள் ஏற்படுவதற்குப் பிரதான காரணங்களாக விளங்குகின்றன. பொறுப்பற்ற வகையில் இவ்வாறு வாகனங்களைச் செலுத்திச் செல்பவர்கள் தாமும் உயிரை இழந்து பிறரையும் சாகடித்து விடுகின்றனர்.

இன்றைய நிலையில் வீதிகளில் நடந்து செல்வதுகூட பாதுகாப்பில்லாத நிலையில் காணப்படுகின்றது.

எந்த வேளையிலும் ஏதாவதொரு வாகனம் மோதி விடுமோ என்ற அச்சம் மக்களின் மனங்களில் காணப்படுகின்றது.

முன்பெல்லாம் வீதிகள் மேடு பள்ளம் நிறைந்ததாகக் காணப்பட்டன. இதனால் வாகனங்களை வேகமாகச் செலுத்த முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால் போர் ஓய்ந்த பின்னர் வீதிகள் காப்பெற் இடப்பட்டு நவீனமயமாக்கப்பட்டதால் போக்குவரத்தில் இருந்த சிரமங்கள் நீங்கி விட்டன.

ஆனால் ஆபத்து வேறு உருவத்தில் வந்துள்ளது. காப்பெற் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் அதிவேகமாகப் பயணிக்க ஆரம்பித்து விட்டன. இதனால் விபத்துக்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. இங்கே உள்ளவை காப்பெற் வீதிகள் என்பதை மறந்து அதிவேக பாதையில் செல்வது போன்று எம்மவர்கள் வாகனங்களைத் துரத்துகின்றனர். இதன் காரணமாகவே விபத்துக்கள் சாதாரணமாக இடம்பெறுகின்றன.

மேலும் சாரதிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்ற அனைவரும் சாரதியத்துக்குரிய தகைமையைப் பெற்றவர்களாகக் கருதமுடியாத ஒரு நிலையும் காணப்படுகின்றது. இதுவும் விபத்துக்கள் ஏற்படுவதற்குப் பிரதான காரணமாக அமைந்து விட்டது.

இன்றுள்ள நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் வீதிகளில் பயணிப்பவர்களின் நிலை விரைவிலேயே மோசமாக மாறிவிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ப.ரவிகரன், சுன்னாகம்

## உதயனிலும் மின்தடை அறிவித்தல்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (14.02.2016) எமது பகுதியான நல்லூர்ப் பிரதேசத்தில் சில இடங்களில் மின்சாரம் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை தடைப்பட்டிருந்தது. முன்னறிவித்தலின்றி தடைப்பட்டிருந்ததாக நான் நினைத்த வேளையில் உதயன் தவிர்ந்த ஏனைய பத்திரிகைகளில் மின்தடை பற்றிய அறிவித்தல் சனிக்கிழமை (13.02.2016) பிரசுரமாகியிருந்ததாகக் கேள்விப்பட்டேன். எல்லாப் பத்திரிகைகளையும் நான் பார்ப்பதில்லை. உதயன் மட்டுமே நான் பார்ப்பேன். எனவே மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் நாள்களில் முன்னறிவித்தலாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் அனைத்துப் பத்திரிகைகளிலும் அது குறித்த முன்னறிவித்தலைப் பிரசுரிக்கும்படி மின்சார சபை அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றேன்.

கூ.மைக்கல், நல்லூர்

## கடமை உணர்வும் சேவை மனப்பான்மையும்

எனது காலிலேற்பட்ட காயம் காரணமாக நடக்க முடியாது கஷ்டப்படுகின்ற என்னை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற நிர்ப்பந்திக்காமல், சகல சிகிச்சைகளையும் போதனா வைத்தியசாலையின்29ஆம்விடுதியில்வைத்துமனமுவந்துகருணையுடன் செய்து தருகின்ற மருத்துவர்களையும், அவர்களுடன் கடமையாற்றுகின்ற ஊழியர்களையும், மற்றும் சத்திர சிகிச்சைக் கூடத்தில் கடமையாற்றுகின்ற மருத்துவர்களையும், சக ஊழியர்களையும் அவர்களது கடமை உணர்வு குறித்துப் பாராட்டு கின்றேன். சம்பந்தப்பட்ட சகல ஊழியர்களுக்கும் இது சமர்ப்பணம்

இ.இராஜேந்திரா
சமாதான நீதிவான், தீவுமுழுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி வ.குணராஜா

# அறுபது ஆண்டுகளைக் கடந்த
# கைதடி நவீல்ட் பாடசாலை

குறைபாடுகள் என்பவை வெறுமனே குறைகளல்ல. நிறைவுகளை நோக்கி நிவர்த்தி காணச் செல்வதற்கான படிமுறைகளே என்பதை அறிந்து கொள்வது சமூகத்துக்குப் பொருத்தப்படான ஒரு விடயமாகும்.

1912 ஆம் ஆண்டு மேரி சாப்மன், செவிப்புலன் இழந்தோர்களுக்கான கல்வியை இரண்டு செவிப்புலன் இழந்த மாணவர்களுடன் தெகிவளையில் வாடகை வீட்டில் ஆரம்பித்தார். இதன் பின் ஆங்கிலேயே திருச்சபை செனானா மிஷனரி சங்கம் இரத்மலானையில் நிரந்தரப் பாடசாலையை நிறுவியதுடன், தமிழ் மாணவர்களின் தொகை அதிகரிப்பால் யாழ்.மாவட்டத்திலும் நவீல்ட் பிரபு என்பவரின் பண உதவியுடன் நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந் தோருக்கான பாடசாலை 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது வடமாகாணத்தில் காணப்படும் ஒரே ஒரு விசேட தேவையுடையோர் பாடசாலையாக கைதடிப் பதியினிலே அமைந்துள்ள பெருமையைக் கொண்டது. அன்றிலிருந்து இற்றை வரை அழகான கால ஓட்டத்தின் நகர்வுகள் மூலம் அகவை அறுபதுகளை நிறைவு செய்கிறது.

இங்கே கல்வி பயிலும் மாணவர்கள் யார்? எவ்வாறு தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்கள், இவர்களுக்கு எவ்வாறு கற்பிக்கப்படுகின்றது, இவர்களது இலட்சியங்கள் என்ன? சமூகத்தவர்களுடன் தொடர்பாடல் முறைகளை எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பவை பற்றி அறிந்து கொள்வது ஏனையோரின் அபிலாசையாக இருக்க முடியும் என்பது ஐயப்பாடான விடயமல்ல.

இவர்களது மொழி, சைகை மொழியாகும். விரல் மொழிகளிலிருந்து சைகைகள் உருவாகின்றன. இதனூடாக ஆசிரியர்கள் பாடத்திட்டங்களைத் தயார்ப்படுத்திக் கற்பிக்கின்றனர். தற்போது இலங்கையர் சைகைமொழி அகராதியைப் பயன்படுத்தி வருவதால், அரச பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சை வினாக்களை மொழிபெயர்க்கும்போது வினாக்களை விளங்கிக் கொண்டு உரிய வினாக்களுக்கான சரியான பதிலை எழுத முடியும் எனவும், வெளிநாடுகளுக்குச் சென்று மாணவர்கள் மேற்படிப்புக்களையும் தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மனப் படங்களூடாகவும், புலக் காட்சிகளூடாகவும் ஐந்து மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற வகையில் வகுப்பறையில் காட்சிப்படுத்தல் மூலம் கல்வி புகட்டப்பட்டு வருகின்றது. கல்விச் செயற்பாடுகள் மட்டுமல்லாது விளையாட்டுத் துறைகளிலும் முன்னேற்றம் காணப் படுகின்றது. இங்கு பயிலும் மாணவர்கள் தற்காப்புக் கலையில் தேசிய மட்டம் வரை போட்டியிட்டுத் தங்கம், வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுப் பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தருகிறார்கள். ஒழுக்கம், நற்பண்பு, ஆன்மிக சிந்தனையில் அன்புடன் நடத்தப்படும் மாணவர்கள் தமது எதிர்கால இலட்சியங்களைத் திட்டமிட்டுத் தமது வாழ்க்கைப் பயணத்தை அழகாகக் முன்னெடுத்துச் செல்கின்றனர். இதே போல, விழிப்புலனிழந்த மாணவர்கள் பலர் தமது உயர் கல்விக்காக பல்கலைக்கழகங்கள் சென்று பட்டதாரிகளாகவும், கல்விமான்களாகவும் திகழ்கின்றனர். இவ்வாறான சாதனை புரிபவர்களை, செவிப் புலன், விழிப்புலன் இழந்தவர்கள் என்று அழைப்பதைத் தவிர்த்து, 'மாற்றுத் திற னாளிகள்' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றார்கள்.




> 60 ஆவது ஆண்டு தினத்தையொட்டி நவீல்ட் பாடசாலையில் மாசி மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று கண்காட்சி ஒன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடத்தப்பட உள்ளது.

இங்கு குறிப்பிட்ட வயதில் மாணவர்கள் அத்தோடு இணைத்துக் கொள்ளப் படுவதற்காக இப்போது மாணவர்களுக்காக முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனேக மாக இவ்வாறான ஒரு பாடசாலை இருப் பது தெரியாதவர்கள் பலர் உளர். போக்குவரத்து வசதிகளால் சிரமப்படும் சின்னஞ்சிறிய மாணவர்கள் இதன் காரணமாகவே உரிய வயதில் பாடசா லையில் இணைக்கப்படாமல் உள்ளனர். உரிய வயதில் இணைக்கப்படுவதால் சிறந்த கல்வியைப் புகட்ட முடியும் என் பது நம்பிக்கை சார் விடயமாகும்.

இந்தப் பாடசாலையின் பல அதிபர்கள், ஆசிரியர்களின் அயராத முயற்சியினால் இத்தகைய சாதனைகளையும், சவால்களையும் முன்னோக்கிய பாடசாலை அறுபதுகளின் பின்னரும் செழுமையுடன் பூரித்து வாழ்வதுடன் பற்பல சாதனைகளில் நிறைவு காணச் செய்து, கல்விப் புலத்திலே முன்னேறி ஈன்றெடுத்த பெற்றோர் மனங்களை மகிழ்ச்சிப்படுத்தும்போது மழையாய் அழுத கண்ணீர் ஆனந்தமாய் மாறும்.

பாடசாலையின் வளர்ச்சிக்கும், பெருமிதத்துக்கும் அடிகோலுவது இந்த மாதுளைத் தேன் சரங்களான அன்புக்கும் அபிமானத்துக்குமுரிய மாணவச் செல்வங்களே. இவர்கள் அறுபதைத் தாண்டியும் புகழ் ஓங்கச் செய்பவர்களே.

60 ஆவது ஆண்டு தினத்தையொட்டி நவீல்ட் பாடசாலையில் மாசிமாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று கண்காட்சி ஒன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடத்தப்பட உள்ளது. அத்தோடு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8 மணிக்கு எமது பாடசா லைச் சிற்றாலயத்தில் நன்றி செலுத்தும் ஆராதனை இடம்பெறவுள்ளது.




## மீனம்

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் மீன ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். மீன ராசிக்கான பலன்கள் குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

### மே
ருண ரோக ஸ்தானமான 6இல் ராகு சஞ்சரிப்பதும், மாத பிற்பாதியில் 3இல் சூரியன் சஞ்சாரம்செய்வதும் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகளை ஏற்படுத்தும் என்பதால் ஓரளவுக்கு எதையும் சமாளித்துவிட முடியும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கப்பெறும். உடல் ஆரோக்கிய பாதிப்புகளால் சிறுசிறு மருத்துவச் செலவுகள் உண்டாகும். குடும்பத்திலுள்ளவர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்துகொள்வது நல்லது.

### ஜூன்
பாக்கிய ஸ்தானமான 9இல் செவ்வாய், சனி சஞ்சரிப்பதும் மாத முற்பாதியில் 3இல் சூரியன் சஞ்சாரம் செய்வதும் ஓரளவுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் விலகி முன்னேற்றமும் அபிவிருத்தியும் பெருகும். பெரிய மனிதர்களின் தொடர்பு மகிழ்ச்சியளிக்கும்.

### ஜூலை
ஜென்ம ராசிக்கு 4இல் சூரியனும், 6இல் குருவும் சஞ்சரிப்பதால் எதிலும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. தேவையற்ற அலைச்சல், பதட்டங்கள் அதிகரிக்கும். நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்திலும் சிறுசிறு பாதிப்புக்கள் தோன்றிமறையும். கொடுத்த வாக்குறுதிகளை ஓரளவுக்கு காப்பாற்றிவிட முடியும். சுபகாரிய முயற்சிகளில் தடைகள் நிலவும். உத்தியோகத்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகளில் தாமதநிலை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்களால் வீண்செலவுகள் ஏற்படும். சிவபெருமானை வழிபடுவது சிறந்தது.

### ஓகஸ்ட்
ஜென்ம ராசிக்கு 2-ஆம் திகதி முதல் 7இல் குரு சஞ்சரிப்பதும், மாத பிற்பாதியில் 6-ல் சூரியன் சஞ்சாரம் செய்வதும் ஓரளவுக்கு அனுகூலத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். தொழில், வியாபாரரீதியாக முன்னேற்றங்களை அடையமுடியும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் சற்று திருப்தியான நிலை உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை ஓரளவுக்கு சுமாராக இருக்கும். எதிர்பாராத பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் அதன் மூலம் அனுகூலமான பயன்களை அடைய முடியும்.

### செப்ரெம்பர்
ஜென்ம ராசிக்கு 7இல் குரு சஞ்சரிப்பதும், 6இல் சூரியன், ராகு சஞ்சாரம் செய்வதும் அற்புதமான அமைப்பாகும். எதிர்பாராத வகையில் பணவரவுகள் ஏற்பட்டு பொருளாதார நிலை உயரும். நெருக்கடிகள் குறையும். எடுக்கும் காரியங்களில் வெற்றிகிட்டும். நெருங்கியவர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. கொடுக்கல் வாங்கல்களில் பெரிய தொகைகளை ஈடுபடுத்தி நல்ல இலாபம் காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஒக்ரோபர்
மாதக்கோளான சூரியன் சாதகமின்றிச் சஞ்சரித்தாலும், 7இல் குரு, 10இல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதால் பணவரவுகள் சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். கணவன்- மனைவியிடையே ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிதரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும். பொன், பொருள் சேரும். சிலருக்கு வீடு, மனை, வண்டி வாகனங்கள் வாங்கக் கூடிய யோகம் உண்டாகும்.

### நவம்பர்
மாதக்கோளான சூரியன் 8-ல் சஞ்சரித்தாலும் 7இல் குரு, 11இல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதால் தொழில், வியாபாரரீதியாக முன்னேற்றங்கள் உண்டாகும். கூட்டாளிகள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். தேவையற்ற அலைச்சல்களால் உடல் நிலையில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டு, மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். கணவன்- மனைவியிடையே ஒற்றுமை நிலவும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமைவதால் குடும்பத் தேவைகளனைத்தும் பூர்த்தியாகும்.

### டிசெம்பர்
மாதக்கோளான சூரியன் 9, 10-ல் சஞ்சரிப்பதும் 7இல் குரு, 10இல் சுக்கிரன் சஞ்சாரம்செய்வதும் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தை ஏற்படுத்தும். மங்கலகரமான சுபகாரியங்கள் கைகூடும். தொழில், உத்தியோக ரீதியாகவும் புதிய வாய்ப்புகள் தேடிவரும். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம்செலுத்துவது நல்லது. நெருங்கியவர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சி அளிக்கும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பது அலைச்சலைக் குறைக்க உதவும். பெரிய மனிதர்களின் தொடர்புகள் மகிழ்ச்சியளிக்கும்.

*முற்றும்*



# இறைவனின் கையில்தான் தமிழர்களின் தீர்வு

சாம் ரமேஸ்குமார்

நல்லாட்சி என்பது தமிழரைப் பொறுத்த மட்டில் வார்த்தையில் தான் மலர்ந்திருக்கிறதே தவிர, அரசியல் செயற்பாடுகளில் அல்ல. வார்த்தைக்கு வார்த்தை தமிழ் அரசியல் தலைவர்கள் மைத்திரியின் நல்லாட்சி பற்றி என்னதான் புகழ்ந்தாலும், அந்த நல்லாட்சியால் முழுமையாக நன்மை பெறுவது பெரும்பான்மையின சிங்கள மக்களே ஆவர். இறையாட்சியைத் தவிர எந்த ஆட்சி வந்தாலும், தமிழர் நிலை ஒரு போதும் மாறாது என்பதைத் தமிழர் தரப்பு முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**உரிமை மறுக்கப்பட்ட இனம்**

ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பது ஒரு சரீரத்தினுடைய வளர்ச்சியைப் போன்றது. ஒரு சரீரத்தின் எந்தப் பாகமாவது பாதிக்கப்பட்டால் அது முழுச் சரீரத்தையுமே பலவீனப்படுத்திவிடும். அதைப் போன்றே இந்த இலங்கைத் தேசத்திலும் காலம் காலமாய் ஒரு பாகமாக, தமிழர்களும் வடக்கு - கிழக்கு என அழைக்கப்படும் தங்கள் தாயக பூமியில் மிகப் பரவலாக வாழ்ந்து வருகின்றார்கள். தமிழர்கள் தங்கள் தேசத்தில் உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனமாக இருப்பதால், இலங்கைத் தேசம் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக சர்வதேசத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு பலவீனமான தேசமாகக் கண்காணிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இனியும் கண்காணிக்கப்பட்டுத்தான் வரப் போகின்றது.

சரீரத்துக்குள் ஓடிய தமிழர்களின் குருதியானது தேசத்தில் ஓடியபோதெல்லாம், மூன்று தசாப்தங்களுக்கு மேல் இதுவரை ஆட்சிக்கு வந்த எந்தவொரு பெரும்பான்மை அரசும் தமிழருடைய உரிமைகளை சரிவரப்பகிர்ந்து இதயசுத்தியுடன் கொடுக்க ஒருபோதும் முன்வந்ததில்லை. தமிழர் தரப்பும் எப்படியாவது ஒரு தீர்வை பெற்றுவிட வேண்டுமென்று நினைத்தபோதெல்லாம் எந்தப் பயனும் கிட்டாது தோல்வியிலே துவண்டு போனதுதான் மிச்சம்.

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் விதியென்ற் ஒன்று இறைவனால் நிச்சயிக்கப்பட்டு இருப்பதுபோல், ஒவ்வொரு தேசத்துக்கும் இறைவனால் விதியொன்று நிச்சயமாக நிச்சயிக்கப்பட்டுத்தான் இருக்கின்றது. சில தேசங்கள் அவற்றின் உரிமைகளைப் போர் செய்து பெறுகின்றன. இன்னும் சில தேசங்கள் அவற்றின் விடுதலையை அகிம்சையால் பெறுகின்றன. அது அந்தந்தத் தேசங்களுக்கு இறைவனால் எழுதப்பட்ட விதியாகும்.

ஆனால், தமிழர் தேசம் அகிம்சை, ஆயுதமென இரு வழிகளிலும் போராடிப் பார்த்தது. இருந்தும் இந்த இரண்டு போராட்ட வழிகளும் தமிழருக்குத் தோல்வியையே பரிசாகக் கொடுத்தன. இனியும் கொடுக்கத்தான் போகின்றன. எனவே தமிழர் தேசத்துக்கும் இறைவனால் எழுதப்பட்ட விதி எதுவோ அதை இறைவன் ஒருவனே அறிவான்.

**மண் மீட்புக்கான மகாபாரதம்**

தமிழர்களின் அரசியல் பிரச்சினையை இறைவனே தனது சக்தி மூலம் தீர்த்து வைக்கக் கூடியவன் என்பதைத் தமிழர்கள்எப்போதும்உணர்ந்து கொள்ள வேண்டும். மனிதர்களின் முயற்சியானது ஒரு எல்லைக்குட்பட்டது என்பதை மண் மீட்புக்கான மகாபாரதம் மிக அழகாக உணர்த்துகின்றது.

தர்மத்தின் சாயலான பாண்டவர்கள், அதர்மிகளான கௌரவர்களால் வனத்துக்குள் துரத்தியடிக்கப்பட்ட போது இறைவனான ஸ்ரீ கிருஷ்ணனின் அருளால்தான் தங்கள் இராச்சியத்தை மீட்டெடுத்து சுதந்திரக் காற்றை சுவாசித்தார்கள் என்ற இறை வரலாற்றை தமிழர்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

> தமிழர்கள் தங்கள் தேசத்தில் உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனமாக இருப்பதால், இலங்கைத் தேசம் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக சர்வதேசத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு பலவீனமான தேசமாகக் கண்காணிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

**யோகர் சுவாமிகளின் பாடல்கள்**

தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் தமிழர்களின் சிரசைச் சுற்றியிருக்கும் நவக்கிரகங்களாகும். அந்த நவக்கிரகங்களால் எந்தத் தீர்வையும் தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியாது. வேண்டுமானால் தமிழர்களுடைய ஓர் அரசியல் அடையாளமாய்சர்வதேசத்தின் கண்ணோட்டத்துக்காக வலம்வரலாமே ஒழிய வேறொன்றையும் அவைகளால் சாதித்துவிட முடியாது. இதுவே கடந்த காலங்கள் எமக்குக் கற்றுத்தந்த பாடமாகும்.

சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெயி லெறிப்பது யாராலே
கண்ணினை கா்ண்பது யாராலே காற்று மடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்கள் நடப்பது யாராலே
கைகள் எடுப்பது யாராலே
எண்ணிப் பார்நீ யறிவாயோ
எல்லாஞ் சிவன் செயல்
குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே
சுவாமி வாக்கிது தெரிவாயே

என்கிறார் நற்சிந்தனையில்" ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகள். உண்மையில் இந்த உலகின் அனைத்து ஆசைகளும் இறைவனையே சார்ந்து இருக்கின்றபோது தமிழர்களுடைய தீர்வுத் திட்டமும் சுதந்திரமும் நிச்சயம் இறைவனையே சார்ந்திருக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. யோகர் சுவாமிகளின் பாடலும் அதைத்தான் தமி+ழர் களுக்கு எடுத்துக் காட்டு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சில் வசிக்கும் 104 வயது இரட்டையர்


பாரிஸ், பெப்.17
மத்திய பிரான்ஸ் ஒன்சைனில் பகுதியில் 104 வயதில் இரட்டையர்கள் வசித்து வருகின்றனர்.

போலட், சிமோன் எனப் பெயர்கொண்ட இவர்கள் 1912 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆடை வடிவமைப்பாளராகவும், மற்றொருவர் சிகை அலங்காரத் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது தனிமையாக வாழும் இவர்கள், நகர சபையின் உதவிப் பணத்தில் வாழ்ந்து வருகின்றனர். கடந்த மாதம் இவர்கள் தமது 104 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினர். நீண்டகாலம் உயிருடன் உலகில் வாழ்ந்த இரட்டையர்கள் எனும் பதிவில் இவர்கள் இன்னும் இடம்பெறவில்லை. ஆனால், இந்த பதிவுக்குத் தகுதியானவர்கள் என சர்வதேச ஊடகம் உன்று தெரிவித்திருந்தது.

இவ்வளவு வருடங்கள் தாம் உயிரோடு இருக்கக் காரணம், இளமையில் உடற்பயிற்சியில் அதிக ஆர்வம் காட்டி யதாகவும், ஜிம்னாஸ்டிக்கில் ஈடுபட்டதாகவும், மதுப்பாவனை தம்மிடம் இருக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

தற்போது புத்தகம் வாசிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது, கவிதை எழுதுவது என்பவற்றை பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர். முதியோராகிய தம்மிடம் எவரும் கதைத்துப் பேசுவதில்லை என மனக் கவலையை தெரிவித்துள்ளனர். (த-ரி4)



# ஐந்து வைத்தியசாலைகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்

## சிரியாவில் தொடரும் மோதல் நிலை
## 2 பாடசாலைகள் சேதம்; 50 பேர் சாவு



தமஸ்கு, பெப்.17
சிரியாவின் அலப்போ நகரில் ரஷ்யப் படைகள் சரமாரியாக குண்டுமழை பொழிந்துள்ளன. இந்தத் தாக்குதலில் 5 மருத்துவமனைகள் , 2 பாடசாலைகள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர் எனவும், பலர் காயமடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. வெடி குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் அதிகமானோர் சிறுவர்கள் என்பதால், இந்தத் தாக்குதல் தொடர்பில் ஐ.நா. அதிகாரிகள், ரஷ்யாவைக் குற்றம் சாட்டியுள்ளனர். தாக்குதல் தொடர்பான காணொலி வெளியிடப்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஐ.நாவின் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில்; சர்வதேச சட்டங்களை மீறிய வன்முறைச் செயல் இது எனத் தெரிவித்தார். சிரியாவில் ஏற்கனவே சுகாதார, மருத்துவ வசதிகள் முடக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் இவ்வாறான தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்தக் காணொலியில், அலப்போ நகரின் மீது வட்டமடிக்கும் போர் விமானம் குறிப்பிட்ட பகுதிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவது தெளிவாகக்காண்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்குண்டுத் தாக்குதலின் மூலம் அந்த பிரதேசத்தை அழிக்கும் காட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. சில வினாடிகளின் பின்னர் இதே செயற்பாடு தொடர்ந்தும் இடம்பெறுவது பதிவாகியுள்ளது.

காணொலியில் பார்வையிட்ட அவதானிகள், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் ரஷ்யாவுக்கு உரித்தானவை எனத் தெரிவித்தனர். மேலும், துருக்கி எல்லையான,



அசாஸ் பகுதியில் அமைந்த சிறுவர் மருத்துவமனை, பாடசாலை என்பவற்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு கர்ப்பிணிப் பெண் உட்பட 3 சிறுவர்கள் உயிரிழந்தனர்.

அலப்போ நகரில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு முகாமில் 5 ஏவுகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றள்ளன எனவும் அவதானிகள் தெரிவித்தனர்.

சிரியாவில் கிராமப் புறங்களில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்று வருகின்றது. இதனால் மக்கள் நகருக்கு வெளியே இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

பல சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், காயமடைந்த சிறுவர்களைத் துருக்கி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்ததாகவும் மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் 8 மருத்துவமனை ஊழியர்கள் காணாமற் போயுள்ளனர். 4 தடவைகள் மருத்துவமனை தாக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலால் 40 ஆயிரம் மக்கள் மருத்துவ வசதிகளி இன்றி பரிதவித்து வரு கின்றனர்எனவும்அவர்தெரிவித்தார். ஐரோப்பாவில் அகதிகள் நெருக்கடியை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான தொடர்த் தாக்குதல்கள் இடம்பெற்றுவருவதாக அமெரிக்கசெனட்டர்ஜோன்மெக்கெயின் குற்றஞ் சுமத்தியுள்ளார். (த-ரி4)

# அமெரிக்காவில் விலங்கு ஆடை அலங்கார நிகழ்வு



நியூயோர்க், பெப்.17
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தொண்டு நிறுவனம் ஒன்று மிருகங்களுக்கான ஆடை அலங்கார நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஆடை அலங்கார நிகழ்ச்சி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றிருந்தது. ஆடை அலங்கார அணி வகுப்பில் நாய், பூனைகள் என்பன பங்கெடுத்தன. வண்ண மயமான ஆடைகளுடன் விலங்குகள் கட்வோக்செய்தன. விலங்குகளுக்கான நிறச் சாயங்கள், சிகை அலங் காரங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

விலங்குகளைத் தெருவில் இருந்து மீட்கும் நிறுவனம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள் அநாதரவாகத் தெருவில் விடப்படுவதைக் கண்டிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (த-ரி4)

# கடும் பனிப்பொழிவால் தொடர் வாகன விபத்து

பென்சில்வேனியா, பெப்.17
பென்சில்வேனியாவில் இடம்பெற்றுவரும் கடும் பனிப்பொழிவு காரணமாக பிரதான சாலையில் தொடர் விபத்து ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் குறைந்தது 3 பேர் உயிரிழந்ததுடன், குறைந்தது 60 வாகனங்கள் சேதமடைந்துள்ளன. 70பேருக்கும்மேற்பட்டோர்காயமடைந்துள்ளனர் என லபனன் மாநில ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். காயமடைந்தோரில் 4 பேரின் நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார். அங்கு நிலவும் உறைந்த காலநிலையால் சாலைகள் வழுவழுப்பாக இருப்பதுடன், மூடு பனியால் எதிரே பயணிக்கும் வாகனங்கள் கண்ணுக்குத் தென்படவில்லை என வாகன ஓட்டிகள் தெரிவித்தனர். இந்த விபத்துச் சம்பவத்தால் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (த-ரி4)

# ஆப்கானில் கடந்த ஆண்டு 11 ஆயிரம் பேர் அங்கவீனம்

## ஐ.நா. அமைப்பு தகவல்

குண்டூஸ், பெப்.17
ஆப்கானிஸ்தானில் கடந்த வருடம் பெரும் எண்ணிக்கையில் மக்கள் காயமடைந்துள்ளதாகவும், அங்கவீனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

2009 அம் ஆண்டிலிருந்து பெறப்பட்ட எண்ணிக்கையில் கடந்த வருடம் ஆப்கானில் அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை அதிகம் என நேற்று முன்தினம் ஐ.நா. தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 11 ஆயிரத்து இரண்டு பேர் அங்கவீனமடைந்து, 3 ஆயிரத்து 545 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை 2014 அம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீதான இந்தத் தாக்குதல் ஏற்றுக்கொள்ள முடியாதது என ஆப்கானுக்கான ஐ.நாவின் பிரதிநிதி தெரிவித்தார். மேலும், ஆப்கான் மக்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும். பொதுமக்கள் கொல்லப்படுவதையும், அங்கவீனர்கள் ஆக்கப்படுவதையும் தடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

பொது இடங்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் சம்பவங்களாலேயே பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் 62 சதவீதமான பாதிப்புகள் தலிபான்களாலும், இதர போராளிக் குழுக்களினாலும்மேற்கொள்ளப்பட்டன என அந்த அறிக்கை கூறுகின்றது.



சிறுவர்கள் அங்கவீனராக்கப்பட்டமை பெரும் இழப்பு என ஆப்கானுக்கான ஐ.நாவின் பிரதிநிதி தெரிவித்தார்.

பிள்ளைகளை இழந்த பெற்றோரும், பெற்றோரை இழந்த பிள்ளைகளும் என இழப்புகளுடன் எதிர்காலத்தை கழிக்க வேண்டிய சூழல் நிலவுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2015 ஆம் ஆண்டில் 113 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கிழமைக்கு 2 சிறுவர்கள் வீதம் கொல்லப்பட்டுள்ளனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, 252 பேர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது கருத்துகளை எமக்கு அறிவிக்கவும்

## மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டங்களை திருத்தம் செய்வதற்கு பிரேரணைகளை கோருதல்

252 ஆவது அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டம், 255 ஆவது அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டம், 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் என்பவற்றை மீளாய்வு செய்து அதற்கு திருத்தங்களை பரிந்துரை செய்யும் பொருட்டு, கௌரவ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா அவர்களால் சட்டத்தரணி சாலிய பீரிஸ் அவர்களின் தலைமைத்துவத்தில் குழுவொன்றை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த குழுவிடம் மேற்படி சட்டங்களை திருத்தம் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் தமது எழுத்திலான பிரேரணைகளை சமர்ப்பிக்கும் படி எல்லா அரசியல் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் பொது மக்களிடம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. தெரிவு செய்து நியமனம் செய்கின்ற பிரதிநிதிகளுக்கு உள்ள ஒழுக்காற்று நடைமுறைகள்
2. நிதி நடவடிக்கைகள் மற்றும் வருமான உற்பத்தி
3. சுற்றாடல் மற்றும் பொது சுகாதாரம்
4. பொது மக்கள் உபயோக சேவை
5. நிலையான குழுக்களுக்கு பிரசைகளின் பங்களிப்பு
6. பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அரச மற்றும் தனியார் துறையின் பங்குடமை
7. பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி உள்ளூராட்சி நிறுவனங்களில் ஊழலை இல்லாதொழிப்பதற்கான நடைமுறை
8. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்களை ஒருங்கிணைத்தல்
9. உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்கள், கடமைப்பொறுப்புகள் மற்றும் செயற்பாடு
10. பிரதேச பொருளாதார அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி திட்டம்
11. பிழைகள் மற்றும் அதற்கு தண்டனை வழங்கும் நடைமுறைகள்
12. ஏனைய பிரேரணைகள்

பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய ஒழுங்குமுறை

* பல தலைப்புகளின் கீழ் பிரேரணைகளை சமர்ப்பிக்கப்படுவதாயின், அதற்கு வெவ்வேறாக தாள்களை பயன்படுத்தவும்.
* ஒரு தாளில் ஒரு பக்கத்தை மட்டும் பயன்படுத்தவும்.
* சரளமாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் உங்களது பிரேரணைகளை சமர்ப்பிக்கவும்.
* கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டங்களை திருத்தம் செய்வதற்கான பிரேரணைகள் என்று குறிப்பிடுதல் வேண்டும்.
* எல்லா பிரேரணைகளையும் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆந் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ மின் அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

எச்.ரீ.கமல் பத்மசிறி
செயலாளர்
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு
இலக்கம் 330, யுனியன் ப்ளேஸ்இ, கொழும்பு 02.

legal@pclg.gov.lk


011 2302720

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது கடவுள் தந்த கொடை

## கூறுகிறார் சிலை வடிப்புக்கலைஞன் செந்தில்வேல்

சி.ப. வேந்தன்



குழைத்த சிமெந்துக் களியை அப்பி அப்பி உயிரோட்டமுள்ள சிலையை வடித்துக் கொண்டிருக்கிறார் செந்தில்வேல். கல்லில் செதுக்கப்படும் சிற்பத்துக்கு எப்படி உயிரோட்டமிருக்கிறதோ, அதற்குச் சற்றும் குறைவில்லாது தத்ரூபமாக இருக்கிறது இவர் வடித்த சிலைகள். சரஸ்வதி சிலை, மாதா சிலை, அன்னம், இடபம் என ஏகப்பட்ட சிலைகள் இவரது வீட்டின் எல்லாப்பக்கங்களிலும் நிறைந்து கிடக் கின்றன.

வீரமணி ஐயரால் 'வாணிக்கலைஞன்' எனக் கௌரவிக்கப்பட்ட இவரது தனித்துவமே, வாணி சிலைகளை வடிப்பதுதான். தற்போது நாரந்தனை அ.த.க. பாடசாலையில் ஓவிய பாட ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் அவரை கலட்டியில் இருக்கும் அவரது வீட்டில் சந்தித்து புதன் பொய்கைக்காக உரையாடினேன்.

'சிற்பம் செய்யிறது எனக்குக் கடவுள் தந்த கொடை. என்னுடைய தொழில் ஆசிரியத் தொழிலாக இருந்தாலும், எனக்கு மனத் திருப்தி தாறது இதுதான். ஒவ்வொரு சிலை செய்து முடிச்ச பிறகும் எனக்குள்ள புது உற்சாகமும் தென்பும் பிறக்கிற மாதிரி இருக்கும்.'

இது என்ரை பரம்பரை வழியில வந்த கலையில்லை. என்ர ஆர்வத்தாலையும் விருப்பத்தாலையும் தான் என்னால செய்யக்கூடியதாக இருக்குது. "உங்களுடைய அப்பா நாடகக் கலையுடனேயோ, சிற்பக் கலையுடனேயோ, தொடர்பானவரா?" என்று கேட்டதற்கு, அவருக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அதோட இது வாழ்க்கைக்கு கைகொடுக்காது என்டதும் அவருடைய எண்ணமா இருந்தது.

அந்த நாளையில எங்கட இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில இந்தியாவில இருந்து கூத்துக்கலைஞர்களைக் கூட்டிக்கொண்டு வந்து கூத்துக்கள் நடத்துறவை. அப்ப அதில வித்தியாசமான கனக்க முகமூடிகளைப் போட்டு ஆடுவினம். அது பார்க்க வடிவாகவும் அதிசயமாகவும் இருக்கும். அப்ப அந்த முகமூடி மாதிரி நானும் செய்ய வேணும் எண்டு விரும்பி இதப்பற்றி அறிஞ்சு கொண்டு செய்ய வெளிக்கிட்டன். பள்ளிக்கூடம் போட்டு வந்தாப்பிறகு இது தான் வேலை. முக மூடிக்கான மோல்ட்டை களிமண்ணால செய்து அதைக்காய வைச்சு பிறகு அதுக்கு மேல பேப்பர்கள் ஒட்டி ஒட்டிச் செய்யவேணும். அப்பிடித்தான் ஒருநாள் நான் களிமண்ணால மோல்ட் செய்து கொண்டிருக்க, அப்பா ஒரு அவசர வேலை ஒண்டு செய்யச்சொல்லிப்போட்டு வெளில போனவர். நானும் 'ஓம் செய்யிறன்' எண்டிட்டு இந்த வேலையில மறந்து போனன். அவர் வந்து பார்த்திட்டு கோவத்தில நான் செய்த மோல்ட்டைத் தூக்கி கீழ போட்டு உடைச்சுப்போட்டு எனக்கும் நல்ல அடி விழுந்தது. அது என்னால மறக்க ஏலாது. அப்பிடி அடியள் வேண்டிப் பழகின கலைதான் இது. ஆனா பிறகு காலப்போக்கில அவரால இதைப் பற்றி விளங்கிக் கொள்ள முடிஞ்சது.

பிறகு நான் செஞ்ச மூகமூடிகள்தான் பள்ளிக்கூடத்தில நாடகங்களுக்குப் பாவிச்சது. இந்த நேரத்திலதான் எங்கட பள்ளிக் கூடத்தில படிப்பிச்ச யோகேஸ்வரி ரீச்சர் என்னையும் ரமேஸ்கண்ணா என்ட சிநேகிதப்பெடியனையும், இனங்கண்டு, உங்களுக்கு நல்லா சித்திரம் கீறுற திறமையும், கைவினைத்திறனும் இருக்கு. நீங்கள் உதில கவனம் செலுத்துங்கோ. நல்ல எதிர்காலம் வரும் எண்டு ஊக்கப்படுத்தினவ. அதோட வட இலங்கை சங்கீத சபை நடத்தின போட்டிப்பரீட்சைக்கும் எங்களை பதிவு செய்து தயார்ப்படுத்தி அனுப்பிவைச்சவ. அதுக்காக நாங்கள் வரதராசன் சேரிட்ட ஓவியங்கள் வரையுறதுக்கான மேலதிக பயிற்சிகளை எடுத்தம். அவர்தான் எனக்கு சிற் பம் செய்யிறதில ஆர்வத்தை ஊட்டினார். நானும் ரமேஸ்கண்ணாவும் கந்த ரோடை வண்ணாங்குளத்தில போய் களிமண் வெட்டிக்கொண்டுவந்து பதப்படுத்தி அதில சிலைகள் செய்து பழகினம். அது போட்டிப் பரீட்சையில எங்களுக்கு மிகப் பெரிய அளவில பிரியோசனமாக இருந் தது. அதோட படிச்சு இப்ப சித்திர பாட ஆசிரியராக ஆயிட்டன். இதுக்கும் [illegible] குக் கைகுடுத்தது எண்டு சொல்லாம்.

ஆரம்பத்தில களிமண்ணில செய்து பழகினது, பிறகு அதின்ர தேவை கருதி சிமெந்தால செய்ய ஆரம்பிச்சிட்டன். ஆனா களிமண்ணில செய்யிறதைவிட, சிமெந்தில செய்யிறது சரியான கஷ்டம். அதின்ர பதப்படுத்தல், திருத்தங்கள் செய் யேக்க வாற சிக்கல் எண்டு நிறைய இருக்கு. சரியாகச் செய்து முடிஞ்சிட்டால் அவை காலங்காலமா இருக்கும். இதுக்கெண்டு, இதுதான் ஆயுதம் எண்டு எதுவும் நான் பாவிக்கிறேல்ல. எதைக் கொண்டு இதைச் செய்யலாம் எண்டு எனக்கு விளங்குதோ. எதால செய்தால்இதை இலேசாகச் செய்யலாம் எண்டு நினைக்கிறனோ அதால செய்யறது தான் என்ர பாணி. இதுக்கெண்டு பெரியளவில மினக்கெடுறேல்ல.

> சாதாரணமா ஒரு சிலையை பதினைஞ்சு நாளில செய்து முடிக்கலாம். ஆனா அதுக்கான மனநிலையும் சூழலும் இருக்கவேணும்.

கல்லில செதுக்கி சிற்பம் செய்யிறது ஒரு வகை, மண், சிமெந்தில செய்யிறது ஒரு வகை, இரண்டுக்கும் வேற வேற தனித்துவங்கள் இருக்கு. எல்லாமே கலை தான். அதுக்கு எப்படி மனதை ஒரு நிலைப்படுத்தி, சூழலை ஒழுங்கமைச்சுச் செய்யிறமோ, அதுபோலதான் இதையும் செய்யவேணும், செய்து கொண்டிருக் கேக்க மனசில சின்னக் குழப்பம் வந்தாலும் உருவாக்கிற படைப்பில தவறு வரத் தொடங்கியிடும். அதனால இதை ஒரு தவமாத்தான் செய்ய வேணும். அதாலதான் இது கடவுள் தந்த கொடை எண்டு சொன்னனான்.

சாதாரணமான ஒரு சிலையை பதினைஞ்சு நாளில செய்து முடிக்கலாம் ஆனா அதுக்கான மனநிலையும் சூழலும் இருக்கவேணும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஸ்ரீஸ்கந்த மூர்த்தி ஆசிரியரின் முயற்சியில் கலாசாலையில ஒரு வாணி சிலை செய்து நிறுவினது மறக்க முடியாத அனுபவம். அதில எனக்கு உறுதுணையாகவும் ஊக்கமாகவும் நிண்டு அது நிறைவாய் வாறதுக்கு கருணைலிங்கம் ஆசிரியர், சண்முகராஜா ஆசிரியர் ஆகியோர் பக்கபலமாக என்னை வழி நடத்தினவை. அதெல்லாம் எனக்கு நல்ல அனுபவங் கள். அதே போல கல்வியியற் கல்லூரியில் இருக்கிற பிள்ளையார் கோயில் சிலையும் என்னால செய்யப் பட்டது தான். அந்த எல்லாரும் வழிபட்டுக் கொண்டிருக்கினம். நானும் போய் அதை வழிபட்டது எனக்கு சந்தோசத்தையும் ஒரு மன நிறை வையும் தந்திருக்கு. முந்தி வட.இலங்கை சங்கீதசபை எல்லாக் கலைகளையும் உள்ளடக்கி நிறையப் போட்டிப்பரீட்சைகள் எல்லாம் வைச்சவை. அதால எங்களால எங்கட திறமையைக் காட்டக்கூடியதாயும் எங்களுக்கெண்டு ஒரு பாதையை தேடிக்கொள்ளவும் முடிஞ்சது. ஆனா இப்ப அது குறிப்பிட்ட சில கலைகளுக்கே கூடுதல் முக்கியத்துவம் கொடுக்குது. அதைக் கவனத்தில எடுத்தா இதில ஆர்வமாய் இருக்கிற நிறைய மாணவருக்கு பயனுள்ளதா இருக்கும். இப்பவும் பள்ளிக்கூடத்தில நிறைய மாணவர்கள் நல்ல ஆர்வத்தோட இருக்கினம். என்னால முடிஞ்ச அளவுக்கு அவையளுக்கு பயிற்சிகளைக் கொடுத்துக் கொண்டு வாறன். ஆரெண்டாலும் முழு மனசோட, ஆர்வத்தோட, கலைபக்தியோட இதைக் கற்றுக்கொண்டா, இது அவைக் கும் கைவரும் என்கிறார் அவர்.

பரபரப்பான உலகில் வாழப்பழகிவிட்ட எமக்கு, ஒரு நிமிடம் ஓரிடத்தில் இருப்பதென்பதே கஷ்டமாயிருக்கும் நிலையில், மனதை அலையவிடாது ஒருமுகப்படுத்தி எண்ணத்தில் இருக்கும் படிமத்தை விரல்களால் வடிப்பதென்பது அசாத்தியமான செயலே. இவர் சொல்வதைப் போல, இது தவம் என்பதில் ஐயமில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியங்களும் காதலும்

**மல்லாவி கஜன்**

இன்றைய எமது நடைமுறை வாழ்க்கையில் இழையோடிப் போய்விட்ட விடயங்களுள் 'காதல்' என்பதும் ஒன்று. சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்த காலகட்டத்திலிருந்தே மனித வாழ்வோடு ஒன்றி, இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு விடயமாகக் காதலைக் கருத முடிகின்றது. "காதல் அழிவதில்லை. கடல் அலையோ ஓய்வதில்லை.." என்ற திரையிசைப் பாடல் காதலின் மேன்மையை எடுத்துரைப்பதாய் அமைவதைக் காணலாம். காதல் என்பது உயிரினங்களுக்கு இடையேயான ஒருவகைப் பாலியல் ஈர்ப்புத் தன்மை, அன்பு, அக்கறைகலந்த உணர்வு எனக்கொள்ளலாம், அதாவது சேர்ந்து வாழவேண்டுமென்ற 'ஆசை' எனலாம். காதல் என்பது ஆளிடைத் தொடர்பாக மட்டும் அமைய வேண்டுமென்பது பொருளல்ல. தொழில், இயற்கை, கலை இன்னும் ஏகப்பட்ட பல விடயங்களையும் நன்றாகக் காதல் புரியலாம். மனிதன் மட்டும்தான் காதலிக்கலாம், ஆணும் பெண்ணும்தான் காதலிக்கலாம் என்ற எந்தவித வரையறைகளும் இதுவரை அறுதியிடப்படவில்லை. காதல் என்பது ஒரு பொதுச்சொல். மிருகங்களும் காதலிக்கின்றன; பறவைகளும் காதலிக்கின்றன.

**'காட்டுப் பறவையெலாம் தமிழ் காதல் புரியுதடி...'** என உவமைக் கவிஞர் சுரதா "இளவேனில்" என்ற கவிதையூடாக இயம்பியுள்ளமை இதற்குச்சான்றாகும். ஆயினும், மனிதஇனம், ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் மனதார நேசிப்பதையோ அல்லது அன்பு பாராட்டுவதையோதான் 'காதல்' என வரையறுக்கப் பழகிவிட்டது. ஒரு தாய் தன் பிள்ளையைக் காதலிக் கிறாள்; ஒருதந்தை தன் மகளைக் காதலிக்கிறார்; ஓர் அண்ணன் தன் தங்கையை ஆழமாகக் காதலிக்கிறான்; ஒரு பாட்டி தன் பேரனையோ, பேர்த்தியையோ காதலிக்கிறாள். ஆனால் இவையெதையும் எமது சமூகம் 'காதல்' என்ற சொற்பதத்தைக் கொண்டு ரைப்பதில்லை. ஓர் ஆணும் பெண்ணும் ஓரிடத்தில் தனிமையில் நின்று கதைப் பதையும், வீதியில் சமனாகச் செல்வதையும், ஆழமான அன்பு வைத்துப் பழகுவதையும், ஒருவருக்கு ஒருவர் உதவியாய் இருப்பதையும் கண்டமாத் திரத்திலேயே அதற்குக் 'காதல்' என பச்சைகுத்திவிடும் சமுதாய அமைப்பு இன்று எம்மத்தியில் இருக்கின்றமை வேதனையளிக்கிறது.

**சங்ககால காதல் நிலை**

அகம், புறம் என வகுக்கப்பட்ட வாழ்க்கை முறைக்குள் அடங்கிக் கிடந்த சங்கக் காதல்கள், சுவையும், சுவாரசியமும் மட்டுமன்றி காதலின் மதிப்புயர்வையும் பறைசாற்றி நிற்கின்றமையை சங்க இலக்கியங்கள் மூலமாக அறியமுடிகிறது. ஐவகை நிலங்களுக்கும் (குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல்) தனித்தனியாக அகவொழுக்கங்கள் வகுக்கப்பட்டும், இணைந்ததாக கைக்கிளை, பெருந்திணை பற்றிய செய்திகளும் விரிவாக விளக்கப்படுவதைக் காணமுடிகின்றது. காதலும், அதனோடு சார்ந்த விடயங்களையும் 'அகம்' என வகுத்து, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களுள் நற்றிணை, குறுந்தொகை முதலான எட்டு இலக்கியங்கள் அகப்பொருள் பாடிநிற்பதைக்காணலாம். குறிஞ்சி நிலத்திலே விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்த மலை நாடனுக்கும், தினைப்பயிரைக்காவல் புரியும் தலைவிக்கும் இடையே காதல் மலர்கிறது. நெய்தல் நிலத்தில் பரதவ மகளிர் காதலுறுகின்றனர். முல்லை நிலத்திலே இடையர் குலப் பெண்களுக்கும் ஆடவர்க்கும் இடையே காதல் கனதியாகிறது. இவ்வாறாக அந்தக் காலகட்டத்தில் தலைவன் தலைவியரிடையே மலர்ந்த காதலுக்கு தோழி, செவிலி, பாங்கன், பாங்கி என்போர் தூதர்களாகவும் விளங்கினர். நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையுமுடைய குறுந்தொகை

> குறிஞ்சி நிலத்திலே விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்த மலை நாடனுக்கும், தினைப்பயிரைக் காவல் புரியும் தலைவிக்கும் இடையே காதல் மலர்கிறது. நெய்தல் நிலத்தில் பரதவ மகளிர் காதலுறுகின்றனர்.

எனும் இலக்கியத்தில் இடம்பெறும் நாற்பதாவது செய்யுளான

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்..'

என்று தொடரும் குறிஞ்சி நிலத்துச் செய்யுளிலே, முன்பின் அறியாமலும், உறவோ அல்லது நட்போ இன்றியும் காதல் வயப்பட்ட ஆண், பெண்ணின் மனநிலையும், காதல் மீதான நம்பிக்கையும் உவமைக் கையாட்சியுடன் 'செம்புலப் பெயன்ரார்' எனும் புலவர் பாடியுள்ளவாறு நயத்துக்குரிய தொன்றே. குருதி உறவும், இயையும் ஏற்பும் இல்லாதோருடன் காதல் தொடர்பு கொள்வதும், உறவு மேற்கொள்வதும் சங்க காலத்தில் சாத்தியப்பாடற்றதொன்றாக இருந்தாலும், மேற்படி பாடலூடாக அந்தத் தன்மையும் சாத்தியமாவதை அவதானிக்க முடிந்துள்ளது.

நீர்க்காகங்கள் ஆணும் பெண்ணுமாக கடற்றுறையில் நீராடுவது இயல்பு. இதனூடாக, தலைவனானவன் தலைவியை வரைந்து கொண்டிருந்தால் (திருமணம் புரிந்திருந்தால்) கடற்றுறையில் நீராடி மகிழ்ந்திருக்கலாம் என ஏக்கவுணர்வோடு தன் கருத்தைக் குறிப்பால் புலப்படுத்தும் தலைவியொருத்தியின் மனநிலையை நற்றிணையின் 230 ஆவது செய்யுள் மூலம் 'இளநாகனார்' இயம்பியுள்ளார்.

'மையற விளங்கிய மணிநிற விசும்பின்
கைதொழு மரபின் எழுமீன் போலப்...'

என நீளும் பாடல் தலைவியின் எண்ணப்பாங்கை அற்புதமாக எடுத்துக் கூறுகின்றது. தலைவனும் தலைவியும் சந்திப்பதற்கு வாய்ப்பான சூழல்களும், இரவுக்குறி-பகற்குறிகளும், வரைவு கடாவுதல்களும் சங்ககாலத்துக் காதலைப் பறைசாற்றி நிற்கின்றன. உலகியற் காதல்களின் உருவாக்கமானது பிற்பட்ட காலகட்டங்களில் தெய்வீகக் காதல்களாகவும் மலரத் தொடங்கின. சங்ககால அகத்திணை மரபில் தலைவன்-தலைவியருக்கிடையே இடம்பெறும் உலகியற் காதலை, பல்லவர் காலத்திலே இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடைப் பட்ட ரீதியில் இறையியற் காதலாகப் போற்றினர். உலகியற் காதல் கவிக்கு பொருளாக அமையவேண்டுமென்ற தமிழ் மரபுக்கு உருவானது "திருச்சிற்றம்பலக் கோவையார்" ஆகும். மாணிக்க வாசகரால் நாயகன்-நாயகி எனும் பாவனை முறையில் இது பாடப்பட்டதாகும். அத்துடன் திருஞானசம்பந்தர் "சிறையாரு மடக்கிளியே இங்கே வா..." என்ற தேவாரப் பதிகம் வாயிலாக தன் காதலுக்குக் கிளியைத் தூதாக விடும் பாங்கும் புலனாகிறது. சிலப்பதிகார காப்பியத்திலே கோவலன், கண்ணகி மற்றும் மாதவி என்போரின் காதல் நிலைகள் சித்திரிக்கப்படுவதையும் காணமுடிகிறது. சிலம்பு விற்பதற்காகச் சென்ற தன் காதற்கணவன் திரும்பிவராமையால் கண்ணகியுறும் துயரும், கோவலன் கொலையுண்ட செய்தி அறிந்த போதான அவள் நிலையும், அதன் பின்னான செயற்பாடுகளும் கோவலன் மீது கண்ணகி கொண்ட தீராக் காதலையே புலப்படுத்துவதாய் அமைகின்றன. இவ்வாறாக தலைமுறை தலைமுறையாக கடந்து வந்த காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்களில், அவ்வப்போது நிலைபெற்றிருந்த சமுதாயச் சூழல்களைப்பின்புலமாய்க் கொண்டு அடியொற்றிய வகையில் காதல் கதைகள் இலக்கியங்களூடாக சுவைபடக் கூறப்பட்டுள்ளதைக் காண்கின்றோம்.

சேரர், சோழர், பாண்டியர் எனும் முடியுடை மூவேந்தர்களையும் நிலைநிறுத்திப் பாடப்பெற்ற முத்தொள்ளாயிரத்திலும் காதல் பற்றிப் பேசப்படுகிறது. உலகியல் காதலுள்ளே சற்று வித்தியாசமாக வீதியுலாக்காணும் மன்னனுக்கும், மகளிருக்கும் இடையில் மலரும் காதல் நிலைகள் பற்றி முத்தொள்ளாயிரம் எடுத்துக் கூறுகின்றது. பாண்டிய மன்னன் உலாவருகையிலே அவனைப் பார்க்கக் கூடாதென, தலைவியின் தாயார் அவளை வீட்டின் நடுஅறையில் வைத்துப் பூட்டி, சாவியை எடுத்துக் கொள்கிறார். ஆயினும் தலைவியானவள் பாண்டியனின் பேரழகைக் கண்டு இன்புறுவதோடு மட்டுமன்றி, நன்றியுணர்வையும் வெளிப்படுத்தும் பாங்கு சிறப்பானதே. சாவி எடுக்கப்பட்ட துவாரம் வழியாக பாண்டியனைக் கண்டு இன்புறும் தலைவி, அத்தகைய காட்சியைதான் காணும் வண்ணம் கதவிலே துளையிட்ட தச்சனுக்குத் தன் நன்றிப்பெருக்கைப் பின்வருமாறு உரைக்கிறாள்.

'மாக்கடுங்கோன்
நன்னலம் காணக் கதவம் துளை தொட்டார்க்
கென்னகொல் கைம்மா றினி..!'

நந்திக் கலம்பகத்திலே காதல் பாடும் சுவைமிகு பாடல்கள் பல இருப்பதைக் காண்கிறோம். 'மேகவிடுதூது' என்ற செய்யுளிலே தலைவனானவன் மேகத்தைத் தலைவிக்குத் தூதாக விடுகின்ற தன்மை அழகாக எடுத்துக் கூறப்படுகிறது. தலைவியை நாடிச் செல்லும் தலைவனது தேரின் வேகத்தைவிட, மேகம் விரைவாகப் பயணிப்பதாக உணரும் தலைவன் மேகத்தைத் தூது விடுகின்றான்.

'ஓடாத தேரில் வெறும் கூடு வருகிறது என்று கூறுங்கள்' என்ற தொடர், தலைவி மீது தலைவன் கொண்ட பற்று மிகு காதலுக்குச் சான்றாய் அமைந்து விடுகிறது.

**காதல் கூறும் பாரதி**

காதலர்களுடைய மனோபாவங்களை அறிந்து, அதன்படி பாடல்பாட வல்லவர்களில் பாரதிக்கு நிகர் வேறு எவருமிலர். பாரதியாரால் பாடப்பெற்ற பல்வேறு இலக்கியங்களிலும் காதல் அரும்பாய், மொட்டாய், பூவாய், மணம் பரப்பி நிற்பதைக் காணவியலும். காதலனானவன் காதலியின் பிரிவாற்றாமையால் வருந்துதல், காதலன் வராமையால் காதலி காதல் நோய்க்கு ஆளாதல், காதலனும் காதலியும் இன்னல்கள் யாவற்றையும் களைந்து ஒன்று சேர் கையில் அடைகின்ற இன்பப்பெருக்கு என்பவை பற்றிப் பாரதியார் 'கண்ணன் பாட்டு' மூலமாக விவரிப்பதைக் காணலாம்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# மக்களும் இலக்கியமும்



மக்களும் இலக்கியமும் என்ற தலைப்பில் கடந்தவார புதன்பொய்கையில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி.

தேவி பரமலிங்கம்

இன்றைய காலகட்டத்தில், பலதரப்பட்ட ரசனையைக் கொண்ட மக்கள் எம்மிடையே இருப்பதுபோன்று, பல ரகப்பட்ட ரசனைகளை விதைத்து விடுகின்ற படைப்புக்களும் தோன்றியே வந்துள்ளன. இருந்தபோதிலும் அவற்றுடன் போட்டிபோட்டு நல்லெண்ணம், கலாசாரம், மக்கள்மேம்பாடு என்பவற்றை வெளிப்படுத்தும் தரம் வாய்ந்த இலக்கியங்களும் கணிசமான அளவில் வளர்ந்துள்ளதைக் காணலாம்.

## வியத்தரு நல்லிலக்கிய ரசனை வளர்ச்சி

அத்தகு இலட்சிய இலக்கியங்களைக் காலவெள்ளம் அடித்துச் செல்லமாட்டாதென்பதை உணர்கையில், வாசகர்களில் நல்லிலக்கியம் நுகர்வோர் வளர்ந்துள்ளமையையும் சீர்தூக்கி வியக்கலாம். தரமான படைப்பாளிகள் தோன்றுகையில் தலை சிறந்த படைப்புக்களும் உருவாதல் கண்கூடு.

இந்த நிலை மேலும் மேலும் முன்னெடுக்கப்படுகையில் புத்தகக் கடைகளின் மூலை முடுக்கெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கும் நல்லிலக்கியங்களும் விலை போகின்ற காலம் உருவானால்; சந்தைப் பொருள்களாக விளங்குபவை தரமானதாக உருவாகின்ற நிலையை இலக்கியங்களே உருவாக்க வல்லன.

அந்த வகையில் சந்தைப் பொருள்களில் வந்து விழுகின்ற மக்கள் கூட்டத்தை நல்வழிப்படுத்தும் நல் இலக்கிய வளர்ச்சியில் மக்களும் பங்கு கொள்ளும் நிலையில், சிறந்த இலக்கியப் படைப்புக்கள் நல்லதோர் மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதில் பெரும்பங்கெடுப்பதையும் நாம் உணர்ந்து திருப்தி கொள்ளலாம்.

மக்களும், இலக்கியமும் பிரித்து வைத்துப் பார்க்கக்கூடிய ஒன்றன்று. மக்கள் வாழ்க்கை முறைமைகளைச் சொல்கின்ற அதேவேளை, அவர்களது ஸ்திரமான வாழ்வை அமைத்துத் தருவதே இலக்கியம் எனப்படும். காலக்கண்ணாடி என்றும் இலக்கியத்தைச் சுட்டுவதுமுண்டு. தற்கால மக்கள், மூதாதையர் வாழ்முறைகள், நாகரிகங்கள், கலாசாரம், பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றை அறிய இலக்கியங்கள் வழிகோலுவதால் அதனது சிரஞ்சீவித்தனம் கூறி மாளாது.

## மக்கள் இலக்கியம் எதிர்கால விஞ்ஞாபனம்

இலக்கியங்கள் நடந்து முடிந்தவற்றைக் கூறுகின்ற சரித்திரங் களாக அமைவதோடு, நடக்கப் போகின்வற்றை முன்கூட்டியே அறிவிக்கும் விஞ்ஞானமாகவும் மிளிர்கின்றன. எனவே மக்களுக்கு அத்தியாவசியத் தேவையாகவும் விளங்குகின்றது இலக்கியங்கள்.

இத்தகு புனிதமான சாதனமொன்றை வெறுமனே பணம் பண்ணிக் கொள்ளும் கருவியாகப் பயன்படுத்தும் வியாபாரிகளிடம் புனிதமான செயற்பாட்டை எதிர்பார்க்க முடியாது. போலி முகமூடிகளை அணிந்து கொண்டு, இலக்கியச் சந்தையில் போலியான இலக்கியக் குப்பைகளில் மக்களும் தம்மை மறந்து மாய்ந்து போகின்றனர். அது மட்டுமன்றி அவர்களால் தரமான இலக்கியங்களை நுகர இயலாமலும் போய்விடுகின்றது.

உதாரணமாகக் கால்களின் இடையில் அகப்பட்ட பந்தை அவரவர்கள் விருப்பத்துக்கு ஏற்பத் தட்டிச் செல்வது போலவே, இதுவரை காலமும் இலக்கிய வடிவங்களும், உள்ளடக்கங்களும் அமைந்திருந்தமையை நாட்டமுடையோர் நுகர்ந்திருப்பர். சமுதாய அமைப்பில் இலக்கியங்கள் மக்களின் ரசனைக்கு விருந்தாகவும், அறிவுத் தேவைக்கு ஏற்பவும் படைக்கப்பட்டு வந்துள்ளதையும் காணலாம்.

படைப்பாளிகளும் சமூக அங்கத்தினர்களாய் உள்ளதால், சமூகப் பாதிப்புக்களைப் படைப்புக்களில் வெளிக்கொணர முடிந்தது. வெளிப்படுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். அதன் விளைவே பலரகப்பட்ட மக்களின் வாழ்வு முறைகளும் படைப்புக்களில் இடம்பெறக் காரணிகளாகின்றன.

அவ்வாறே கால மாறுதல்களால் கடவுளர்களை, அரசர்களை, ஜமீன்களை, மிராசுதாரர்களையும் நாயகர்களாகப் புனைந்தமை, மக்களின் இதயங்களைப் பாதித்தவர்களை வைத்து இலக்கியம் ஆக்கியதாற்தானெனக் கொள்ள வேண்டும்.

## யதார்த்த சோசலிச விஞ்ஞானப் படைப்புக்கள்

1960 களுக்குப் பிற்பாடு ஏழைத் தொழிலாளர்களை நாயகர்களாக, கதாமாந்தர்களாக்கிப் படைக்கப்பட்ட இலக்கிய வடிவங்களில் எந்த வித போலிஆலாவர்ணனைகள் செய்யாமல் உள்ளதை உள்ளபடி கூறும் யதார்த்த பூர்வ இலக்கியங்கள் தோன்றக் காரணமாய் அமைந்தன. ஏனெனில் ஏழைத் தொழிலாளர் வாழ்க்கையில் சிரித்து மகிழவோ, பொழுது போக்கவோ வாய்ப்புக்கள் இல்லாது இருந்தமைதான். எனவே யதார்த்த இலக்கியங்கள், ஏழைத் தொழிலாளர்களின் வறுமைக் கூப்பாடுகளையும்; அவர்களுக்கு நியாயமான உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்காமல் சுரண்டிக் கொடுக்கும் உயர்மட்ட முதலாளிகளின் கொடுமையையும் வெளிப்படுத்தும் இலக்கியங்கள் உருவாக ஏதுவாகின.

உயர் மட்டத்தவர் சார்பு நிலையில் படைக்கப்பட்ட இலக்கியங்களில், படாடோப வாழ்வு முறைகளை மிகைப்படுத்தியும், அவர்களிடமும் மக்களை இம்சிக்காத மனோபாவம் இருந்ததாகவும், கதைவிடும் பாங்குகளே சித்திரிக்கப்பட்டன. எனவே அவற்றில் வாசகரை மகிழ்விக்க இல்லாத பொல்லாதவற்றையும், நடக்க முடியாதவைகளை மிகைப்படுத்திப் பொய்ப்புனைவுகளாகவும் படைக்க வேண்டிய கட்டாயம் இலக்கியக்காரர்களுக்கு வரையப்படாத சட்டமாக இருந்தும் வந்தது.

அத்தகைய பாத்திரப் படைப்புக்களை தற்காலங்களில் கொண்டு புனையப்படும் இலக்கியங்கள் குப்பைகளென்றும், சமூக முன்னேற்றத்தில் முதுகெலும்பாகத் திகழும் ஏழைத் தொழிலாளர்களினுடைய வாழ்க்கைப் போராட்டத்தையும், அந்தப் போராட்டத்தில் தொழிலாளர் வெற்றியைத் தழுவும் பாங்கைச் சித்திரிக்கும் படைப்புக்களே உயர்ந்தனவாகவும் கருதப்படும் காலத்திலேயே நாம் வாழ்கிறோம்.

## எதிர்காலத்து இலக்கியப் பார்வை

எதிர்காலத்தில் சமத்துவ அடிப்படையில் இயங்க இருக்கின்ற சமுதாயத்துக்காக இந்தக் கால இலக்கியப் போக்கில் படிப்படியாக உயர் மட்டத்தவர்களையும் சமநிலைக்கு மட்டுப்படுத்த வேண்டிய தேவை தோன்றி வருகின்றமையை நவீன சமகால இலக்கிய வடிவங்களில் முதன்மைப் படுத்த வேண்டியும் உள்ளது. அதனை விடுத்து, திரும்பத் திரும்ப சமகால மக்கள் சிந்தனை நலிவுற மழுங்கடிக்கும் இலக்கியங்களால் எந்த விதத்திலும் சமூகத்துக்குப் பிரயோசனம் ஆகப்போவதில்லை.

சிறிதுகாலம் முன்பாக வடபகுதியைச் சேர்ந்த நபரொருவர் படைப்பாளிகள் நுகர்வோர்க்கு கதையிலோ, கவிதையிலோ வேறெந்த இலக்கிய வடிவங்களிலுமோ சொல்ல வருகின்ற கருப்பொருளை முழுமை யாகச் சொல்லிவிடக்கூடாதெனக் கட்டுரை ஒன்றில் தெரிவித்தும் இருந்தார். அப்படியானால், கருப்பொருளை விளங்காமல் படைப்பாளி சித்து விளையாட்டுக் காட்டினால் சமுதாயத்துக்கு இலக்கியக்காரனின் பணி என்னவாக அமையும்? அந்த இலக்கியப் படைப்பால் சமகாலத்துக்கோ, எதிர்காலத்துக்கோ ஆற்றும் சேவை குருட்டு உலகைக் காட்டிவிடுவது மட்டுந்தானா?

அத்தகைய இலக்கியங்களே தரம்அற்ற மூன்றாந்தர இலக்கியக் குப்பைகள் என்பதைத் திரும்பத்திரும்ப அழுத்திக் கூறவேண்டிய கடப்பாடு நல்லிலக்கியக்காரர்களுக்கு உள்ளதைத் தட்டிக்கழிக்கவோ மறந்திடவோ கூடாது.

## மக்களையும் இலக்கியத்தையும் பிரிக்க இயலா

மிகச் சமீபத்தில் இன்னுமோர் அபத்தம் இலக்கிய வெளியீட்டுத் துறையில் நடைபெற்று வந்துள்ளமையை அவதானிக்கலாம். எமது நாட்டுப் படைப்பாளிகள் தமது ஆக்கங்களை தென்னகத்துக்கு எடுத்துச் சென்று அச்சிட்டும்வெளியிட்டும் வருவதால், திருப்தியடைவதாகக் காணப்படுகின்றனர்.

எமது நாட்டு இலக்கியப் படைப்புக்கள் தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் பரவுதல் சாலச்சிறந்ததே! எனினும் அந்தந்த மக்களுக்காகப் படைக்கப்படும் படைப்புக்கள் அவர்களைச் சென்றடையாமல் வேறு பிரதேசங்களில் வாழ்பவர் மட்டுமே பெறக்கூடிய வகை செய்வதால் என்ன நன்மை விளையப்போகின்றது?

எமது மக்களை விட்டுவிட்டு இலக்கியங்கள் மூலமாகப் பிறதேசங்களில் படைப்பாளி புகழ்க்கொடி நடுவதாலும், எப்படியோ நூல்களை வெளிக்கொணர்ந்து விட்டோமென்னும் திருப்தியாலும், உரிய பணியைச் செய்து விட்டதாக இறுமாப்படைவதில் அர்த்தம் இல்லை. மொத்தத்தில் மக்களை விட்டு இலக்கியத்தைப் பிரித்துப் பார்ப்பதானது விழலுக்கு இறைத்த நீராகவே எதிர்காலச் சமுதாயத்தால் கொள்ளப்படும்.

> இலக்கியங்கள் நடந்து முழந்தவற்றைக் கூறுகின்ற சரித்திரங்களாக அன்றி நடக்கப் போகின்வற்றை முன்கூட்டியே அறிவிக்கும் விஞ்ஞானமாகவும் மிளிர்கின்றன. எனவே மக்களுக்கு அத்தியாவசியத் தேவையாகவும் விளங்குகின்றன இலக்கியங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தர்மினி பத்மநாதனின் சிறுகதைத் தொகுதி

யாழினி முனுசாமி




யாழ். தர்மினி பத்மநாதனின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியில் விபச்சாரி, 80 ரூபாய், வாடகை வீடு, வித்தகி, பட்டாம் பூச்சி, தந்தையின் தாலாட்டு, முக்கோணத் தலைநகரங்கள் ஆகிய ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. 2009ஆம் ஆண்டு மே மாதம் சிங்களப் பேரினவாதம் நடத்திய தமிழின அழிப்புக்குப் பிறகு விடுதலைப் புலிகள் இயக்கம் சிதைக்கப்பட்டது. போருக்குப் பிறகு ஈழத் தமிழர்களின் வாழ்க்கை அவலத்திற்குரியதாகி விட்டது. இந்தச்சூழலில் யாழ். தர்மினி பத்மநாதனின் சிறு கதைகளில் இடம்பிடித்துள்ள ஈழத்தமிழ்ப் பெண்களின் இன்னல்களையும் போராட்ட குணங்களையும் ஆராய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சிறுகதைகள் சித்திரிக்கும் பெண் அவலம்**

தன்னைக் களங்கப்படுத்த சித்தமாய் இருக்கும் சமூகத்தில் ஏதாவது ஒரு வேலையைத் தேடிக்கொள்ள எத்தனிக்கும் ஒரு முன்னாள் பெண் போராளியின் மனநிலையையும் மாறியுள்ள சமூகச் சூழலையும் சித்திரிக்கிறது 'விபச்சாரி' சிறுகதை.

'80 ரூபாய்' எனும் இரண்டாவது சிறுகதை, கூத்தாண்டவர் திருவிழாவைப் பற்றிப் பேசுவதாக உள்ளது. திருநங்கைகளின் வலியோ வாழ்வியலோ அக்கதையில் பேசப்படவில்லை. திருநங்கைகளைப் பற்றிப் பொதுப் புத்தியில் பதிந்துபோயுள்ள எண்ணங்களையே அந்தக்கதை சித்திரிக்கிறது.

திருநங்கைகளுடன் ஆண்களும் நேர்த்திக் கடனுக்காகத் தாலி கட்டிக் கொள்வதும், அதை அறுப்பதும், பிற மாநிலத்திலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் திருநங்கைகள் கூத்தாண்டவர் திருவிழாவுக்கு வந்து செல்வதுபோன்றசெய்திகள் அக்கதையில்கூறப்பட்டுள்ளன.

'வாடகை வீடு' என்னும் சிறுகதை, 'யாழவள்' என்கிற நந்தினி என்னும் இளம் கைம்பெண்ணின் கதையைச் சித்திரிக்கின்றது. தன் உடன்பிறந்த மூன்று அண்ணன் தம்பிகளையும், கணவரையும் ஈழ விடுதலைப் போரில் பறிகொடுத்துவிட்டு மூன்று வயதுக் குழந்தை பாரினியுடன் தனித்துவாழ்பவள் நந்தினி. இலண்டனில் வாழும் பிரபாகர் என்னும் இளைஞன், ஈழ விடுதலைப் போரில் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணைச் சாதி மதம் பாராமல், சீதனம் வாங்காமல் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனும் நோக்குடன் இலங்கைக்கு வந்து நந்தினியைத் திருமணம் செய்து கொள்கிறான். அவனுடைய தாய் சிவகாமிக்கு அந்தத்திருமணத்தில்கொஞ்சமும் விருப்பமில்லை. பின்னர் பல சுவாரஸ்மான சம்பவங்கள் கதையில் இடம்பெறுகின்றன.

வித்தகி சிறுகதையின் நாயகி கயந்தினி. தமிழரசன் என்பவனைக் காதலிக்கிறாள். போர் நெருக்கடியின் காரணமாகத் தமிழரசன் இலண்டனுக்குப் புலம்பெயர்ந்து விடுகிறான். கயந்தினி போராளிக் குழுவில் சேர்ந்துவிடுகிறாள். போராளிக் குழுவின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னைக்குப் புலம் பெயர்கிறாள். இவ்வாறு கதை நீண்டு கொண்டே செல்கின்றது.

'பட்டாம்பூச்சி' எனும் சிறுகதை போரில் தனது தாயை இழந்த ஒரு குழந்தையின் தாய்ப்பாசத்தை மையமாக வைத்துப் புனையப்பட்டிருக்கிறது. அதனூடாக ஒரு குடும்பத்தின் அன்புப் பிணைப்பையும் காண முடிகின்றது. அடுத்த ஆண்டு பள்ளிக்குச் செல்ல இருக்கும் சிறுமி இசையாள் அடிக்கடி, 'அம்மா எங்கை? அம்மா எங்கை?' என்று தன் அப்பா ராகவனிடம் கேட்டு அடம்பிடிக்கின்றாள். போராளியான தன் காதல் மனைவிகாவியா, தன்னையும்தனது குழந்தையையும் விட்டு இறந்து போனதை நினைத்து அழுகிறான். அவனும் ஒரு காலை இழந்து சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவனுடைய அம்மா மீனாட்சிதான் அவனுக்கும் குழந்தைக்கும் துணையாக இருக்கிறாள். மீனாட்சியின் சகோதரனின் மகள் பவித்திரா, போரில் கணவனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறாள். ராகவனை விட வயது குறைந்தவள். அவர்கள் இருவரும் மறுமணம் செய்து கொண்டால் எல்லோருக்கும் நன்றாக இருக்கும், குழந்தைக்கும் நல்லது என்று தாய் மீனாட்சியம்மாள் நினைக்கிறாள். போரினால் குடும்பங்கள், குறிப்பாகப் பெண்கள் எப்படிச் சிதைவுற்றுக் கிடக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்கிடையில் நிலவும் ஆழந்த அன்பையும் இக்கதை சித்திரிக்கின்றது.ஒரு பெண் திருமணத்திற்குப் பிறகு தனது தந்தையின் நினைவில் தோய்ந்துபோகும் எண்ண வோட் டங்களைப் பதிவு செய்துள்ளது 'தந்தையின் தாலாட்டு' சிறுகதை.

2009ஆம் ஆண்டு நடந்த ஈழ விடுதலைப் போருக்குப் பிறகு, ஈழத்தமிழ்ப் பெண்களும், முன்னாள் பெண் போராளிகளும் வலுக்கட்டாயமாகவும் நிர்ப்பந்தமாகவும், நயவஞ்சகமாகவும், பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதை யாழ். தர்மினி பத்மநாதனின் சிறுகதைகள் புலப்படுத்துகின்றன.

அத்தகைய இக்கட்டான, நெருக்கடியான சூழலிலும் ஈழத் தமிழ்ப் பெண்கள் துணிச்சலுடனும் சாதுர்யத்துடனும் வாழ்க்கையை எதிர்கொள்வதை அவரது சிறுகதைகள் சித்திரிக்கின்றன. சுயசிந்தனையுள்ள பெண்களையும் அவரது சிறுகதைகள் சித்திரித்துள்ளதைக் காணமுடிகிறது.

# அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி வெளிவரவிருக்கின்றது யாழ்தேவி திரைப்படம்

ஈழத்தின் சினிமா வளர்ச்சியின் அடுத்த படிக்கல்லாக வர்த்தக சினிமா என்ற குறிக்கோளுடன் கலை, கலாசாரம், பொழுதுபோக்கு என அனைத்தையும் ஒன்றிணைத்து பல தடைகள் தாண்டித் தயாராகிவரும் யாழ்தேவி திரைப்படத்தின் இசை வெளியீட்டுவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. யாழ்.கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் வைத்து தென்னிந்திய திரைப்பட நடிகை பூஜா அதனை வெளியிட்டு வைத்தார்.

யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி தயாரிக்கப்பட்டு வரும் முழு நீளத் திரைப்படம் யாழ்தேவி.

சண்டை, மற்றும் கலை அம்சங்களுடன் கூடிய இந்தத் திரைப்படத்தை ராஜஸ்ரோன் புரடக்சன் கந்தசாமி தயாரிக்கின்றார். இணைத் தயாரிப்பாளர்களாக இராஜேந்திரகுமார் மற்றும் தசரதன் உள்ளனர். கந்தசாமி லோககாந்தன் படத்தை இயக்கி வருகின்றார். லவன், சாரு, றெஜி, லிங்கம், தனா, நிக்சன் ஆகியோர் உதவி இயக்குநர்களாகப் பணி புரிகின்றனர். சங்கர், கிரிஸ், நிரோசா, மிதுனா, மதிசுதா மற்றும் பலர் படத்தில் நடிக்கின்றனர்.

மிக பிரம்மாண்டமாக ஈழத்து வர்த்தக சினிமா என்ற ஒரே குறிக்கோளுடன் உருவாகிவரும் யாழ் தேவி திரைப்படம் எட்டுக் கோடி தமிழ் மக்களின் இரசனையைப் பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டு இன்னும் சில மாதங்களில் வெளிவரவுள்ளது. ஈழத்தில் அனைவரையும் தனது இசையால் வசப்படுத்தி வைத்த இசையமைப்பாளர் சுதர்சன், சிறப்பான இசையை இந்திய இசையமைப்புக்கு நிகரான வகையில் வழங்கியுள்ளார்.

இதில் இந்தியப் பாடகர்களுடன் ஈழத்தின் முன்னணிப் பாடகர்களும் இணைந்து தமது திறமையை வெளிக்காட்டியுள்ளனர்.

**யாழ்.என்ரரெயின்மென்ற் குழுமத்தினரின் ஏற்பாட்டில் இந்தியக் கலைஞர்கள் இங்கு வரவழைக்கப்பட்டு பறையிசைப் பாசறைகள் இடம்பெறவுள்ளன.**

**யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புனித அடைக்கல அன்னை ஆலய ஜெறோம் மண்டபத்தில் எதிர்வரும் 20, 21, 22 ஆகிய தினங்களும், வவுனியா, தூய ஆவியானவர் ஆலயத்தில் 24, 25, 26 ஆகிய தினங்களும், திருகோணமலை தில்லையம்பலம் நுண்கலைக் கல்லூரியில் 27, 28, 29 ஆகிய திங்களும் பறையிசைப் பயிற்சிப் பாசறைகள் இடம்பெறுமென அமைப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)**

# பறையிசைப் பயிற்சிப் பாசறை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுத் தகவல்கள்

1. எமது பூமி எக்காலத்தில் தோன்றியது?
   5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்.
2. நெருப்பின் உபயோகத்தை அறிந்து கொண்ட மனிதர் யார்?
   நியாண்டதால் மனிதர். 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.
3. செம்பின் உபயோகத்தை அறிந்து பயன்படுத்தியவர்கள் யாவர்? எக் கால கட்டத்தில்?
   எகிப்தியர்களும் சுமேரியர்களும். 3ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்னர்.
4. சிந்து வெளி நாகரிகம் எவ்விடங்களில் நிலைத்திருந்தது?
   மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில்
5. உலகின் முதலாவது பிரமிட் எங்கு எப்பொழுது அமைக்கப்பட்டது.
   எகிப்தில் கி.மு. 2900இல் காஸா பிரமிட்
6. 365 நாள்களைக் கொண்ட கலண்டரை எவர்? எப்பொழுது அறிமுகம் செய்து வைத்தனர்?
   எகிப்தியர் கி.மு. 2500 இல்
7. சீன நாகரிகத்தை உருவாக்கிய அரச பரம்பரை எது?
   சாங் பரப்பரை.
8. கி.மு. 800 அளவில் கிரேக்க அறிஞர் ஹோமரால் படைக்கப்பட்ட காவியங்கள் எவை?
   இலியட், ஒடிசி.
9. பதிவு செய்யப்பட்ட முதலாவது ஒலிம்பிக் விளையாட்டு எவ்வாண்டு ஆரம்பமாகியது?
   கி.மு. 776
10. இஸ்லாம் மதத்தின் ஸ்தாபகர் யார்?
   முகம்மது நபி (கி.பி 570 -632)
11. உலகப் புகழ் பெற்ற ஓவியம் எது? அதனை வரைந்தவர் யார்.?
   மோனாலிசா. வரைந்தவர் லியனாடோ டா வின்சி (1503)
12. சீன அதிசயம் எனப்படுவது எது? அது எப்பொழுது கட்டப்பட்டது?
   சீனப் பெருஞ்சுவர். கி.மு. 215 இலிருந்து கட்ட ஆரம்பிக்கப்பட்டது.
13. ஈர்ப்புப் பற்றிய கோட்பாட்டின் தந்தை யார்?
   ஐசெக் நியூட்டன் (1664)
14. வெறிநாய்க் கடிக்கான மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
   லூயிஸ் பாஸ்டர் (1895)

## வர்ணம் தீட்டுவோம்... வாங்க....







## வரலாற்றில் இன்றைய தினம்

364 - பதவியைத் துறந்து 8 மாதங்கள் கடந்த நிலையில் றோமன் பேரரசர் யோவியான். சந்தேகத்துக்கிடமான சூழ்நிலையில் தமது கூடாரத்தில் சாவடைந்த நிலையில் காணப்பட்டார்.

1600 - றோமில் மத நிந்தனையைக் காரணமாகக் கூறி தத்துவஞானி கியர் டோனா புருணோ உயிருடன் எரிக்கப்பட்டார்.

1801 - அமெரிக்க ஜனாதிபதியாக தோமஸ் ஜெபர்சனும். உப ஜனாதிபதியாக ஆரோன் பரும் தேர்வு செய்யப்பட்டனர்.

1863 - காயமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் சர்வதேசக் குழு ஜெனீவாவில் குடிமக்கள் குழு. ஒன்றினால் தொடங்கப்பட்டது. பின்னாளில் இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாகப் பரிணமித்தது.

1919 - போல்ஸ்விக்குக்கு எதிராக போராட என்ரிணற் மற்றும் அமெரிக்க உதவியை உக்ரைன் மக்கள் குடியரசு கோரியது.

1933 - நியூஸ் வீக் சஞ்சிகை முதன் முதலாக வெளியிடப்பட்டது.

1949 - இஸ்ரேலின் முதல் ஜனாதிபதியாக சைம் விஷ்மன் பதவியேற்பு.

1959 - மேக மூட்டத்தை அளவிடும் முதலாவது கால நிலை அவதான விண்கலம் தொடக்கி வைக்கப்பட்டது.

1979 - சீன - வியட்நாம் போர். தொடங்கியது.

1980 - எவரெஸ்ட் சிகரத்தில் முதலாவது குளிர்கால மலையேற்றம் கிறிஸ்ரொப் விலிகி மற்றும் லெஸ்ஸெக் சிச்சி ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

1992 - நகோர்னோ- கரபாக் போர். அமெரிக்கப் படைகள் 20 அஸர்பைஜான் குடிமக்களை குவாரடாக்லி கிராமத்தில் படுகொலை செய்தது.

1995 - செனிபா போர். ஐ.நா.தலையீட்டின் கீழ் பெரு மற்றும் ஈக்குவோடா நாடுகளுக்கு இடையேயான போர் நிறுத்தத்தில் முடிவடைந்தது.

1996 - உலக சம்பியன் ஹாரி கஸ்பரோ, டீப்புளு சுப்பர் கணினியை செஸ் போட்டியில் தோற்கடித்தார்.

## ஆபத்து வந்தால் அச்சம் மேலெழும்

விஜயநகர மன்னர் பல நாட்டுக் கிளிகளை வளர்த்து வந்தார். அவற்றுக்குத் தெய்வங்களின் பெயரைக் கூறும்படி தினசரி கற்றுக்கொடுத்து வந்தார். ஒவ்வொரு கிளியும் ஒவ்வொரு தெய்வத்தின் பெயரை உச்சரித்துக் கொண்டே இருக்கும்.

ஒருநாள் கிளிக்கூண்டின் அருகே தெனாலிராமனோடு வந்தார் மன்னர். மன்னரைக் கண்டதும் கிளிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வத்தின் பெயரைக் கூறிக் கூவின. மன்னர் மகிழ்ச்சியுடன் "பார்த்தாயா ராமா, கிளிகளுக்குக் கூடத் தெய்வபக்தியை!" - என்றார்.

அதை மறுத்தான் தெனாலிராமன். கிளிகளுக்குச் சுய அறிவு இல்லை. தாம் சொல்லும் பெயர், தெய்வத்தின் பெயர் எனத் தெரியாது என்றான்.

மன்னரோ கிளிகளுக்குத் தெய்வ பக்தியுண்டு. அதனால்தான் நாம் சொல்லிக்கொடுத்த தெய்வப் பெயர்களை உடனடியாகக் கற்றுக் கொண்டன - என்றார். இருவரும் வாதிட்டார்கள். முடிவில் "ஒருநாள் அவகாசம் கொடுங்கள். மனிதன் ஆபத்துக் காலத்தில் தெய்வத்தை வேண்டுவதுபோல் கிளிகள் ஆபத்துக் காலத்தில் தெய்வத்தை வேண்டா என்பதை நிருபிக்கிறேன்" எனச் சவால் விட்டான் தெனாலிராமன்.



அரசரும் அதற்கு ஒப்புக்கொண்டார்.

மறுநாள் அரசரை அழைத்துக்கொண்டு கிளிகள் இருக்கும் இடத்துக்குச்சென்றான் தெனாலிராமன். கிளிகள் நிதானமில்லாமல் கீச் கீச் என்று கத்தியவாறு கூண்டுக்குள் அங்கும் இங்கும் நிலையில்லாது பறந்தடித்துக் கொண்டிருந்தன.

மன்னருக்கு ஒன்றும் புரியவில்லை. "இப்போது சொல்ல வையுங்கள் உங்கள் கிளிகளை கிருஷ்ணா! ராமா! கோவிந்தா! என" என்று கூறினான் தெனாலிராமன்.

மன்னரும் எவ்வளவோ முயன்றார். எத்தனையோ முறை தெய்வங்களின் பெயரைச் சொல்லச் சொல்லி முயன்றார்.

கிளிகள் கீச் கீச் என்று கத்திக்கொண்டே அங்கும் இங்கும் பறந்தனவே தவிர, தெய்வப் பெயர்களைச் சொல்லவே இல்லை.

தெனாலிராமனிடம் "உன்வெற்றியைப் பாராட்டுகிறேன்.இதை எப்படிச்செய்தாய்? இந்தக் கிளிகளை என்ன செய்தாய்" என்றார்.


கிளிக் கூண்டின் எதிரே துணியால் மூடப்பட்ட ஒரு கூண்டின் துணிகளை விலக்கி விட்டு மன்னருக்குக் காட்டினான் தெனாலிராமன். கிளிகள் இப்போது கடுமையாகக் கூச்சலிட்டன. தெனாலிராமன் காட்டிய கூட்டுக்குள் நான்கு பூனைகள் இருந்தன. "கிளிகளுக்கு இந்தப் பூனைகளைக் காட்டிவிட்டு இங்கே மூடி வைத்து விட்டேன். கிளிகளுக்கு இந்தக் கூண்டை விட்டு பூனைகள் வெளி வரமுடியாது என்றோ, தங்கள் கூட்டுக்குள் பூனை வரமுடியாது என்றோ எண்ணும் அறிவு கிடையாது"

"பூனையைக் கண்டதும் தங்களுக்கு ஆபத்து வந்து விட்டு என்று கத்துகின்றனவே தவிர, தெய்வத்தின் பெயரைச் சொல்லுவோம் என்ற அறிவாற்றல் இல்லை. இந்தப் பூனைக் கூண்டை அப்புறப்படுத்தி விட்டால் திரும்ப நீங்கள் சொன்னபடி தெய்வப் பெயர்களைஅவை கூறும்" என்றான் தெனாலிராமன்.

அதேபோல் கூண்டைக் கிளிகளின் கண்களுக்குத் தென்படாதவாறு அப்புறப்படுத்திய பிறகு, கிளிகள் தெய்வப் பெயர்களை மன்னர் சொன்னபடிகூறின. மன்னர் தெனாலிராமனின் அவறிவாற்றலை மிகவும் பாராட்டி பொற்காசுகளைப் பரிசாக அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழிலிருந்து எழுபது வரையும் இசையோடு...



## மூத்த கலைஞர் அன்ரன் டேவிற்றுடன் ஒரு சந்திப்பு

சி.ப. வேந்தன்

'அன்ரன் டேவிற்' இலங்கையின் பொப்பிசை வரலாற்றில் ஹிந்திப் பாடல்கள் மூலம் தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தைச் சம்பாதித்துக் கொண்டு வலம்வரும் ஓர் இசைக்கலைஞன். பொப்பிசைச் சக்கரவர்த்திகளான ஏ.ஈ. மனோகரன், அமுதன் அண்ணாமலை போன்றவர்களுடன் இணைந்து நாடு முழுவதும் ஏராளமான இசைநிகழ்ச்சிகளை நடத்தி வந்தவர். நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக நோர்வே நாட்டுக்குப்புலம் பெயர்ந்து சென்றும்,தனது இசையின் மீதான தாகம் தணியாது. ஐரோப்பிய நாடுகளெங்கும் பயணம் செய்து தனது கலைச் சேவையைப் புரிந்தவர். 'ஹிந்தி இசைத்தென்றல்', 'கலைமாணி', 'கலை மாமணி', 'இசை வாணர்', 'கலைத்தென்றல்', 'பொப்பிசைச் சக்கரவர்த்தி', 'பொப்பிசை மன்னர்' என நோர்வே, ஜேர்மனி, இந்தியா எங்கிலும் பல பட்டங்களையும் பெற்றிருக்கிறார். ஏழு வயதிலிருந்தே ஆரம்பித்த இவரது இசைப்பயணம் எழுபதுகளைத் தொட்டும் அதேவேகத்துடன் இன்று வரை பயணித்துக் கொண்டிருப்பது ஆச்சரியமே.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்திருக்கும் அவரது வீட்டுக்குள் நாம் நுழையும்போது ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தவரிடம் எங்களை அறிமுகப்படுத்த, புன்முறுவலுடன் வரவேற்று அமரச்செய்தவர் .மிகவும் சுவாரஸ்யமாக தன்னுடைய இசை அனுபவத்தை பற்றிக் கூறத் தொடங்கினார்.

என்ரை சொந்த இடம் சுண்டுக்குளிதான். யாழ்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியிலதான் படிச்சனான். என்ர குடும்பத்தில ஒருத்தரும் இந்தத்துறையில ஈடுபடேல்லை. நான் மட்டும்தான் இதுக்க வந்தனான். இப்ப என்ரை பிள்ளைகள் ரெண்டுபேரும் இந்தத்துறைக்குள்ள இருக்கினம். சின்ன வயசில இருந்தே எனக்குக்கலை எண்டா நல்ல விருப்பம். என்ர ஏழு வயசிலையே மேடைஏறி பாட்டுப் பாடவும் நாடகம் நடிக்கவும் தொடங்கியிட்டன். 57ஆம் ஆண்டுதான் நான் முதன் முதலா எங்கட சுண்டுக்குளி சென்.யுவானியார் கோயிலிலை மேடைஏறினனான். தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள், போட்டிகள் எண்டு செய்யவெளிக்கிட்டன். அந்த நேரம் கூடுதலா சின்னமேளம், வில்லுப்பாட்டு, கூத்து எண்டு நிறைய நடக்கும். அப்பதான் கொஞ்சம் கொஞ்சமா மெல்லிசை நிகழ்ச்சிகள் தலைகாட்ட வெளிக்கிட்டது. மக்களும் ஒரு வித்தியாசத்தைத்தேடினதாலை அது கூடிய விரைவிலை பிரபலமாகத்தொடங்கிச்சுது. யாழ்ப்பாணம் முழுக்க கண்ணன், அப்பி–பபி, பரமேஸ்–கோணேஸ் எண்ட இசைக்குழுக்களிலை எல்லாம் நான் பாடினனான். இதைவிடவும் கூத்து, நாடகங்களிலயும் எனக்கு நல்ல விருப்பமும் ஆர்வமும் இருந்ததாலை அதுகளிலையும் நடிக்கிறனான். அப்பதான் நாட்டுச்சூழ்நிலை மோசமாக,நான் இந்தியா போயிட்டன். அங்கதான் நான்முழுமையா சங்கீதத்தை முறைப்படி படிச்சனான். அதோட ஹிந்திப்பாடல்களிலையும்என்ரை கவனம் கூடுதலா இருந்தது. அதுக்குப்பிறகு அப்பிடியே நோர்வேக்குப் போயிட்டன். அங்கேயும் 'ஆடின காலும் பாடின வாயும் சும்மா இருக்காதெண்டு சொல்லுறதைப்போல' என்னால சும்மா இருக்க ஏலாமல் இருந்தது. அங்கையும் நான் 'ஏசியன் மியூசிக்கல் நைட்' எண்ட இசைக்குழுவை ஆரம்பிச்சு, அதன்மூலமா நிறைய கலைநிகழ்ச்சிகளைச் செய்ய ஆரம்பிச்சன். அதோட எங்கட பாரம்பரிய கூத்துக்கலையையும் விடாம அங்கை பரவலா மேடையேத்தினன். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில எங்கட கூத்து நாடகத்தைப் பாத்த நோர்வேக்காரர் அசந்துபோயிட்டினம். அவைக்கு எங்கட கூத்துக்கலையில நிறைய விருப்பமும் மதிப்பும் இருந்தது. அது கலையை மதிக்கிற ஒரு நாடெண்டதால என்னால சுதந்திரமா நிறையக் கலைநிகழ்ச்சிகள நடத்தக்கூடிய மாதிரி இருந்தது. அங்க மட்டுமில்லாம கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் எண்டு நிறைய ஐரோப்பிய நாடுகளிலை எல்லாம் நான் நிகழ்ச்சிகளைக் கொண்டுபோய்ப்போட [illegible] போரால பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஏதோ என்னால முடிஞ்சளவு உதவக்கூடிய மாதிரி இருந்தது. எனக்குக் கலை நிகழ்ச்சியை நடத்திறதிலை எவ்வளவு சந்தோசம் கிடைச்சதோ,அதைவிட கலை மூலமா குழந்தைகளுக்கு உதவமுடிஞ்சதிலை தான் ஏகப்பட்ட சந்தோசம் கிடைச்சது. 'இசைவண்ணங்கள்' 'இதயராகம்' எண்ட ஒலித்தொகுப்புக்களை வெளியிட்டனான். இருபத்தைஞ்சுபாட்டுக்கு மேலைநானே இசையமைச்சுப்பாடியிருக்கிறன். அதிலயும் 'நிலா நிலா' எண்ட பாட்டுத்தான் எனக்கு நிறையப்பிடிக்கும். ஈழத்தின்ர நிலமைபற்றியும் போரின் கொடுரம் பற்றியும் நான் எழுதி இசையமைச்ச பாட்டை என்ர மகள்தான் பாடினவ. இப்ப கேட்டாலும் எனக்கு ஏதோ மனசைப்பிசையுறமாதிரி இருக்கும்.

இந்தியாவிலை இருக்கேக்க சினிமாத்துறைசார்ந்த தொடர்புகள் எனக்கு, நிறையக்கிடைச்சது.எல்லா பாடகர்களோடயும் சேர்ந்து நிகழ்சிகளும் செய்திருக்கிறன்.அப்ப எனக்கு நிறைய சினிமா வாய்ப்பும் வந்தது.அம்மா சொன்னா 'தம்பி இந்திய சினிமா ஒரு கடல், அதில போய் நீ உன்னைத் தொலைச்சுப் போடுவாய்,நீஉன்ரைதனித்துவத்துக்குஎது ஒத்துவருதோ,அதை மட்டும் செய்' எண்டு. அதால நான் அதைக்கைவிட்டனான். ஆனா பிறகு நாளடைவில அதில இருந்த உண்மையை புரிஞ்சுகொண்டன். சினிமா எண்ட சிறைக்குள்ள அகப்படாம விட்டதாலதான்,என்ரை அடையாளம் இப்பவரைக்கும் தொலையாம இருக்கெண்டு நினைக்கிறன்.

இதுவரைக்கும் என்ரை இசைப்பயணத்தின்ர ஐம்பதாவது வருசமா என்னோட கலைப்பணியில சேர்ந்து பயணிச்ச எல்லாரையும் சேர்த்து ஒரு பொன்விழா நிகழ்வைச்செய்தனான். அது என்ர வாழ்க்கையில மறக்கமுடியாத தருணம். பழைய ஞாபகங்கள், இனிய நினைவுகள் எண்டு எல்லாரும் பகிர்ந்துகொண்டம். எல்லாரும் இந்தியாதான் கலைஞர்களுக்கான நாடு,அங்கதான் எல்லாரும் இருக்கினம் எண்டு நினைச்சுக்கொண்டு இருக்கினம் அது உண்மைதான். இந்தியா கலைகளிலை உச்சத்திலை இருக்கிறதை ஏற்றுக் கொள்ளலாம், ஆனா இங்கையும் திறமையானவர்கள் இருக்கினம். இப்ப இருக்கிற தலைமுறையிலை அரைவாசிப் பேருக்கு இலங்கையிலை உள்ள மெல்லிசைக் கலைஞர்கள் பற்றியும், அந்தக் கலைகள் பற்றியும் எதுவும் தெரியாது. உதாரணமா 'சின்ன மாமியே' எண்ட பாட்டு,இப்ப இந்திய சினிமாவிலை ரீமிக்ஸ்ஸிலை வந்திருக்கு. அதைக்கேக்கிறஆக்கள்அதுஇலங்கைப் பாட்டெண்டு சொன்னா ஏற்காயினம். ஆனா அதின்ரை பெறுமதி தெரிஞ்சு இந்தியக் கலைஞர்கள் அதைப்பயன் படுத்தினம். உண்மையிலயே எங்கட திறமையைப்பற்றி எங்களுக்கே தெரியுறதில்லை. அப்பிடி யாராவது அதை நிரூபிச்சாலும், அதில நிலைச்சு நிக்கிறது பெரிய் போராட்டமாத்தான் இருக்கு.

இப்ப இருக்கிற புதிய தலைமுறைகளில கலைகள் பற்றி புரிஞ்சு கொள்ளுற தன்மை ஆரம்பிச்சிருக்கு. இது நல்ல ஆரோக்கியமாவும் இருக்கு. நிறையக்குறும்படங்கள்,நிறையப்பாடல்கள், நாடகங்கள் எண்டு வரத்தொடங்கியிருக்கு. சரியோ பிழையோ முதல்ல செய்ய வெளிக்கிடவேணும். அப்பதான் அதில இருக்கிற நெளிவு சுளிவுகளைக் கண்டுபிடிச்சு திருத்திக் கொள்ளலாம். கடைசியிலை சரியாய்ச் செய்யிறதுக்காக முதல்லை பிழையா செய்யிறதுதப்பில்லை.எங்கடை பிள்ளைகளுக்கு கலை சம்பந்தமா கற்றுக் கொள்ள ஒரு கலைக்கூடமில்லை, ஆய்வுப்பட்டறைகள் இல்லை, கலைக்கான கல்லூரிகளில்லை. அப்ப எப்பிடி நல்ல கலைகள் உருவாகும்? முதல்ல நாங்கள் அடிப்படைகளை நிவர்த்தி செய்யவேணும். வருகிற தலைமுறைக்கு நல்ல வழிகாட்டுதல்களைச் செய்ய வேணும். இது தனி ஒருவராலை முடிகிற காரியமில்லை. எல்லாரும் சேர்ந்து செய்யவேணும். நாங்கள் இந்தக் கலைகளிலை ஒரு அடையாளத்தை தேடிக்கொள்ளப் பட்ட கஷ்டங்களை எங்கடை பிள்ளைகளுக்குக்குடுக்கக் கூடாதெண்டு ஒவ்வொரு மூத்த கலைஞனும் சம்பந்தப்பட்டவர்களும் நினைக்க வேணும், என்றுதன் மனக்குமுறலைக்கொட்டுகிறார் இந்த மூத்த கலைஞன். கலையை உயிராய் நேசிக்கும் ஒரு கலைஞனுக்குத்தான் அந்தக் கலையின் உயிர்ப்பு பற்றிய அக்கறை இருக்கும். அன்ரன் டேவிட்டின் இப்போதைய கவலையெல்லாம் கலையின் உயிர்ப்பு பற்றியது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடுவூர் சிவகேசவனின் "ஈழக் கவிஞனின் சங்கற்பம்" நூல் வெளியீட்டு விழா

வவுனியா தமிழ்ச் சங்கம் வெளியிட்ட பேராதனைப் பல்கலைக் கழக மாணவன் சேமமடுவூர் சிவகேசவனின் இரண்டாவது நூலான "ஈழக் கவிஞனின் சங்கற்பம்" எனும் கவிதை நூல் வெளியீடு கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகரும், செயலாளருமான தமிழருவி .த.சிவகுமாரன் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொள்ள விருந்த நிலையில் தவிர்க்க முடியாத ஒன்று கூடலின் நிமித்தம் அவரால் சமுகமளிக்க முடியவில்லை. எனினும் அவர்தம் வாழ்த்துச் செய்தி சபையில் பகிரப்பட்டது. அவருக்குப் பதிலாக வடமாகாண சபை உறுப்பினர்.ஜி.ரி.இலிங்கநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார். சிறப்பு அதிதிகளாக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

விழா மங்கல விளக்கேற்றலுடன் இனிதே ஆரம்பமானது. திருமதி தாட்சாயினி கணேசநாதன் தமிழ்த் தாய் வாழ்த்தைச் சிறப்புறப் பாடினார். விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரையும் விழா நாயகன் சேமமடுவூர் சிவகேசவன் இரு கரம் கூப்பி வரவேற்றார். வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் ஆசி உரையை வழங்கினார். இவர் தனது ஆசி உரையில், தனது பாடசாலையில் கற்ற மாணவன் சேமமடுவூர் சிவகேசவன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்பதும், கவிஞனாக இலக்கிய உலகில் பிரவேசிக்க முற்படுவதும் தமக்கெல்லாம் பெருமை என்றதுடன், தனது தலைமையில் சிவகேசவனின் இந்துக்களின் வாழ்வியல் தத்துவங்கள் எனும் நூல் 2011 இல் வெளியிடப்பட்டதையும் நினைவு கூர்ந்தார்.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.என். ஜி.நாதன் வழங்கிய வாழ்த்துரையில் வவுனியா தமிழ்ச் சங்கம் எதிர்காலச் சந்ததி குறித்து அக்கறை கொள்கிறது. அதன் ஓர் அங்கமாகவே சேமமடுவூர் சிவகேசவனின் நூலை வெளியீடு செய்கிறோம் என்றார்.

தொடக்கவுரையை, தமிழ்ச் சங்க உறுப்பினர் சிவகஜேந்திரகுமார் நிகழ்த்தினார். தமிழருவி த.சிவகுமாரன் வழங்கிய தலைமை உரையில், தனது நூலை தமிழ்ச் சங்கமே வெளியிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதிற்கிணங்க எமது 51ஆவது வெளியீடாக இந்த நூலை வெளியிடுகின்றோம் என்றார். பிரதம விருந்தினரான வடமாகாண சபை





உறுப்பினர் ஜி .ரி. இலிங்கநாதன் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை நூலாசிரியரின் பெரிய தாயார் பெற்றுக் கொண்டார்.

தமிழ் மணி கே.கே. அருந்தவராஜா (மேழிக்குமரன் ) நூல் நயவுரை நிகழ்த்தினார். ஈழத்துப் புதுக் கவிதை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். சிவகேசவனின் கவிதைகளை வள்ளுவரது குறள்களுடனும் பாரதி மற்றும் பாரதிதாசன் முதலியோரின் கவிதைகளோடும் ஒப்பிட்டு, கவிதைகள் கொண்டுள்ள சிறப்பம்சங்களை அழகுற எடுத்தியம்பினார். சிவகேசவனின் கவிதைகள் யாவும் தன்னம்பிக்கையை ஊட்டுவனவாய் அமைகின்றன என்றார். பல இடங்களில் சிவகேசவனது கவிதைகளில் அன்பின் முக்கியத்துவம் மீண் டும் மீண்டும் எடுத்துரைக்கப் படுவதைச் சுட்டிக் காட்டினார். அதேவேளை பல இடங்களில் சமூக அக்கறை காரணமாக சமூகப் போராளியாகவே சிவகேச வன் மாறி விடுவதையும் சுட்டிக் காட்டினார். அணிப் பிரயோகம் சிறப்புற அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டியதுடன் சங்கப் பாடல்களின் சாயலை சிவகேசவனது பாடல்களில் அவதானிக்க முடிகிறது என்றார். பிரதம விருந்தினரான ஜி.ரி. இலிங்கநாதன் தனதுரையில் சிவகேசவனது முயற்சியைப் பாராட்டினார்.

சிறப்புவிருந்தினரான வவுனியா மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் சைவப் புலவர் இ.நித்தியானந்தன் தனதுரையில் சேமமடுவூர் சிவகேசவனின் "ஈழக் கவிஞனின் சங்கற்பம்" நூலில் இடம்பெற்ற சில கவி வரிகளை மேற் கோள் காட்டி உரையாற்றினார் .

நாளை நான் இறக்கலாம்
உடல் மண்ணோடு கலக்கலாம்
என்னைப் பலர் மறக்கலாம்

நான் மா ண்டாலும் மானிடர்க்கு உதவுவேன் என்ற சிவகேசவனின் கவி வரிகள் தன்னை ஈர்த்தன என்றார். சேமமடு என்னும் பழைய கிராமத்திலிருந்து மேற்கிளம்பும் சிவகேசவனது இலக்கியப் பணி தொடர வேண்டும் எனவும் வாழ்த்தினார் .

நூலாசிரியர் தனது ஏற்புரையில் கவிதை என்பது ஒரு மொழியைக் கொண்டு வெளிப்படுத்தக்கூடிய இலக்கிய வகைகளில் முதன்மையான இலக்கிய வடிவம் என்றார். கவிதை என்றால் காதல் கவிதை தான் என்றும், காதலிப்பவர்கள் தான் கவிதை எழுதுகிறார்கள் என்றும் எமது சமூகத்தில் புறநடையான சிந்தனை இருக்கிற தென் பதை வருத்தத்துடன் தெரிவித் தார். தனது கவி தைகள் யாவும் எந்தவொரு சமூகத்தையோ இனத்தையோ சாராது உலகப் பொதுத் தளத்தில் யாவருக்கும் பொருந்தும் வகையில் உள்ளதென்றார். எவர் தமக்கான கவிதைகள் இவை என எண்ணுகிறார்களோ, அவர்களுக்குப் பொருந்தும் வகையில் இந்தக் கவிதைகள் உள்ளதென்றதுடன், தொடர்ந்தும் நாம் போரில் இழந்தவைகளைப் பற்றியே 2009 முதல் இன்று வரை பேசிக் கொண்டிருக்கிறோம். போர் தொடர்பான கசப்பான உண்மைகளை பதிவு செய்யும் இலக்கியங்களான இவை, ஆவணப்பதிவுகளாகும். ஆனால், இழந்ததைப் பற்றியே பேசுவதால் நாம் பெற்றது என்ன எனச் சபையிடம் வினா விய கேசவன், தனது கவிதைகள் பாதிக்கப் பட்ட சமுதாயத்தை அரசியல், கல்வி, பொருளா தார ரீதியில் துடிப்புடன் செயற் பட உதவ வேண்டும். அதுவே தனது விருப்பம் என்றார். திராவிட மொழிகளில் மூத்த மொழியாகத் தமிழ் கருதப்படுவதற்கு 'ழ' என்ற எழுத்தும் காரணமாக அமைகிறது. அந்த 'ழ' என்பது ஈழம் என்ற சொல்லில் இருப்பதுவும் சிறப்பு என்றார். அதனால் தான் "ஈழக் கவிஞனின் சங்கற்பம்" என்று எனது நூலுக்குப் பெயர் சூட்டினேன் என்றார். தனது கவிதைகளை எவராவது ஒருவர் படித்துப் பயன் பெற்றாலே அது தனக்குக் கிடைக்கும் வெற்றி எனக் குறிப்பிட்ட சிவகேசவன், விழாவிற்கு உதவியவர்கள், நூல் வெளிவர உதவியயாவர்க்கும் நன்றி கூறும் முகமாக நன்றி உரை நிகழ்த்தியதுடன் நிகழ்வு சிறப்புற நிறைவுற்றது.

# இலக்கியங்களும் காதலும்

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**'மேனி கொதிக்குதடி- தலை சுற்றியே**
**வேதனை செய்குதடி**
**வானிலிடத்தையெல்லாம்-இந்த வெண்ணிலா**
**வந்து தழுவுது பார்...'**

என தொடர்ந்து செல்லும் பாடலில் காதலி வராதமையால் காதலன் அடையும் வருத்தம் அழகுற வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

'கூடல், கூடல், கூடல்
கூடிப்பின்னே குமரன் போயில் வாடல் வாடல்' என்ற வரிகள் குயிற்பாட்டிலே பாரதியின் கவிக்கிறுக்கல்களாக மிளிர்கின்றன. தலைவனானவன் ஒன்றுசேரும் காலத்தில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. ஆயினும் தலைவன் மீண்டும் பிரிந்து செல்கையில் ஏற்படும் துயருக்கும் எல்லையில்லை என்பதை இரத்தினச் சுருக்கமாய் கூறிச்செல்கிறார் பாரதி.

**தற்கால இலக்கியங்களில் காதல்.**

இவ்வாறாக பழம்பெரும் இலக்கியங்கள் பெரும்பாலானவற்றில் ஏதோவொரு வகையில் காதல் சார்ந்த கருத்துக்கள், சம்பவங்கள் புகுத்தப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. புனைகதை இலக்கியங்கள் மூலமாகவும் காதல் என்ற விடயம் வெகுவாகப் பேசப்படுவதை அவதானிக்க முடிகிறது. வ.வே.சு.ஐயரின் 'மங்கையர்க்கரசியின் காதல்' எனும் சிறுகதையில் கருணாகரன் மீது மங்கையர்க்கரசி கொண்ட தீராக் காதல் எடுத்துக் கூறப்படுகிறது. அதேபோல "சுடர்த் தொடீஇ கேளாய்....' என்ற கலித்தொகைப் பாடலை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட "நகைப்பூங்கொத்து" என்ற பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் கட்டுரை மூலமாகவும் காதல் பற்றிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' எனும் நாவலில் வரும் செல்லத்துரையனுக்கும், வள்ளி, சரஸ்வதி முதலான பெண்களுக்கும் இடையே அரும்பும் காதல் கதைகள், தலித்தியத்தின் பின்புலத்துடன் செருக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இவ்வாறு சிறுகதை, நாவல், கட்டுரைகளுடன், கவிதைகளும் தற்கால உலகில் காதல் பற்றி பேசுகின்றன. மேலாக இந்தக் காலத்தில் வெளியாகும் திரைப்படங்களில் 90வீத மானவை ஏதோவொரு வகையில் காதல் கதை களையும் உள்வாங்கியே வெளிவருகின்றன. இவற்றை வைத்து நோக்குகையில் 'காதல்' என்பது இன்று நேற்று தோன்றியது அல்ல. பழம்பெரும் காலம் முதல் பேசப்பட்டதும், கடைப்பிடிக்கப்பட்டதுமான விடயமே. ஆயினும் இந்தக்கால உலகில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வருகை, காதலின் புனிதத்தை சிதைத்துக் கொண்டிருப்ப தனால், காதலுக்குக் கிடைக்கும் சமூக அந்தஸ்து, மரியாதை என்பவை அற்றுப்போகின்றன. புனிதத்தைத் தொலைக்காது காதல் புரிவோமாயின் காதலும் வாழும்; எமது வாழ்வும் சிறக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி 14**

பெப்ரவரி மாதம் என்றால் காதலர்களுக்கு கொண்டாட்டமே. அந்தவகையில் பெப்ரவரி 14 சர்வதேச காதலர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. கி.பி. 270இல் ரோமப் பேரரசை ஆண்ட கிளாடியுஸ் மன்னன் காலத்தில் ஆண்கள் திருமணம் புரியத் தடை விதிக்கப்பட்டது. இதனால் ஆண்களும், பெண்களும் துன்புற்றனர். மன்னனின் கட்டளையையும் மீறி 'வலன்ரைன்' எனும் பாதிரியார் இரகசியமாகத் திருமணங்கள் பலவற்றை நடத்தி வைத்தார். இதனை அறிந்த மன்னன் குறித்த பாதிரியாரை சிறையிட்டு தூக்குத்தண்டனை நிறைவேற்றத் தீர்ப்பளித்தான். அவ்வாறு அந்த பாதிரியார் தூக்கிலிடப்பட்டு மரணித்த நாள்தான் இந்த பெப்ரவரி 14. இதன் பின்னர் ஏறத்தாழ 200 வருடங்களின் பின் கி.பி 470 ஆம் ஆண்டுகளில் பெப்ரவரி 14 ஐ காதலர் தினமாக கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது. காதலர்கள் பழைய காதலைத் தொடரவும், புதிய காதல்களைப் பகிரவும், மகிழ்வாக இன்புறவும் பெப்ரவரி 14 ஏதுவாகிறது. தூய காதலொழுக்கங்கள் பற்றிப் பேசிய பழைய யுகங்கள் போன்று தற்காலத்தில் பெரும்பாலான காதல் இருப்பதில்லை. பணம், பொருள், அழகு என்பவற்றிடம் இடம்தேடும் காதல்களே தற்கால காதல்களாக மாறி விட்ட சூழலின் உண்மைக்காதல்களும் இருக்கத்தான் செய்கின்றன. காதல் என்பதை சரியான செல்நெறியுடன் கடைப்பிடிபோமாயின் காதலின் தூய்மையும் அழகும் மங்காது ஆண்டாண்டு காலம் ஜொலிக்கும் என்பதில் ஐயமில்லை!



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 30 | 40 | 30 | 30 |
| கத்தரி | 70 | 80 | 80 | 100 | 50 | 80 | 70 | 30 |
| கரட் | 200 | 240 | 240 | 180 | 100 | 240 | 150 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 120 | 100 | 100 | 100 | 80 | 100 | 70 | 80 |
| பாகல் | 80 | 80 | 80 | 100 | 80 | 120 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 70 | 60 | 50 | 60 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 70 | 60 | 50 | 70 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 80 | 80 | 70 | 90 | 80 | 70 |
| பூசணி | 60 | 60 | 100 | 80 | 60 | 120 | 70 | 80 |
| தக்காளி | 60 | 50 | 60 | 60 | 50 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 50 | 40 | 45 | 40 |
| கீரை | 20 | 30 | 25 | 10 | 20 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 180 | 200 | 150 | 160 | 200 | 160 | 200 |
| புடோல் | 60 | 80 | 60 | 60 | 60 | 60 | 30 | 60 |
| கோவா | 80 | 80 | 60 | 100 | 60 | 80 | 60 | 60 |
| வெண்டி | 100 | 100 | 80 | 80 | 120 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 80 | 120 | 120 | 80 | 60 | 90 | 60 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 120 | 80 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 | 50 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 60 | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 08 |
| கறிமிளகாய் | 150 | 200 | 240 | 180 | 160 | 200 | 180 | 200 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 100 | 140 | 150 | 90 | 75 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 250 | 400 | 500 | 450 | 500 |
| பனங்கிழங்கு | 04 | 02.50 | 05 | 02 | 07 | – | 03 | 02 |



## பீட்ரூட் அல்வா



**தேவையான பொருள்கள்:**

கோதுமை ரவை - 150 கிராம்
பீட்ரூட் - 150 கிராம்
சீனி - 300 கிராம்
ஏலக்காய், உலர் திராட்சை - 20 கிராம்
முந்திரிப்பருப்பு - 5 கிராம்
சூரியகாந்தி எண்ணெய், தேங்காய் எண்ணெய், நெய் - 100 மில்லி

**செய்முறை:**

கோதுமை ரவையைக் கழுவி, மூன்று மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பீட்ரூட்டை மேல்தோல் நீக்கி மிக்ஸியில் அரைக்க வேண்டும். சட்டியில் எண்ணெய், நெய் ஊற்றி சூடானவுடன் ஏலம், உலர்திராட்சை, முந்திரிபருப்பு ஆகியவற்றைத் தனித்தனியே பொன்னிறமாக வறுத்து எடுக்கவும்.

சட்டியில் அரை லீற்றர் வெந்நீர் ஊற்றி பீட்ரூட் கலவையைச் சேர்க்க வேண்டும். 5 நிமிடம் கழித்து, கோதுமை ரவையைச் சேர்த்துக் கிளறவேண்டும். உப்புமா பக்குவத்தில் கலவை ஒன்று சேரும்போது, சீனியைத் தூவினால் மறுபடியும் இளகும். மீண்டும் கிளறியபின், வறுத்தவற்றை மேலே தூவி அலங்கரிக்கவும்.

இதைச் சாப்பிட்டால் குருதி விருத்தியடையும், தோல் மினுமினுக்கும், பசி உண்டாகும்.




## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | [illegible] | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சுறா | 400 | 600 | 600 | 800 | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 450 | 400 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 350 | 400 | 350 |
| கிழாக்கன் | 500 | 700 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 400 | – | – | 300 | 400 | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 200 | – | 350 |
| நகரை | 150 | 300 | – | 300 | 300 | 350 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 200 | 200 | – | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 250 | 250 | 250 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 100 | 200 | 180 | 300 | 250 | 300 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 80 | 120 | 100 | – |
| பாலை | 300 | 250 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 300 | 300 | 200 | 250 |



## ஆண்களுக்கான அணிகலன்கள்

ஆண்களுக்கான நாகரிக அணிகலன்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தோல் மற்றும் உலோகப் பொருள்களில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. ஆண்கள் நாகரிகமாக ஆடை அணிந்து செல்லும் போது இவற்றை அணியலாம். அலுவலக ஆடைகளுக்கு இவை உகந்தவை அல்ல. இவை 150 ரூபா முதல் 250 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.





## வெந்தயம் பயன்படுத்தலாம்

வெந்தயம் மிகச் சிறந்த உணவுப் பொருளாகும். அதனைக் குளிர்ச்சிக்காகப் பயன்படுத்தலாம்.

வெந்தயக் குழம்பு செய்து மாதத்துக்கு ஒரு முறை சாப்பிடலாம்.

வெந்தயத்தை தோசை மா மற்றும் வடைக்கு மா அரைக்கும்போது சேர்த்து அரைத்தால் தோசையும், வடையும் நன்கு சிவக்கும்.

வெந்தயக் கீரை வாங்கி வந்து அதனை குழம்பு செய்து சாப்பிடுவது உடலுக்கு நல்லது.

### நாளை

மாசி-06
வியாழக்கிழமை 18.02.2016
திதி: ஏகாதசி பி.இ.12.03
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ.04.37
ராகுகாலம்: 02.02-03.32 வரை
சுபநேரம்: 08.02-09.32 வரை
பீம ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய மஹா சத சண்டியாகக் கிரிகைகள் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. குறித்த சண்டியாக கிரியைகள் எதிர்வரும் எ 22 ஆம் திகதி கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் இலட் சார்ச்சனை மற்றும் சுவாமி வீதி உலா வருவதுடன் நிறைவடையவுள்ளன. இந்தக் கிரியைகளின்போதான காட்சிகள்...

## மகிந்த அரசினால்

பொருத்தமான வெளிவிவகாரக் கொள்கையை ராஜபக்சாக்கள் கொண்டிருக்காதமை, தோல்விக்கான முக்கிய காரணமா? என்று கொழும்பு ஆங்கில இதழ் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிவிவகாரக் கொள்கைகளில், துரதிர்ஷ்டவசமாக இந்தியாவை எம்மால் திருப்திப்படுத்த முடியவில்லை. சீனாவின் முதலீடுகள், நிலையான இருப்புத் தொடர்பாக இந்தியா அச்சம் கொண்டிருந்தது. இந்தியாவின் பாதுகாப்புக்கு எம்மால் அச்சுறுத்தல் ஏற்படாது என்றும், சீனாவுடனான தொடர்புகள் முற்றிலும் பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாக கொண்டது என்றும் நாம் அவர்களுக்கு உறுதியளித்திருந்தோம். ஆனால் இந்தியா அதனை நம்பவில்லை. அவர்கள் அதற்கும் மேலான உறவுகள் இருப்பதாக நினைத்தனர்.

புலனாய்வுப் பின்னணியில் இருந்து வந்தவரான இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், முற்றிலுமாக சீனாவின் மீதே கவனம் செலுத்தி வந்தவர். இலங்கையின் சகா என்ற வகையில், இரண்டு தடவைகள் அவரைச் சந்தித்தேன். அந்த இரண்டு சந்தர்ப்பங்களின்போதும், அவர் சீனாவின் தலையீடுகள் தொடர்பான கவலைகளை வெளிப்படுத்தினார். கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை இடைநிறுத்துமாறும், சீனாவின் முதலீட்டுத் திட்டங்களுக்கு எல்லை போடுமாறும் என்னிடம் வலியுறுத்தினார். 30 ஆண்டு காலப் போருக்குப் பின்னர், நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதால், நாம் அதனைச் செய்ய முடியாது என்று அவருக்கு விளக்கிக் கூறினேன்.

சீனாவிடம் இருந்து மட்டுமே எம்மால் முதலீட்டைப் பெற முடிகிறது. தற்போதைய அரசும் கூட இறுதியில் சீனாவின் முதலீட்டைத் தான் நாடக் கூடும். துறைமுக நகரத் திட்டமும் தொடங்கப்படக் கூடும்.

அப்போது இந்த விவகாரத்தை இந்தியா மீண்டும் எழுப்பும் என்று நான் உறுதியாக கூறுகிறேன். இந்தியாவுடனான பிரச்சினைகளை நாம் உணரவில்லை என்பதல்ல. இது எமது நலன்களுடன் முரண்படுகிறது, என்றும் அவர் தெரிவித்தார். (த-5)

## நல்லிணக்கப்

பயணம் மேற்கொள்ளவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அமைதிக்கான அமெரிக்க நிறுவனம் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அதிலும் அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்கவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில், முன்னேற்றகரமான நல்லிணக்கத்தை எவ்வாறு ஆரம்பிப்பது, போருக்குப் பிந்திய முன்னேற்றங்கள், வலுவான ஜனநாயக நிறுவனங்களை உருவாக்குதல் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்கள் உள்ளிட்ட இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதற்கு எடுக்கப் படும் நடவடிக்கைகள் குறித்தும் மங்கள சமரவீர விளக்கமளிப்பார். கருத்தரங்கைத் தொடர்ந்து, கேள்வி பதில் நிகழ்வும் இடம்பெறும்.

இதில் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வாலும் பங்கேற்கவுள்ளார். (த-5)

## காற்றுக்கூட


துள்ளார்.

நிதி மோசடி தொடர்பிலான குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். வெலிக்கடைச் சிறைச்சாலை யில், யோசித தடுத்து வைக்கப்பட்டுள்ள பகுதி பாதுகாப்புப் பிரதேசமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரக் கதிரையிலிருந்து என்னைக் காப்பாற்றினாலும், எதிர்வரும் நாள்களில் பெரும்பாலானவர்கள் மின்சாரக்கதிரைக்குச்செல்லவேண்டி ஏற்படும். இவ்வாறு மின்சாரக் கதிரைக்குச் செல்லவுள்ளவர்களையும் காப்பாற்ற அரசு செயற்படவேண்டும் என்பதோடு, கண் மூக்குத் தெரியாமல் முன்னெடுக்கப்பட்டு வரும் பழிவாங்கல்களையும் நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறைச்சாலையில் காற்றுக்கூட புக முடியாத விசேட அறையில் எனது மகன் அடைக்கப்பட் டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து உறுப்பினர்களை நீக்கினால், அவர்கள் புதிதாக ஒரு கட்சியை உருவாக்குவது உறுதியானது. இதனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தான் பாதிப்பு ஏற்படும் - என்றார். (த-5)



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** போட்டி பந்தயத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரம், தாமதகதியில் இயங்கும். மிதமான பணவரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் சங்கடங்கள் வரும். போராடி வெல்லும் நாள்.

**இடபம்:** புதியவர்களின் அறிமுகமும் உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், மூலதனத்தை அதிகப்படுத்தி இலாபம் காண்பீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மாணவர்கள், ஆர்வத்துடன் படிப்பர்..

**மிதுனம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில், தடை குறுக்கிடலாம். இலாபம் சுமார். பெண்கள், சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.

**கடகம்:** புதிய அனுபவத்தை கற்றுக்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை அணிகலன் வாங்க யோகமுண்டு. மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**சிங்கம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், அதிக வருமானம் கிடைக்கும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** மற்றவர் மனம் அறிந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலத்துக்கு மருத்துவச் சிகிச்சை உதவும். இயந்திரப்பிரிவு பணியாளர்கள் கவனமாக இருப்பது அவசியம்.

**துலாம்:** உங்களின் பேச்சு பிறருக்கு வருத்தமளிக்கலாம். தொழிலில் வளர்ச்சி பெற, உழைப்புத் தேவைப்படும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனத்துடன் கையாளவும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**விருச்சிகம்:** இயற்கையின் அழகை ரசித்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு:** எதிரியும் நட்புப் பாராட்டுவர். பெற்றோருக்கு உரிய மரியாதை தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், இருந்த இடையூறு விலகும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் தடைநீங்கும்; இலாபம் உயரும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர். நண்பரின் குறையைப் பெரிதுபடுத்தி பேச வேண்டாம்.

**கும்பம்:** உறவினரின் பாசம் மகிழ்ச்சியளிக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள், நகை, பணத்தை இரவல் கொடுக்க வேண்டாம்; வாங்கவும் வேண்டாம். உணவு விடயத்தில் கட்டுப்பாடு தேவை.

**மீனம்:** சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். விருந்து விழாவில் ஆர்வத்துடன் பங்கேற்பீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 9 | 7 | 3 | 1 | 6 | 8 | 2 |
| 8 | 7 | 3 | 2 | 6 | 4 | 5 | 9 | 1 |
| 1 | 6 | 2 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 |
| 3 | 2 | 7 | 5 | 9 | 6 | 4 | 1 | 8 |
| 4 | 1 | 8 | 3 | 2 | 7 | 9 | 6 | 5 |
| 9 | 5 | 6 | 4 | 1 | 8 | 2 | 3 | 7 |
| 7 | 9 | 5 | 6 | 8 | 3 | 1 | 2 | 4 |
| 6 | 8 | 4 | 1 | 7 | 2 | 3 | 5 | 9 |
| 2 | 3 | 1 | 9 | 4 | 5 | 8 | 7 | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | | 1 |
| | | | | 2 | | | | |
| | | 4 | | | 5 | 8 | 9 | |
| | | | | | 7 | | 5 | |
| | 6 | | | | | | 4 | |
| | | 5 | 9 | | 3 | | | 7 |
| | | 9 | 5 | | | | 7 | 8 |
| | 7 | | | 4 | | | | |
| 5 | 4 | 1 | | | | 3 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தைஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கின்றனர்). [illegible] 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## குடாநாட்டு

டங்களிலேயே இயல்பு நிலைமைக்குத் திரும்பினர்.

யாழ். குடாநாட்டின் வான் பரப்பில் பி.ப 2.15 மணியள வில் திடீரென பேரிரைச்சலுடன் போர் விமானம் ஒன்று நுழைந்தது. அது மிகத் தாழ்வாகப் பறந்தமையினால் போர் விமானத்தின் ஒலி பேரி ரைச்சலாகக் கேட்டது. இதனால் மக் கள் பீதியடைந்தனர். சில நிமிட நேரத்திலேயே போர் விமானமும் வான் பரப்பிலிருந்து காணாமற் போனது. இதனால் மக்கள் மீளவும் இயல்பு நிலைக் குத் திரும்பினர்.

ஏழு வருடங்களின் பின்னர் யாழ். குடாநாட்டு வான் பரப்பில் போர் விமானம் பறப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்

வளைகுடாக் கடல் பகுதியில் இன்று முதல் 5 நாள்களுக்கு இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

கச்சத்தீவிலுள்ள புனித அந் தோனியார் தேவாலயத்தின் திருவிழா எதிர்வரும் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளது. இந்தத் திருவிழாவில், இந்தியாவிலிருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொள்ள வுள்ளனர்.

திருவிழாவையொட்டி பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு உட்பட்ட இராமேஸ்வரம், தனுஷ் கோடி, கச்சதீவு கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்த தமிழக கட லோரக் காவல்படையினர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

மேலும் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதிகளைச் சேர்ந்த விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் இன்று முதல் 21 ஆம் திகதி வரை தொடர்ந்து 5 நாள் களுக்கு மீன்பிடிக்கச் செல்ல இராமேஸ்வரம் அதிகாரிகள் தடை விதித்துள்ளனர். (த-5)

## யாழில்

கருத்துக்கள் பதிவு செய்யப் பட்டும் உள்ளன.

இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினர் சி.தவராசா.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

யாழ்.மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் 158 கருத் துக்கள் பதிவு செய்யப்பட்டுள் ளன. இதில் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் உள் ளடங்குகின்றனர்.

புதிய அரசமைப்பு உருவாக் கத்திற்காக மக்கள் கருத்தறியும் அமர்வு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரு கின்றது. வடக்கு மாகாணத் திற்கான அமர்வு கடந்த 5 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்ப மானது. தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டம், மன்னார் மாவட் டம், முல்லைத்தீவு மாவட்டம் என்ற அடிப்படையில் இடம் பெற்றது. இறுதியாக யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும், நேற்று செவ்வாய்க்கிழமையும் அமர்வு நடைபெற்றது.

முதல் நாளில் 49 கருத்துக் கள் பதிவு செய்யப்பட்டிருந் தன. நேற்றைய தினம் மாத் திரம் 109 கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட் டத்தில் பல்வேறு தரப்பின ரும் கலந்து கொண்டு அர சமைப்புக்கான கருத்துக் களை முன்வைத்தனர். இது வரவேற்கத்தக்கது' என்று கருத்தறியும் குழுவின் உறுப் பினர் சி.தவராசா கூறினார்.

இதேவேளை, யாழ்.மாவட் டத்தில் 158 பேரும் நாடு பூராக வும் இதுவரையில் 1400 பேரும் தமது கருத்தினை புதிய அரச மைப்பு உரு வாக்கத்திற்காக பதிவு செய்துள்ளதாக அந் தக் குழுவின் தலைவர் தெரி வித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் கருத்து வெளியிடுகையில் நாட்டில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய அரசமைப்புக் குறித்து, நாடுபூராகவும் பொதுமக் களின் கருத்தறியும் நிகழ்வு இடம்பெறுகின்றது.

இதன் பிரகாரம் இது வரைக் கும் 14 மாவட்டங்களில் இந்தக் கருத்தறியும் நிகழ்வுகள் நடை பெற்று இன்றுடன் (நேற்று) நிறைவுற்றுள்ளன. இதில் மொத்தமாக 1400 பேர் தமது கருத்துக்களைப் பதிவு செய் துள்ளனர். அதில் யாழ்.மாவட் டத்தில் மட்டும் 158 பேர் தமது கருத்துக்களைப் பதிவு செய் துள்ளனர். இதேவேளை எதிர்வரும் வாரங் களில் ஏனைய 11 மாவட்டங்களிலும் குறித்த நிகழ்வு இடம்பெறும்-என்றார். (வ-5-101)

## எனது

ஆளுநர் றெஜினோல்ட் கூரே.

நேற்று அவர், கண்டி அஸ்கிரிய மற்றும் மல் வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். இதன்போதே, வடக்கு மாகாண ஆளுநர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போரில் வெற்றி பெற்றபோதும் தமிழ் மக் களின் இதயங்கள் இன்னமும் வென் றெடுக்கப்படவில்லை. தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க வேண்டியது அவசியமானது. வடக்கு மக்கள் எனது நிய மனத்தை ஏற்றுக்கொண்டுள்ளதனால், ஆளுநராகக் கடமையாற்றுவது எனக்குச் சுலபமாக இருக்கும்-என்றார். (த-வ)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி அருளம்பலம் சோமசுந்தரம்

[ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர் - யாழ் போதனா வைத்தியசாலை]

பிறப்பு
23 . 05 . 1932



இறப்பு
14 . 02 . 2016

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இ.அ.சோமசுந்தரம் கடந்த (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - தங்கம் தம்பதியினரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர் களான செல்லையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்புமரு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் (மகேஸ்வரி) அன்புக் கணவரும் காந்தி, கஸ்தூரி, காலஞ் சென்ற காண்டீபன் மற்றும் பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பால ரஞ்சன், சிவா (கிராம அலுவலர்- J/26, புங்குடுதீவு தெற்கு), துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் சந்திரிக்கா, சீராளன், அட்சயன்,அஷ்சயா, அம்சயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்குழி மேற்கு,
கைதடி.

தகவல்: **மருமகன்**
செ.சிவா (கிராம அலுவலர் J/26)

(69317)
(12.18.20)

### இராயப்பு பெர்னாண்டோ
### (தம்பிநாயகம் மூப்பர்)



பிறப்பு
29.05.1933

இறப்பு
13.02.2016

யாழ்.மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வசிப்பிட மாகவும் கொண்ட இராயப்பு பெர்னாண்டோ (தம்பிநாயகம் - மூப்பர்) 13.02.2016 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரது இறுதி ஆராதனைகள் நடைபெறும் தினமாகிய 20.02.2016 சனிக்கிழமை மண்டைதீவு புனித பேருதுவானவர் ஆலயத்தில் முற்பகல் 6.15 மணிக்கும், மாதகல் புனித லூர்து அன்னை திருப்பதியில் பிற்பகல் 5.00 மணிக்கும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.


தகவல்:
[illegible] (மருமகன்)

(69296)(14, 18, 20)

**தொடர்பு : 0019052099371 (கனடா)**

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சண்முகலிங்கம்



உரும்பிராய் கிழக்கு ஞானவைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சண்முகலிங்கம் 15.02.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா -இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், சிவசுகிர்தமலர் (வவி), கதிரமலைநாதன் (சுவிஸ்), ஜெகநாதன் (கனடா), ரகுநாதன் (கனடா), சுசி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தா.தியாகமூர்த்தி (முன்னாள் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தர், முன்னாள் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்), சுரேந்திரா (சுவிஸ்), றஞ்சிதம் (கனடா), சுதா (கனடா), கி.கிருபா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரணவி, கனிஷ்ரா, சகீனா, ரம்யா, லாவண்யா, காருண்யன், சஹானா, பிரவீன், கிருஷ்ணா, கிருஷாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
தா.தியாகமூர்த்தி (மருமகன்) J.P
(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நல்லூர்)

**தொ.பே. 077 945 2054**

(69551) (15.18.17)

தோற்றம்
08 . 04 . 1935



மறைவு
14 . 02 . 2016

### திருமதி பரமேஸ்வரி(நேசம்மா) சுப்பிரமணியம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி- எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- வெள்ளைப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் இலட்சுமி, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் தங்கச்சிப்பிள்ளை, சின்னம்மா, சரஸ்வதி, சரவணன் ஆகியோரின் சகோதரியும் சாந்தினி, பராசக்தி, சிவா(சுவிஸ்), காலஞ்சென்ற தவேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அமுதா காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற துஸ்யந்தன் மற்றும் துவராகி (கொழும்பு), துஸ்யந்தினி(கனடா), நந்தினி( கொழும்பு), நதியா (இந்தியா),அனுசிகன், அபிஷா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
உத்தமன் சிலையடி,
ஏழாலை.

(69322)
(12.17.18.20)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 3281932, 077 225 0354**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சபாரட்ணக் குருக்கள் பாலகிருஷ்ணக் குருக்கள்



(முன்னாள் பிரதமகுரு-தெஹிவளை விஷ்ணு கோயில், பிரான்ஸ் முருகன் கோயில் ஸ்தாபகர்)

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தை சார்ந்த சபாரட்ணக் குருக்களின் மகன் பாலகிருஷ்ணக்குருக்கள் 15.02.2016 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கண்ணகை அம்மன் கோயிலடி
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
சகோதரர்கள்.
(69339) (10.17.20)

### கனகன் ரவீந்திரன்

(கண்ணன் தச்சுத் தொழிலக உரிமையாளர்)

தோற்றம் 28 . 02 . 1963



மறைவு 16 . 02 . 2016

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகன் ரவீந்திரன் நேற்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது பிறப்பிடமான நீர்வேலி தெற்கில் இன்று (17.02.2016) புதன்கிழமை நடைபெற்று முற்பகல் 10.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(69299) (15.18.20)

தகவல்:
குடும்பத்தினர்.

### வேலாயுதம் குமாரவேல்



கருகம்பனை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாக வும் 262, கோவில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதம் குமாரவேல் நேற்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-தையல்நாயகி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தவனம்-மாமாங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுகுணாதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை-யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், கோபிகா (யாழ்.பிரதேச செயலகம்) துளசி (லண்டன்) வேல்முரு கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேகரூபன் (உள் ளக கணக்காய்வாளர்-கொழும்பு) சஞ்சயன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், பகவன், நிலவன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான யாழ்மொழிநாயகி, சிவகாமசுந்தரி, மனோன்மணி, கதிர வேல், பூரணபாக்கியம், ஆனந்தவேல் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராஜா தண்டிகை, சிவசம்பு, திருச்சிற்றம்பலம், சங்கர் மற்றும் பத்மாவதி, சேதுகாவலர், சற்குணாதேவி, இராசநாதன், காலஞ்சென்ற வர்களான சிவபாலன், பாஸ்கரன், சிவநாதன் மற்றும் தவமணி, கலைவாணி, சந்திராதேவி ரெலிசியா ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

262, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(69338) (10.17.20)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி அன்னபூரணம் சண்முகம்

(ஓய்வு நிலை ஆசிரியை - யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்)




உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அன்னபூரணம் சண்முகம் கடந்த 14.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2016 திங்கட்கிழமை இல.25, சிதம்பரபுரம் வவுனியாவில் நடைபெற்று சிதம்பரபுரம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 516 0634
077 420 3332
(60258) (15,17,20)

தகவல்:
பொ.திருப்பதி (பெறாமகன்)
ஆசிரியர் - யா/போக்கட்டி அ.த.க பாடசாலை
எஸ்.றஜனி - வவுனியா

### செல்லத்துரை பாலச்சந்திரன் (ராணி வாகனம்)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலச்சந்திரன் (ராணி வாகனம்) நேற்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பவளரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், மாலினியின் ஆருயிர்க் கணவரும், மனோராஜ், பிரியதர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனார்த்தன் (கனடா), உதய சித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மகாதேவன் (இந்திரன்), இராமச்சந்திரன், மகேஸ்வரன், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயதாரணி, பிரார்த்தனா, ராகவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(69330) (11,17,18,20)

தகவல்:
குடும்பத்தினர்.

**076 677 6959**

### திருமதி தனலட்சுமி புஸ்பராஜா



பிறப்பு : 02.02.1948
இறப்பு: 16.02.2016

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி புஸ்பராஜா நேற்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதியரின் மகளும், செல்லையா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், புஸ்பராஜாவின் அன்பு மனைவியும், சுரேஸ்குமார் (ஜேர்மனி), சித்திரா (சுவிஸ்), சுவேந்திரா (தம்பாலை), சுசீந்திரா (ஜேர்மனி), சோபனா (பண்டத்தரிப்பு) ஆகியோரின் தாயாரும், ஜெகதா (ஜேர்மனி), தர்மலிங்கம் (சுவிஸ்), கிருபாமூர்த்தி (டோகா), செல்வகுமார் (ஜேர்மனி), சியகுமார் (டோகா) ஆகியோரின் மாமியும், மாணிக்கவாசகரின் (கொழும்பு) சகோதரியும், புவனராஜா (டென்மார்க்), பூலோகராஜா (கொழும்பு), இராஜதேவி (பிரான்ஸ்), சற்குணதேவி (கொழும்பு), தயாளகுணதேவி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனியும், சுஜேந்தன், சஜிந்தன், அஜிந்தன் (ஜேர்மனி), தர்சிகா, அபிருசா(சுவிஸ்), ஜதுயா, விதுயா, மதுஜா (தம்பாலை), லயேந், லயனுஜா, லோதுசன் (ஜேர்மனி), நதுரா, கேசிகன்(பண்டத்தரிப்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு, விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(69330)(11,17,18,20)

தகவல்: குடும்பத்தினர்.

ஜெகதா (ஜேர்மனி - 0049 6897 765145), தர்மலிங்கம் (சுவிஸ் - 0041 4427 30177), கிருபாமூர்த்தி (டோகா - 077 492 4143), செல்வகுமார் (ஜேர்மனி - 0049 3075 59386), சியகுமார்(டோகா - 077 500 1137)

## அஞ்சலி நிகழ்வு



### சிவஸ்ரீ சபாரட்ணக் குருக்கள் சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு-தெஹிவளை விஷ்ணு கோயில், பிரான்ஸ் முருகன் கோயில் ஸ்தாபகர்)

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தை சார்ந்த காலஞ்சென்றவர்களான சிவஸ்ரீ சபாரட்ணக் குருக்கள் கோமதியம்மாள் தம்பதியரின் புதல்வர் சிவஸ்ரீ பாலகிருஷ்ண குருக்கள் 16.02.2016 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு அவரது சகோதரரது இல்லத்தில் இன்று (17.02.2016) புதன்கிழமை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பிரம்மஸ்ரீ சிவஸ்ரீ சுந்தரமூர்த்தி சர்மா
"ஜெயபவனம்", பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 1579587, 021 221 2147

தகவல்:
சகோதரர்கள்.
(69339) (10.17.20)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 13.02.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது செயலக கிராம உத்தியோகத்தர்
திரு.இராசரத்தினம் - சிறிஸ்கந்தராசா
அவர்களின் தாயார்
திருமதி
**கமலாதேவி இராசரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குரும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
ஊழியர் நன்புரி சங்கம்
பிரதேச செயலகம் - ஊர்காவற்துறை
(ச/29151)
(15,17)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தர்மராசா (சொக்கன்)



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் பொன்னாலையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தர்மராசா (சொக்கன்) கடந்த 15.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும், சிவப்பிரகாசம் சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, தர்மலிங்கம், மனோரஞ்சிதம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், புஸ்பநாதனின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2016) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாலை கிழக்கு, சுழிபுரம்.
077 382 3330,
(69346)(10.17)

தகவல்:
தவமணிதேவி
(மனைவி )

### செல்லப்பா சோமசுந்தரம்

(Rtd. Chief Wagon Controller, Ceylon General Railways)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல.80, அரசடி வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சோமசுந்தரம் நேற்று (16.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சின்னத்தம்பி, பொன்னுத்துரை, பேரம்பலம், தம்பிஐயா, சிவயோகம் ஆகியோரின் சகோதரனும் இரத்தினாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் சசிகலா, ஸ்ரீஸ்கந்தராஜா, ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரியந்த, தனுஷியா, தமயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் டில்சாயினி, ருக்ஷாயினி, ஷகீர்த், ஹரிதன், சுவாதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 80, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(69544)
(15,17)

தகவல்:
சோ.ஸ்ரீஸ்கந்தராஜா
இரசாயனவியல் ஆசிரியர் -
சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.

ஆணையாளர் பரிந்துரைத் திருந்த நிலையில், அந்த ஆணைக் குழுவுக்கு மேலும் மூன்று மாதகால நீடிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார்.

இதேவேளை வழங்கப்பட்ட மூன்று மாத காலமும் தமக்குப் போதாது என்று ஆணைக் குழுவின் தலை வர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவுக்கு ஆறு மாத காலத்துக்கு ஒரு தடவை பதவி நீடிப்பு மேற்கொள்ளப் பட்டு வந்தது. வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியிருந்தது.

இந்த ஆணைக்குழுவுக்கு கிட்டத்தட்ட 19 ஆயிரம் முறைப்பாடுகள் வரையில் கிடைக் கப் பெற்றிருந்தன. கடந்த வருடம் ஜனவரி மாதம் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னரும், இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் சபையில், அதன் ஆணையாளர் சையிட் அல்ஹுசேன், பரணகமதலைமையிலான ஆணைக்குழுவைக் கலைக்க வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தார். 4 நாள் பயணமாக கடந்த 6 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த ஆணையாளர் சையிட், ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சந்தித்திருந்தார். இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தும் என்று வாக்குறுதியளித்திருந்தார்.

இவ்வாறு வாக்குறுதியளித்த ஒரு வார காலத்தினுள்ளேயே அதனை மீறும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவின் பதவிக் காலம் நேற்று முன்தினம் 15 ஆம் திகதி திங்கட்கிழமையுடன் முடிவடைந்திருந்தது. அந்த ஆணைக் குழுவுக்கு மேலும் மூன்று மாத காலம் பதவி நீடிப்பை ஜனாதிபதி மைத்திரிபால வழங்கியுள்ளார்.

இதன் மூலம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி மைத்திரிபால மீறியுள்ளார். இதேவேளை, 'விசாரணைகளை நிறைவுக் குக் கொண்டுவருவதற்கு மூன்று மாதங்கள் போதுமானது அல்ல. இருந்தாலும் இறுதி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். ஜனாதிபதியின் முடிவைச் சவாலுக்குட்படுத்த முடியாது' என்று தெரிவித்தார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம. (கு-5)

## நல்லாட்சியை

டாம். கீழே வீழ்ந்தால் மறுபடியும் எழும்ப முடியாது. அவ்வளவுதான் நான் சொல்வேன்.

இவ்வாறு அரசுக்கு எதிராகச் செயற்படும் தரப்பினருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்தார்.

மக்களுக்கு பணம் கொடுத்துச் சத்தம் போட வேண்டாம். தற்போது வீதிக்கு இறங்கி காலத்தை வீணடிக்கவும் வேண்டாம். மக்கள் வீதிக்கு இறங்கினால் நல்ல பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் வறுமை மற்றும் சுகாதாரம் தொடர்பான உலக வங்கியின் அறிக்கையொன்று நேற்று வெளியிடப்பட்டது. இந் நிகழ்வு பத்தரமுல்லையிலுள்ள அபேகம வில் இடம்பெற்றது. இதில் உரையாற்றிய போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

இந்நிகழ்வில் உலக வங்கியின் பிரதிநிதிகள், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலரும் பங்கேற்றனர்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில்,

நாட்டின் கிராமம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில்தான் பெரும்பான்மையான ஏழை மக்கள் வாழ்கின்றனர். அந்த மக்களை நாம் எப்படி முன்னோக்கிக்கொண்டு வருவது? நிவாரணம் வழங்குவது போல இவர்களுக்கு மூலதனங்களையும் வழங்க வேண்டும். அவர்களுக்கு காணி உரிமையை வழங்கவேண்டும். காணி உரிமையை வழங்கி மூலதனத்தை வழங்கி, அறிவையும் வழங்குவதனூடாக அவர்களை முன்னோக்கிக் கொண்டுவர முடியும். சந்தைகளை உருவாக்க முடியும்.

நாம் உலகுடன் போட்டி போடவேண்டும். இந்தியாவுடன் உடன்படிக்கை செய்யமுடியாது என்று மக்களுக்கு பணம் கொடுத்து இங்கு சத்தம் போடவேண்டாம். விரைவில் மக்கள் வீதிக்கு இறங்கினால் மார்ச் மாதத்தில் நல்ல பாடம் புகட்டப்படும். அப்போது இந்தப் பிரச்சினை முடிந்துவிடும்.

அதன் பின்னர் இந்தியாவுடனும், சீனாவுடனும் எல்லா இடங்களுக்கும் செல்லத் தயாராகுங்கள். தற்போது வீதிக்கு இறங்கி காலத்தை வீணடிக்க வேண்டாம். அவற்றைப் பற்றி எழுதி ஊடகங்களும் காலத்தை வீணடிக்க வேண்டாம்.

வேண்டுமானால் வாருங்கள். ஒன்றாக பயணிப்போம். நாம் இந்தப் பயணத்தை தொடர்வோம். முறியடிக்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம்.

பிரதிபலன் ஒன்றை எதிர்பார்த்துத்தான் இரு கட்சிகள் இணைந்த அரசை மக்கள் வழங்கினர். அதற்கு குழிதோண்ட வேண்டாம். கீழே வீழ்ந்தால் மறுபடியும் எழும்ப முடியாது. அவ்வளவுதான் எனக்கு சொல்லவேண்டியுள்ளது–என்றார். (கு-சி)

## மைத்திரி

சொற்போரானது யோசித ராஜபக்சவின் கைதையடுத்து உக்கிரமடைந் துள்ளது.

அரசியல் பொது மேடைகளில் இருவரும் சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுத்துவருகின்றனர். பதிலடிகளும் தொடர்ந்தவண்ணமுள்ளன.

மகிந்தவின் அமைச்சரவையில் இருந்து மைத்திரிபால சிறிசேன வெளியேறி பொது வேட்பாளராக களமிறங்கியது முதல் இருவருக்குமிடையில் சொற்போர் வெடிக்கத் தொடங்கியது. எனினும், பகிரங்கமாகவெளிப்படையாக விமர்சனம் முன்வைக்கப்படவில்லை.

முன்னாள் ஆட்சியாளர்கள் என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தி மைத்திரியும், முட்டை அப்பம் கதையைக் கூறி மகிந்தவும் நேரடியாகவின்றி மறைமுகமாகவே தாக்குதல்களை நடத்திவந்தனர்.

ஆனால், யோசித ராஜபக்ச கைதுசெய்யப்பட்டதையடுத்து மைத்திரியை முழுமையாக இலக்குவைத்து மகிந்த சொற்கணை தொடுக்க ஆரம்பித்துள்ளார். இதற்கு மைத்திரியும் அதிரடியாக பதிலடி கொடுத்து வருகின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பில் நடந்த கூட்டத்தின்போது, நான் கட்சியின் தலைவர் பதவியை தியாகம் செய்யவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி அவர் பறித்தெடுத்தார். தலைமைத்துவம் என்பது கட்சியின் பலகைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட விடயமாக இருக்கக்கூடாது என்று கடும் சீற்றத்துடன் உரையாற்றியிருந்தார் மகிந்த.

அதற்கு முன்னர் நடைபெற்ற கூட்டமொன்றின்போது, முன்னாள் ஆட்சியாளர் செய்த பாவத்தை நாம் கழுவிக்கொண்டிருக்கிறோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே மகிந்தவின் உரை அமைந்தது - என்றார்.

அத்துடன், ஐ.நா. தீர்மானத்துக்கு ஜனாதிபதியும், பிரதமரும் ஆதரவு வழங்கியுள்ளமை 1815ஆம் ஆண்டு காட்டிக்கொடுப்பு போன்றதாகும் என்றும் அண்மையில் அறிக்கையொன்றை விடுத்திருந்தார் மகிந்த. இதற்கு மறுநாளே பதிலடி கொடுத்தார் மைத்திரி. உடன்படிக்கையை முழுமையாக வாசிக்காது, முன்னாள் ஆட்சியாளர் உளறுகிறார். மின்சாரக் கதிரையிலிருந்து அவரை நாம்தான் காப்பாற்றியுள்ளோம்–என்றார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய மகிந்த, தற்போது அணு அணுவாக எனக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. உளவியல் ரீதியாக தாக்குதல் நடத்துகின்றனர். இவ்வாறு என்மீது தொடர் அழுத்தங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக மின்சார நாற்காலிக்கு அனுப்புவதே மேல் என்று கூறியிருந்தார்.

இவ்வாறு இருவருக்குமிடையில் சொற்போர் தொடர்ந்த வண்ணமுள்ளன. (கு-சி)

## யூத நினைவுத்

பார்வையிட்டார்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, தயா கமகே, மலிக் சமரவிக்கிரம மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோரும் அங்கு சென்றிருந்த னர்.

ஜேர்மனிக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்புகளை [illegible] நோக்கில் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு ஜேர்மனி சென்றிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முடபேர்ளினில் அமைந்திருக்கும் டெகல்சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு ஜனாதிபதியையும், அவரின் பாரியார் ஜயந்தி சிறிசேனவையும் ஜேர்மனி அரசின் பிரதான தலைமை மரபுச்சீர்முறை அலுவலர் ஜேர்ஹன் கிறிஸ்டியன் மெர்டென்ஸ், ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் கருணாதிலக அமுனுகம உள்ளிட்ட இலங்கைத் தூதரக அலுவலர்கள் வரவேற்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி தங்கியுள்ள ஹோட்டலில் விசேட வரவேற்பு வைபவமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜேர்மனியில் மூன்று நாள்கள் தங்கியிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜேர்மன் ஜனாதிபதி அஞ்சலா மேர்கல், சபாநாயகர் பேராசிரியர் நோபட் ஜெமன்ட் மற்றும் ஜேர்மனியின் சமஷ்டித் தலைவர் ஜோகிம் கோர்க் ஆகியோர் உள்ளிட்ட ஜேர்மனியின் முக்கிய பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார். (கு-சி)

## கண்ணீர் அஞ்சலி

எனது தந்தையார் அமரர் **பொன் ஜெயசோதி (அதிபர்)** அவர்களது சகோதரியான **மனோகரி** (புனிதா) அவர்களின் மாமியாரும் அவருடைய கணவர் **தங்கராஜா** (தங்கப்பழம் - பிரபல தொழிலதிபர்) அவர்களுடைய தாயாரான

**திருமதி குணமணி தியாகராஜா**

இயற்கையெய்தினார் அவரது ஆன்மா இறைவனுடன் இரண்டறக்கலக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன். அவரது அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

Dr.ஜெ.ஜெயலன் (சுஜீவா வைத்தியசாலை) மருத்துவப் பதிவாளர் (யாழ் நகர் மேற்கு)

**துயரைப்பகிருகின்றோம்** (69342)(15,17)
திருமதி பரமேஸ்வரி ஜெயசோதி (ஓய்வு பெற்ற கணித ஆசிரியை)
Dr.திருமதி.ச.ஜெயலன் (சுஜீவா வைத்தியசாலை)

## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ் பிரதேச செயலக கணக்கு கிளையில் கடமையாற்றும் திருமதி M. **கோபிகா** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் வேலாயுதம் குமாரவேல்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**நலன்புரி சங்கம்** (69335) (12.17.18,20)

**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

## நினைவு முத்துக்கள்

**10ஆம் ஆண்டு**



திருமதி
**இலட்சுமி சிவகுருநாதன்**

அன்னை மடியில் 13.08.1945 ஆண்டவன் அடியில் 28.02.2006
திதி:- 09.03.2016

**15ஆம் ஆண்டு**



**சிவகுருநாதன் சிவரூபன்**

அன்னை மடியில் 21.03.1978 ஆண்டவன் அடியில் 17.02.2001
திதி:- 04.03.2016


கண்ணோடையில் நீங்களிருவரும் ஊர்வலம்
கண்ணீரோடையில் நாங்களனைவரும் தவக்கோலம்...

**உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும் இனிய உறவுகள்...**

கணவர். பிள்ளைகள், மருமகள்.
அப்பா, அக்கா, அண்ணா, அண்ணி, தங்கை
இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(A/29114)(11,18)

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 12 . 1937



இறப்பு 15 . 02 . 2016

## வீரபாகு வாரித்தம்பி

மருதடி வீதி, சாவகச்சேரி வடக்கு மீசாலையினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி வீரவாகு 15.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - பொன்னம்மா தம்பதியிரின் பாசமிகு மகனும் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும் சின்னம்மா, கமலாம்பிகை காலஞ்சென்ற கதிரேசபிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும் விஜய சிறீலன் (ஜேர்மனி), விமலசிறீலன் (லண்டன்), யசோதா (கனடா), சுயாதனா, ஈழரதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தி (ஜேர்மனி)காயத்திரி (லண்டன்), மதன் (கனடா), திருக்குமார் (துபாற்கந்தோர் ஊழியர் - யாழ்ப்பாணம்), கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கர்ஷனா, வர்ஷணன், வர்ஷிகா, பகிஷா, கனிஷா, கிருசிகா, ரூபிகன், ஆர்த்தி, கவின், நிரூத்திகன், அபியா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதடி வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை. (60737) (15.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணத்தில் களமிறங்கும் வீரர்களில் ரகானே இருக்கமாட்டார் என்கிறார் டோனி

## ஆயினும் ஆசியாக் கிண்ணத்தை வைத்தே இறுதி முடிவு

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் 11 வீரர்கள் கொண்ட அணியில் ரகானே இடம்பெறுவது கடினம் என்று டோனி சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடர் மார்ச் 8ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கு இன்னும் 21 நாள்கள் மட்டுமே இருப்பதால் ஒவ்வொரு அணியின் மீதும் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் 11 வீரர்கள் கொண்ட இந்திய அணியில் ரகானே இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கிறது என்று இந்திய அணித்தலைவர் டோனி சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரைசிங் புனே சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணியின் உடை அறிமுக விழாவில் கலந்துகொண்ட டோனி தெரிவிக்கையில், ரகானே மிகவும் சீரான முறையில் ஆடி வருகிறார். ஆனால் ரி-20 ஆட்டங்களுக்கான இந்திய அணியில் அவர் 11 வீரர்கள் குழுவில் எப்போதும் இடம்பெறுவதில்லை. ஆரம்ப வீரர்களாக ரோகித், சிகர் தவான் இருவரும் சிறப்பாகச் செயற்படுகின்றனர். மூன்றாம் இடத்தில் கோக்லி உள்ளார். நான்காம் இடத்தில் ரெய்னா, ஐந்தாம் இடத்தில் யுவராஜ், ஆறாம் இடத்தில் நானும் உள்ளோம். ஏனைய இடங்களில் சகல துறை வீரர்களும் பந்துவீச்சாளர்களும் உள்ளனர்.



இலங்கைக்கு எதிரான அணியில் கோக் லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டதால் ரகானே களமிறங்கினார்.

கோக்லி அணிக்கு திரும்பியதும் ரகானே பவிலியனில் உட்கார வேண்டி வரலாம். இருப்பினும் ஆசியாக்கிண்ணத்துக்கான வீரர்களின் செயற்பாடும் கருத்தில் கொள்ளப்பட்டு ரி-20 உலகக்கிண்ணத்துக்கான அணி அறிவிக்கப்படும்' என்றார்.

டோனியின் கருத்தின்படி பார்த்தால் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை-ரோகித் சர்மா, தவான், கோக்லி, ரெய்னா, யுவராஜ், டோனி (தலைவர்), பாண்டியா, ஜடேயா, அஸ்வின், சமி, பும்ரா என்றவாறாக அமையும். மொத்தத்தில் பாண்டியா, சமி, பும்ரா என மூன்று வேகங்களுடனும், அஸ்வின், யுவராஜ், ஜடேயா என மூன்று சுழல்களுடனும் இந்திய அணி களமிறங்கும்.

ரெய்னாவும் பந்துவீசக்கூடியவர் என்பதால் இந்திய அணி ஏழு பந்துவீச்சாளர்களைக் கொண்டுள்ளது.

சமி, பும்ரா இருவரையும் தவிர ஏனையவர்கள் துடுப்பாட்டமும் செய்யக்கூடியவர்கள். எனவே ஆசியாக் கிண்ணத் தொடரில் யுவராஜ் தடுமாறினால் அவர் அணியில் இருந்து தூக்கப்பட்டு ரகானே உலகக்கிண்ணத் தொடரில் களமிறங்கும் நிலை மையும் ஏற்படும்.

யுவராஜிக்கு பதிலாக ரகேனேயைக் கொண்டு வந்தாலும் இந்திய அணியில் சமநிலை பேணப்படும். (ம)

## ரெய்லர் விலகல்



ஆஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலிருந்து காயம் காரணமாக நியூசிலாந்தின் நட்சத்திர வீரர் ரெய்லர் விலகியுள்ளார்.

இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் வெலிங்டனில் நடந்த முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 20ஆம் திகதி கிறைஸ்ட்சேர்ச்சில் ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்திலிருந்து காயம் காரணமாக நியூசிலாந்து அணியின் நட்சத்திர வீரர் றொஸ் ரெய்லர் விளையாடவில்லை. மிச்சேல் சான்ட் நெரும் ஆடவில்லை. இருவரும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவார்கள் என்று நியூசிலாந்து அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த டெஸ்ட் ஆட்டத்துடன் நியூசிலாந்து அணித் தலைவர் மக்கலம் சர்வதேசகிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார். அவரது கடைசி டெஸ்டில் நியூசிலாந்து அணி வெற்றி பெறுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசி ஒருநாள் ஆட்டத்தில் அவர் வெற்றியுடன் விடைபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## சுவாரஸின் விறுவிறுப்பான ஆட்டத்தில் வீழ்ந்தது செல்ற்றா டி விகோ கழகம்

லா லிகா தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

பார்சிலோனா, செல்ற்றா டி விகோ அணிகள் மோதியிருந்த இந்த ஆட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே பார்சிலோனாவின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி முதல்கோலைப் பதிவுசெய்து கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். மேலதிகமாக எந்தக்கோல்களும் பதியப்படாத நிலையில் முதல்பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் சுவாரஸின் ஆட்டத்தில் அனல் பறந்தது.

அவர் 59ஆவது, 75ஆவது, 81ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களை விளாசினார். 84ஆவது நிமிடத்தில் இவான் ரக்டிக் ஓர் கோலினையும் இறுதி நிமிடத்தில் நெய்மர் ஓர் கோலையும் பெற முடிவில் 6:1 என்று செல்ற்றாவை வீழ்த்தியது பார்சிலோனா.

செல்ற்றா டி விகோ சார்பாக பெறப்பட்ட கோலை கூய்டெட்டி பதிவுசெய்தார். இந்த ஆட்டத்தில் பெற்றவெற்றியின் மூலம் 57 புள்ளிகளைப் பெற்றுள்ள பார்சிலோனா, லா லிகா தொடரில் புள்ளிகள் தரவரிசையில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. (ம)

## ஒப்பந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்தது; பலமான தீவுகள் களமிறங்குவது உறுதி

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்காக அறிவிக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், அந்த நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையிலான ஊதிய ஒப்பந்தப் பிரச்சினை முடிவுக்குவந்துள்ளதுடன் அறிவிக்கப்பட்ட அணியே களமி றங்கவுள்ளது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் வருகிற மார்ச் 8ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. அணி அறிவிக்கப்பட்ட சில நாள்களிலேயே வீரர்களுக்கான ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையும் எழுந்தது. வீரர்கள் தமக்கு மேற்கிந்தியத் தீவு களின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்த ஊதியம் மற்றும் பரிசுத் தொகை போதாது என்று போர்க்கொடி தூக்கினார்கள். தங்களுக்கு ஊதியத்தை உயர்த்தி தராவிட்டால் உலகக்கிண்ணத்தைப் புறக்கணிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்திருந்தனர். தாங்கள் அறிவித்த ஊதியத்தை ஏற்று வீரர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்து இடாவிட்டால் இரண்டாம் தர அணி தெரிவு செய்யப்படும் என கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சார்பாக தெரிவிக்கப்பட்டது. இந்த பிரச்சினையில் இரு தரப்புக்கும் இடையே சுமுக முடிவு ஏற்படாமல் இழுபறி நீடித்தது. ஆனால் ஊதியத்தை அதிகமாக வழங்குவதாக கட்டுப்பாட்டுச்சபை அறிவித்ததையடுத்து வீரர்கள் அதில் ஒப்பந்த மிட்டுள்ளனர். இதனால் அறிவிக்கப்பட்ட பலமான அணி களமிறங்கவுள்ளது.

ஆனால் நரைன், பொலார்ட், டேரன் பிராவோ தொடரில் இருந்து விலகியுள்ளனர். நரைன் தனது பந்துவீச்சை மாற்றியமைக்காத காரணத்தினாலும், பொலார்ட் முழங்காலில் காயம் ஏற்பட்ட காரணத்தினாலும், டேரன் பிராவோ டெஸ்ட் ஆட்டங் களில் அதிக கவனம்செலுத்தவுள்ள காரணத்தினாலும் தொடர்களில் இருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளனர். நரைன், பொலார்ட் இருவருக்கும் பதிலாக நர்ஸ், பிரீத்வைட் ஆகியோர் அணியில் சேர்க் கப்பட்டுள்ளனர். டேரன் பிராவோவுக்கு மாற்று வீரர் விரைவில் அறிவிக்கப்படுவார் என்றும் மேற்கிந்திய தீவுகளின் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. (ம)



## அகமட் செசாட், ரியாஸ் சிக்கினர் அபராதத்தில்

பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடரில் நேருக்குநேர் மோதிக்கொண்ட வீரர்களான செசாட், ரியாஸ் இருவருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அபராதம் விதித்துள்ளது.

பி.எஸ்.எல். என்று அழைக்கப்படும் பாகிஸ்தான் சூப்பர் லீக் ரி-20 தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் வீரர்கள் வகாப் ரியாஸ், அகமட் செசாட் இருவரும் ஒருவரை ஒருவர் தள்ளி கடுமையான வார்த்தைகளால் மோதிக் கொண்டனர். ஆடுகளத்தில் இருவரும் மோதிய இந்த செயலால் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அதிர்ச்சி அடைந்து, இருவரையும் கடுமையாக எச்சரித்துள்ளதுடன் செசாட்டுக்கு 30 சதவீதமும், ரியாஸுக்கு 40 சதவீதமும் அபராதம் விதித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்


யாழ்ப்பாணம், பெப். 17

*யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்கிஜிரா அணியை எதிர்த்து லயன்ஸ்அணிமோதவுள்ளது.

*கரவெட்டி கால்பந்தாட்டத் தொடர்*

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான கால்ப்பந்தாட்டத் தொடரின் சில ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன. இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும், அல்வாய் மனேகரா விளையாட்டு மைதானத்திலும் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதன்படி இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளளன. அல்வாய் மனேகரா விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-108)



# ஆர்சனல் அணி அபாரமான வெற்றி ஆயினும் லெய்செஸ்டர் முன்னிலை

இங்கிலாந்து கால்பந்தாட்ட கழக அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் ஆர்சனல் அணி வெற்றிபெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் ஆர்சனலை எதிர்த்து லெய்செஸ்டர் அணி மோதியது. நடப்பு வருடத்துக்கான இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் இதுவரை இடம்பெற்ற ஆட்டங்களின் அடிப்படையில் லெய்செஸ்டர் அணி தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளது. ஆர்சனல் அணி இரண்டாம் இடத்தில் உள்ளது. இதனால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆட்டத்தின் முதல்பாதியின் முடிவில் 1:0 என்ற கணக்கில் லெய்செஸ்டர் அணியே முன்னிலை வகித்தது. இந்தக்கோலை 45ஆவது நிமிடத்தில் ஜேமி வர்டி பதிவுசெய்திருந்தார். ஆனால் இரண்டாம் பாதியில் லெய்செஸ்டரின் வியூகங்களை ஆர்சனல் தகர்த்துக்கொண்டிருந்தது. 70ஆவது நிமிடத்தில் வொல்கொடும், 88ஆவது நிமிடத்தில் டனி வெல்பெகமும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தனர். முடிவில் ஆர்சனல் 2:1 என்று வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் தனக்கும் லெய் செஸ்டர் அணிக்கும் இடையிலான புள்ளிகள் வித்தியாசத்தை ஆர்சனல் இரண்டாகக் குறைத்துள்ளது. (ம)

## கிளிநொச்சி மாவட்ட சதுரங்கத் தொடர்கள்

இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் நடப்பு வருடத்துக்கான மாவட்டமட்ட சதுரங்கத் தொடர்களில் கிளிநொச்சி மாவட்டத் தொடர் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தொடர் நடைபெறவுள்ளது. 7 வயதுப் பிரிவு, 9 வயதுப் பிரிவு, 11 வயதுப் பிரிவு, 13 வயதுப் பிரிவு, 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 20 வயதுப் பிரிவு ஆகிய வயதுப் பிரிவுகளில் தொடர் நடைபெறும். 15 வயது, 17 வயதுப் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களும், குறித்த பிரிவுகளில் பங்குபற்றும் 6 மாணவர்களுக்கு ஒரு மாணவர் என்ற வீதத்திலும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். 7 வயதுப் பிரிவு, 9 வயதுப் பிரிவு, 11 வயதுப் பிரிவு, 13 வயதுப் பிரிவுகளில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். பங்குபற்றும் மாணவர்களது பெயர் விவரம் அடங்கிய விண்ணப்பங்களை பொறுப்பாசிரியர் எதிர்வரும் 19ஆம் திகதி கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-21-422)

## புதியபாரதி, மகாதேவா அணிகள் கரைச்சி கரப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 17

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட புதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்கான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் மகாதேவா விளையாட்டுக் கழக அணியும் வெற்றிபெற்றுள்ளன.

இரணைமடு ஆதவன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் புதியபாரதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் மகாதேவா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விபுலானந்தா அணி மோதிக் கொண்டது. இதில் மகாதேவா விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச்சம்பியனானது. (ம-23)

## பத்திமா, நாரந்தனை அணிகளுக்கு வெற்றி

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் பத்திமா விளையாட்டுக்கழக அணியும் பெண்கள் பிரிவில் நாரந்தனை அண்ணா அணியும் வெற்றி பெற்றுள்ளன.

புளியங்கூடல் கரப்பந்தாட்ட திடலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் பத்திமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பத்திமா விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச்சம்பியனானது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் நாரந்தனை அண்ணா அணியும் சுருவில் ஐயனார் அணியும் மோதிக் கொண்டன. இதில் நாரந்தனை அண்ணா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச்சம்பியனானது. (ம-23)

## சென்.தோமஸ் – யாழ். மத்தி ஆட்டம் சமநிலையில் முடிவு

யாழ்ப்பாணம், பெப். 17

மாத்தளை சென்.தோமஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

மாத்தளை சென்.தோமஸ் கல்லூரியின் மைதானத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரியலக்சன் 57 ஓட்டங்களையும், கோமேதகன் 47 ஓட்டங்களையும் கிருபாகரன் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் சார்பில் பந்துல 5 இலக்குகளையும், அவநாய 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாத்தளை சென். தோமஸ் கல்லூரி அணி 109 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சில்வா 27 ஓட்டங்களையும், டில்சாந் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரியின் சார்பில் கிருபாகரன் 4 இலக்குகளையும், அலன்ராஜ் 3 இலக்குகளையும், தசோபன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து களத்தடுப்பு செய்ய தகுதியற்ற நிலையில் இரண்டாம் இன்னிங்ஸுக்காக களமிறங்கியது மாத்தளை சென். தோமஸ். இரண்டாவது இன்னிங்ஸில் அந்த அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதன்படி சகல இலக்குகளையும் இழந்து 319 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பந்துல 107 ஓட்டங்களையும், டில்சாந் 83 ஓட்டங்களையும் நிரோசன் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மத்தியகல்லூரியின் சார்பாக அலன்ராஜ் 3 இலக்குகளையும், கிருபாகரன், தசோபன் இருவரும் தலா இரண்டு இலக்குகளையும் வீழ்த்தினர்.

219 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி இரண்டாம் நாள் முடிவில் 6 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் சமநிலையானது. அதிகபட்சமாக கிருபாகரன் 53 ஓட்டங்களையும், பிரியலக்சன் 50 ஓட்டங்களையும், ஸ்ரிபன்ராஜ் 20 ஓட்டங் களையும் பெற்றனர். பந்து வீச்சில் மாத்தளை சென். தோமஸ் கல்லூரியின் சார்பில் டில்சாந் 5 இலக்கை வீழ்த்தினார். (ம-23)

## இறுதியில் வைகறை

உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதிக் கொண்டது. இதில் புதுமடம் வைகறை அணி 4:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.உயர்தர பொறியியல் தொழிநுட்பவியல்
G.C.E.A/L Engineering Technology

யாழ்ப்பாணம், வடமராட்சி,கிளிநொச்சி
பகுதிகளில் குழு, தனி வகுப்புக்கள்
ஆரம்பமாகவுள்ளன.

1. மின் இலத்திரனியல்
2. குடிசார் எந்திரவியல்
3. பொறியியல் எந்திரவியல்
4. முகாமைத்துவம்

- செய்முறை வகுப்புக்களில் கூடிய கவனம் செலுத்தப்படும்
- கடந்தகால மாதிரி வினாத்தாள் வகுப்புக்களும் இடம்பெறும்.

தொடர்பு: ஆசிரியர்: N.S. றஜீதரன்
T.P. 077 856 7983
T.P. 077 737 5336

(65930) (13.18)

# தெற்காசியக் களத்தில் பாகிஸ்தானை பின் தள்ளி வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியது இலங்கை

இந்தியாவின் சில்லாங் மற்றும் குவாத்தி நகர்களில் நடைபெற்றுவந்த 12ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. வழக்கமாக மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் இலங்கை அணி இந்த வருடம் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. பாகிஸ்தான் மூன்றாவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற போட்டிகளில் ஆண்களுக்கான குத்துச்சண்டையில் ருவான் திலான வெள்ளிப் பதக்கத்தையும், சப்ரமது வெள்ளிப்பதக்கத்தையும், திலங்க ரணசிங்க வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். பெண்களுக்கான குத்துச்சண்டையில் அனுஸ்க டில்ருக்சி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். பெண்களுக்கான ரேட்வொண்டோ போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த தர்மபிரிய வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றினார். ஆண்களுக்கான ரேட்வொண்டோ போட்டியில் கெட்டியாராச்சி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார். பதக்கப்பட்டியலில் 188 தங்கப்பதக்கங்கள், 90 வெள்ளிப்பதக்கங்கள், 30 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக 308 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. 25 தங்கப்பதக்கங்கள், 63 வெள்ளிப்பதக்கங்கள், 98 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக மொத்தம் 186 பதக்கங்களுடன் இலங்கை இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது: 12 தங்கப்பதக்கங்கள், 37 வெள்ளிப்பதக்கங்கள், 57 வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக மொத்தம் 106 பதக்கங்களுடன் பாகிஸ்தான் மூன்றாம் இடத்தில் உள்ளது. பங்களாதேஷைவிட 40 பதக்கங்களில் ஆப்கானிஸ்தான் பின்தங்கியிருந்தாலும் அதிக தங்கப் பதக்கங்களைப் பெற்றதன் அடிப்படையில் ஆப்கான் நான்காவது இடத்திலும் பங்களாதேஷ் ஐந்தாமிடத்திலும், நேபாளம் ஆறாவது இடத்திலும், மாலைதீவு ஏழாவது இடத்திலும், பூட்டான் எட்டாவது இடத்திலும் உள்ளன. (ம)




யாழ்.மறைமாவட்டத்தில்
இரக்கத்தின் யூபிலி ஆண்டு

சிறப்புத் தவக்காலத் தியானங்களும்
உடல், ஆன்மீக குணமாக்கல்
வழிபாடுகளும்

17.02.2016 முதல் 04.03.2016 வரை
இந்தியாவிலிருந்து வருகை தரும் அருட்திரு.ஆல்பேட் அடிகள்,
சகோ.சாஜி ஆகியோரால் நடத்தப்படும்.

பெப்ரவரி 22 திங்கள் (போயாதினம்) - யாழ்.மரியன்னை பேராலயம்
(காலை 8.30 மணியிலிருந்து பகல் ஒரு மணிவரை)
மறை மாவட்ட இரக்கத்தின் யூபிலி ஆண்டு யாத்திரை தினம் - எல்லாப் பங்குகளிலிருந்தும் இரக்கத்தின் தூய கதவினூடாக யாத்திரை, பாவசங்கீர்த்தனமும், திருப்பலியும், நற்கருணை ஆசீரும் - (விபரங்கள் பங்குத் தந்தையர்களூடாக அறிவிக்கப்படும்)

| | | | |
|---|---|---|---|
| பெப்ரவரி 17,18 | மாலை : மண்டைதீவு | பெப்ரவரி 27,28 | : பாலைதீவு |
| பெப்ரவரி 19 | காலை : இறைதியானஇல்லம் | பெப்ரவரி 29 | காலை : குருக்கள், துறவியர் |
| பெப்ரவரி 19,20,21 | தினமும் மாலை : மானிப்பாய் | | மாலை : இரணைமாதா நகர் |
| பெப்ரவரி 21 | ஞாயிறு காலை: இளைஞர், யுவதிகள், பாஷையூர் | மார்ச் 1 | மாலை : கரவெட்டி |
| பெப்ரவரி 23 | மாலை: ஊர்காவற்றுறை | மார்ச் 2 | மாலை: மல்லாகம்,சதாசகாய அன்னை ஆலயம் |
| பெப்ரவரி 24 | மாலை : புதுக்குடியிருப்பு | | |
| பெப்ரவரி 25 | மாலை : தாளையடி | மார்ச் 3 | மாலை: அல்லைப்பிட்டி |
| பெப்ரவரி 26 | காலை : இறைதியான இல்லம் | மார்ச் 4 | மாலை : யாழ்.மரியன்னை பேராலயம். |
| பெப்ரவரி 26 | மாலை: பாஷையூர் | | |

(காலை வழிபாடுகள் 9 மணி முதல் 12 மணிவரையும், மாலை வழிபாடுகள் 5 மணிமுதல் 8 மணிவரையும் நடைபெறும்) இறைதியானக் குழவினர்- ஆயர் இல்லம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் / உரும்பிராய் இந்துக்கல்லூரி
யாழ் / சைவத்தமிழ் வித்தியாலயம்
முன்னாள் அதிபரும் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளருமான
அப்பாத்துரை ஈஸ்வரநாதன்
அவர்களின்
முத்து விழாவையும் அகவை 60 இல் மணிவிழாவையும் காணும் நாயகனை
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலன சபையினர் உள்ளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றனர்.
சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபையினர்.
(69300) (14,18,20)



ஈர விழிகளின் நினைவுகளில்
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 10.09.1947
ஆண்டவன் அடியில் 28.02.2015

அமரர்
திருமதி தங்கரட்ணம் சற்குணராஜா
திதி: தசமி (17.02.2016)




உதிரத்தால் ஒன்றிணைந்து உள்ளத்தால் சேர்ந்திருந்து
இன்பத்தில் பங்கெடுத்து துன்பத்தில் துயர் துடைத்து
அன்பினால் அரவணைத்து ஆலமரமாய் வீற்றிருந்து
பாரினில் எமை தவிக்கவிட்டு பரமனடி சேர்ந்தாலும்

பாசமது கட்டியாண்ட எம் குடும்பத்தின் திருவிளக்கே
ஆறென ஓடும் கண்ணீர் ஆற்றிட ஆளுமின்றி
தங்கமே உனைத் தேடி தெரிந்திட வழியுமின்றி - உன்
ஆத்மாவின் ராகங்கள் இவ் அவனிதனில் நிலைத்ததம்மா

உமைப்பிரிந்து ஓராண்டு கழிந்தாலும் எம் விழிகளில் - உம்
நினைவுகளைச் சுமக்கின்றோம் நித்திரையைத் துறக்கின்றோம்.
நித்தியமான உம் புன்னகையில் எம்மையே இழந்தாலும்
நித்தமும் வாழ்கின்றீர் நிலையான எம் நெஞ்சில்

பல்லாண்டு கழிந்தாலும் உதிராது உம் நினைவு
மறையாது உங்கள் உருவம் நித்தம் - நித்தம்
தவறாது உதிப்பீர்கள் எம் மனதின் தெய்வமாக - நாம்
மறவாது பிரார்த்திப்போம் உமது ஆத்ம சாந்திக்கே

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்
சந்தையடி,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.
(69329) (10.17.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.